Registered as a News Paper in Sri Lanka
பக்கம் 24 ரூபா 16/50
தினமுரசு வாரமலர்
ஆக.22-28, 2004

# வாரமலர்
# தினமுரசு


...ASU NATIONAL TAMIL WEEKLY முரசு 576



## பாதுகாப்பு பலவீனம் சமாளிக்குமா அரசு?

## வசூல் ராஜா M.B.B.S

## 2004 ஒலிம்பிக் தகவல்கள்







## பணிப்பெண்களின் அவலங்கள்

## எதிர்பாருங்கள் 'உளவாளிகள்' புதிய தொடர்

## ஆன்மாவின் தன்மை


ஆலம் விதையில், படர்ந்து வளரும் மரத்துக்குள்ள அத்தனையும் அடங்கி இருத்தல் போல, ஆன்மாவின் பாசங்களும் பாச நீக்கத்திற்குரிய தன்மைகளும் அடங்கி இருக்கின்றன. ஆன்மாவில் சிவனும் சிவனில் ஆன்மாவும் விரிவின்றிக் கலந்திருத்தலை உணர்ந்தவர்கள் அவனது வியாபகத்தை உணர்வார்கள். ஒப்பற்ற இறைவன் எங்கும் நிறைந்து எல்லாப் பொருட்களையும் இயக்குகிறான்.

அணுவுள் அவனும் அவனுள் அணுவுங்
கணுவற நின்ற கலக்க துணரார்
இணையிலி யீச னவனெங்கு மாகித்
தணிவற நின்றான் சராசரந் தானே.
-திருமந்திரம் 2010

ஆன்மா தான் செய்யும் தவத்தின் தன்மைக்கேற்பவே இறைவனை அடைய முடியும். குருவுபதேசத்தால் இப் பிறவியில் யோக சித்தி உண்டாகும்.

- எஸ். அகிலா, 1 ஆம் பிரிவு, மண்டூர்.

## ஆன்மீகம்



### இறைவன் ஒருவரே தீர்ப்பளிக்க உரிமையுள்ளவர்

சகோதர, சகோதரிகளே! உங்களில் ஒருவர் மற்றவரைப் பழித்துரைக்க வேண்டாம். தம் சகோதர சகோதரிகளைப் பழித்துரைப்போர் அல்லது அவர்களுக்குத் தீர்ப்பு அளிப்போர் திருச்சட்டத்தைப் பழித்துரைக்கின்றனர். சட்டத்துக்கு எதிராக நீங்கள் தீர்ப்பு அளிக்கும்போது நீங்கள் அதைக் கடைப்பிடிப்பவராக அல்ல, மாறாக அதற்கு எதிராகத் தீர்ப்பு அளிக்கும் நடுவர்களாக ஆகின்றீர்கள். திருச் சட்டத்தைக் கொடுத்தவரும் ஒருவரே. அவரே மீட்கவும் அழிக்கவும் வல்லவர். அவ்வாறிருக்க உங்களை அடுத்திருப்பவருக்குத் தீர்ப்பளிக்க நீங்கள் யார்? (யாக்கோபு 4:11-12)

சொத்தாசையாலும் சுயநலத்தாலும் தங்களின் குற்றங்களை மூடி மறைத்து நற் பெயரும் புகழும் தேட ஆவல்கொள்ளும் சகோதர, சகோதரிகளே! உண்மையான ஒற்றுமையுடனும் சகோதர பாசத்துடனும் வாழ்ந்து மகிழ்ச்சியுற வேண்டிய நீங்கள், உங்கள் சகோதர சகோதரிகளுக்கு, அதுவும் குற்றமற்றவர்களுக்கு எதிராகத் தீர்ப்பு வழங்கும்போது நீங்கள் இறைவனின் பயங்கரத் தீர்ப்புக்கு ஆளாவது நிச்சயம்.

எனவே, கடவுளால் தேர்ந்தெடுக்கப்பட்ட சகோதர சகோதரிகளே! பரிவு, இரக்கம், நல்லெண்ணம், மனத்தாழ்மை, கனிவு, பொறுமை ஆகிய நற்பண்புகளால் உங்களை அணி செய்யுங்கள். ஒருவரை ஒருவர் பொறுத்துக்கொள்ளுங்கள். ஆண்டவர் உங்களை மன்னித்தது போல பிறர் குற்றங்களை மன்னியுங்கள். இறைவனின் நிறைவான அன்பு உங்கள் மீதும் உங்கள் சகோதர சகோதரிகள் மீதும் திகழ்வது நிச்சயம். இறைவனின் கட்டளையை அனுசரித்து வாழக் கற்றுக்கொள்ளுங்கள்.

-திருமதி. எப். செபஸ்தியாம்பிள்ளை, கட்டுகஸ்தோட்டை

## மணப் பெண்ணைப் பார்க்கலாமா?

மதீனாவின் ஆதரவாளர்களில் உள்ள ஒரு பெண்ணை ஒருவர் மணக்க விரும்பினார். அப்பொழுது அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அவரை அவர்களை நோக்கி "நீர் அந்தப் பெண்ணைப் பார்த்துவிட்டீரா?" என்று வினாவினார். அதற்கு அவர் "இல்லை" என்றான்.

அதற்கு நபி(ஸல்) அவர்கள் "நீர் சென்று அவளைப் பார்த்துக்கொள்ளும். ஏனெனில் மதீனாவின் ஆதரவாளர்களின் கண்களில் ஒரு சிறு குறை இருக்கிறது" என்று கூறினார்கள்.

அறிவிப்பு-அபூஹுரைரா (ரலி)
முஸ்லிம், நஸாயி.

"உங்களில் எவரேனும் ஒரு பெண்ணை மணமுடிக்கப் பேசிச் சென்றால் அப் பெண்ணை மணமுடிக்கக் காரணமாக இருக்கும் பொருட்டு அவளுடைய கை, கால், முகம் ஆகியவற்றைப் (பார்க்க இயலுமானால்) பார்க்கவும்" என்று அண்ணல் நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பு-ஜாபிர்(ரலி)
அபூதாவூத்.

நான் ஒரு பெண்ணை மணமுடித்துக் கொள்ளப் பேசி இருந்தேன். அப்பொழுது அண்ணல் நபி (ஸல்) அவர்கள் என்னிடம், "அந்தப் பெண்ணைப் பார்த்துக்கொள்ளும் ஏனெனில் உங்கள் இருவரிடையேயும் நட்பையும் இணக்கத்தையும் ஏற்படுத்தக் கூடும்" என்று கூறினார்.

அறிவிப்பு-முகீரா(ரலி)
திர்மித், நஸாயி.
ஆதாரம் :- திருமணத்தின் சிறப்பு நூலிலிருந்து பெற்றவை.

கே.எல்.அப்துல் றகுல், நிந்தவூர் - 06.

## கவிதைப் போட்டி இல.573

பரிசுக்குரிய கவிதை



இடம் உள்ள வரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்

### ஜனநாயகம்

இங்கு.....
ஜனநாயகம்
சட்டம்
நீதி எல்லாம்
தூக்கில் தொங்கிக்
கொண்டுதான் இருக்கிறது
துப்பாக்கிக் கரங்கள்
கோலோச்சுவதால்!
-த.நந்தலேஸ்வரன், மட்டக்களப்பு.

### தேவையில்லை

நீதியே இல்லாமல் - கண்
இமைக்கும் பொழுதில்
பல உயிர்கள்
பறிபோகும் நம் நாட்டில்
தேவையில்லை தூக்குத் தண்டனை!
-வே.கங்கேஸ்வரன், மூதூர்.

### தமிழன்தாண்டா!

இங்கு தொங்கிக்
கொண்டிருப்பவர்
மாற்றுக் கருத்துக்
கொண்டவரா?
இல்லை
கருணா அணியைச்
சேர்ந்தவரா?
அடா......
போய்யா
அழிவெதெல்லாம்
தமிழன்தாண்டா!
-சசிதா நாகேந்திரன், ஆரையம்பதி- 03.

### சந்தோஷமே....

அரசியலில் வென்றவன்
நித்தமும் மகிழ்ந்து
மரணிக்கிறான் - வாக்களித்த
உனக்குக் கிடைத்த
தூக்குத் தண்டனை
எவ்வளவோ மேல் -
நினைத்துச் சந்தோஷப்படு -
மனிதா!
-றிஷீ, சாய்ந்தமருது - 09.

### சட்டமே....!

கொலைக்
குற்றத்துக்குத்
தூக்குத்
தண்டனையென்றால்
தற்கொலைக்
குண்டுதாரியை
என்ன செய்யப்
போகிறீர்!
-சங்கம ஹிஷாம்,
திருகோணமலை.

### குறையாது அநீதிகள்......

தூக்கு மேடையில்
எத்தனை மனிதர்களைத்
தூக்கிலிட்டுக் கொன்றாலும்
குறையாது நம் நாட்டில்
நடக்கும் அநீதிகள்!
-கே.மேகசுதன், திருக்கோவில் - 02.

## கவிதைப் போட்டி இல.576



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள்.
அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 28.08.2004

கவிதைப் போட்டி இல.576
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

### இதுதான் உலகம்!

கொலை; கொள்ளை
குற்றம் புரிந்தவர்கள்
சுதந்திரமாக வெளியில்!
எதுவும் புரியாத
அப்பாவிகள் மட்டும்
தூக்கில்....!
-மனோ கோபாலன்,
ஹப்புத்தளையூர்.

### கண்திறந்து பாரேன்!

இது கொலையா?
தற்கொலையா?
அல்லது
இனந்தெரியாதோரின்
கைவரிசையா?
கண்காணிப்புக் குழுவே
கண்திறந்து பாரேன்!!
-எம்.ராமமூர்த்தி,
வெலிமடை.

### சட்டம் ஒரு இருட்டறை

குற்றவாளி தப்பித்துக் கொள்வதும்
நிரபராதி தூக்கில் இடப்படுவதும்
சட்டம் ஒரு இருட்டறையென்பதை
சான்று பகிரும் தூக்குத்தண்டனையிது.
-எம்.சி.கலீல், கல்முனை - 05.

### நம்புகிறோம்!

நம் நாட்டின் சமாதானமும்
கைகட்டி கண்கட்டி தூக்கிலிடப்பட்டு
ரொம்ப நாளாகிவிட்டது.
உயிர் மட்டும்
இன்னும் கொஞ்சம்
இருப்பதாய்
நம்புகிறோம்.
வ.சந்திரபிரசாத், மாமாங்கம்.

### பரிசு?

ஜனநாயகத்தின் இன்றைய விதி
ஜனங்கள் வாய்திறந்தால் இப் பரிசு!
இவ்வுலகில் ஜீவிக்க விரும்பினால்
ஜாக்கிரதையாய் விலகிக்
கொள்ளுங்கள்
-சீ.தங்கவடிவேல், மட்டக்களப்பு,

## உங்கள் பக்கம்

### உவர்மலை வீதிகளின் அவலம்

திருகோணமலையில் உள்ள உவர்மலையில் சில வீதிகள் செப்பனிடப்படாமல் இருக்கின்றன. இதில் முக்கியமாக ஆளுநர் காரியாலயத்திலிருந்து வெல்கம் ஹோட்டலுக்குச் செல்லும் பிரதான வீதியிலிருந்து மேல் நோக்கிச் செல்லும் லோவர் வீதி கடந்த பல வருடங்களாகத் திருத்தப்படாத நிலையில் குண்டும் குழியுமாகக் காட்சியளிக்கிறது. இப்பகுதி மக்கள் இவ்வீதியை திருத்தும்படி வீதி திருத்தம் தொடர்பானபட்ட அதிகாரிகளுக்கும், இத் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் கடிதமூலம் தெரிவித்தும் எவ்வித பலனும் கிடைக்கவில்லை.

இப் பாதையில் மாரி காலங்களில் தண்ணீர் தேங்கிக் கிடப்பதுடன் துர்நாற்றமுமேற்படுகின்றது. அத்தோடு நுளம்பினால் மக்கள் நோய்க்களுக்கும் உள்ளாகின்றனர்.

தொடர்ந்தும் இப்பகுதி மக்கள் இப்பாதை திருத்த வேலைக்காக கடிதமெழுதி கையொப்பமிட்டு திருகோணமலை நகராட்சிமன்ற தலைவருக்கும் கையளித்தனர். மகஜரை கையேற்று சில தினங்களின்பின் குறிக்கப்பட்ட திணைக்கள அதிகாரியால் இப்பாதை திருத்தவேலைக்கான மதிப்பீடு செய்யப்பட்டு சுமார் இரண்டு வருடங்கள் கடந்தும் இதுவரைக்கும் இவ்வீதி திருத்தப்படாமல் இருப்பது கவலைக்குரியதாகும்.

இதைத் தவிர, வீதி விளக்குகள் இல்லாததாலும் மக்கள் பல கஷ்டங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது. எனவே, இப் பகுதி மக்களின் நன்மை கருதி இப் பாதையைத் திருத்துவதற்கு உரிய அதிகாரிகள் முன்வராத பட்சத்தில் இங்கு வாழும் மக்கள் குறிக்கப்பட்ட திணைக்களத்திற்கு எதிராக உண்ணாவிரதம் மேற்கொள்ளவுள்ளனர் என தெரிவிக்கின்றனர்.

- இ. மாதவராஜா,
திருகோணமலை.



### அன்புள்ள ஆசிரியருக்கு!

## வாசகர் சாலை

பத்திரிகை வாரத்துக்கு ஒன்றென்றாலும் காணாது ஏழு நாள் வாசித்து முடிப்பதற்கு. அத்தனை ஆக்கங்களை உள்ளடக்கி வாசக நெஞ்சங்களை மூழ்க வைத்து உன்னில் உள்ள முத்தான ஆக்கங்களை முத்துப் போல எடுக்க வைக்கும் திறமை உன்னை அன்றி, யாருக்குண்டு.......
பூமி ஒன்றென்றாலும் அதில் உள்ளவை - பல
உன்னிலும் உள்ளன - பல
அத்தனையும் கல்லில் செதுக்கிய - கல்வெட்டுக்கள்.

-யசோ கமில், பாரிஸ்.

### என்றென்றும் முரசுதான்!

முரசு இதழ் 569, சுமந்து வந்த.... அனைத்து அம்சங்களும் அருமையே!
அரசியல் விடயங்கள் அபாரம். "கருணாவுடன் தொடர்பில் இருக்கிறேன்" அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் நேர்காணலைப் பிரசுரித்த முரசுக்கும். நேர்கண்ட சுதர்ஷனுக்கும் பாராட்டுக்கள். ஆடைகளால் எந்த அளவு பிரச்சினைகள் ஏற்படுகின்றன என்பதை.... "அரைகுறை ஆடைகளால் அவதிப்படும் மேலைநாடுகள்" என்ற பாருக்கின் ஆக்கத்திலிருந்து அறியமுடிந்தது.
சிறுகதைகள் - மிக அருமை. தேன் கிண்ணம் கொண்டுவந்த கவிதைகள் மிக - மிக அருமை. தொடர்ந்தும் உன்சேவை எமக்கு மலர்ந்திட வாழ்த்துக்கள்.

-முஸம்மில், குவைத்.

### மலர்ந்து வா தினமுரசே!

செந்தூரப் பொட்டிட்டு
செந்தாழம் பூச்சூடி
சொந்தங்கள் கொண்டாடி
செந்தாமரை மலராய்
சுந்தரச் சுடர் வீசி
செந்தேன் சுவைபோல
மந்தமாருதம் தோய
மலர்ந்து வா தினமுரசே!

வியாழன் எப்போது
விடியுமெனக் காத்திருந்து
கியாதியாய் இருக்கின்ற
தினமுரசை நாம் தேடி
தியாகி அற்புதனை
தினம் மனம் எண்ண
தினமுரசைப்
புரட்டுகிறோம்
தலை நிமிர்ந்து
நிற்கின்றோம்!

அற்புதன் தந்த
அட்சய பாத்திரம்

அற்புதம் அற்புதம்
அதற்கு ஈடேயில்லை
விற்பனையில் கூட
வியப்பான சாதனை
அற்புதன் தந்த
அட்சய பாத்திரம்.

அசத்துகிறாய்
உச்சியில்
நிசமாகவே வியாழனில்
திசையெல்லாம்
உன்வரவில்
உசார் நிலையில்
வாசகர்
உச்சிகுளிர உயர்வாக
மெச்சியே
வாழ்த்துகிறோம்
இச்சையுடன் உன்னை
இறுகப் பற்றுகிறோம்!!!

-கயல்வண்ணன்,
வவுனியா.

உண்மையைத் தரும் உன்ன முரசே! ஜூலை 18-24 வரையான மலர் கிடைக்கப் பெற்றேன். பெரும் மகிழ்ச்சி. அமைச்சர் டக்ளஸ் மீதான தற்கொலைத் தாக்குதல் முயற்சி பற்றிய உண்மையான விரிவான செய்தியை அறிந்துகொண்டோம். தகவல் பெட்டியில் கருக்கலைப்பு செய்வோர் கவனத்திற்கு...... மக்களுக்குத் தேவையான விடயம் ஒன்றுதான். இன்னும் சிறப்புப் பெற எனது வாழ்த்துக்கள்.

- ஆறுமுகம் சந்திரமோகன்,
நியூ பீக்கொக், மேல்பிரிவு, புஸ்ஸலாவ.


மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: -011 4-514282
தொலை நகல் (Fax):-011 4-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@sltnet.lk

# அரசியல் கொலைகளின் எதிரொலி; சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட அரசு நடவடிக்கை

கடந்த முப்பது மாத காலப் பகுதிக்குள் மாற்றுக் கருத்துக்கள் கொண்ட 114 பேரை படுகொலை செய்திருக்கும் புலிகளின் அடாவடித்தனத்தைக் கட்டுப்படுத்துவதற்குக் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று பல மனித உரிமை இயக்கங்களும் அரசியல், சமூக அமைப்புகளும் அரசுக்கு அழுத்தம் கொடுத்து வருகின்றன. 2002ஆம் ஆண்டு பெப்ரவரியில் ஐக்கிய தேசிய முன்னணி அரசுக்கும் புலிகளுக்குமிடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின்னர் 24 முக்கிய அரசியல்வாதிகள் உட்பட 114 பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் கடந்த 16ஆம் திகதி கொழும்பு, பாமன்கடையில் சுட்டுக் கொல்லப்பட்ட ஈ.பி.டி.பி.யின் ஊடகச் செயலாளர் பாலநடராஜ ஐயரின் படுகொலை பற்றி தேசிய ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் பலத்த கண்டனங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளதோடு, அரசியல் பன்மைத்துவத்துக்கு மதிப்பளிக்காமல் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டுவரும் புலிகளின் கொலைக் குழுக்களைக் கட்டுப்படுத்த வேண்டுமென்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அண்மைக் காலங்களில் அரசியல் படுகொலைகள் அதிகரித்து வருவது குறித்தும் உள் முரண்பாடுகளைச் சமாதான வழிமுறையில் புலிகளால் தீர்த்துக்கொள்ள முடியாமை குறித்தும் அச்சமும் கவலையும் தெரிவிப்பதாக ஐரோப்பிய யூனியன் விடுத்துள்ள கண்டன அறிக்கையில் தெரிவித்துள்ளது. இலங்கை அரசுக்கும் புலிகளுக்குமிடையில் யுத்த நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின்னர், தொடர்ச்சியான பல கொலைகள், கொலை முயற்சிகள், ஆட்கடத்தல்கள் நிகழ்ந்துள்ளன. ஜூலையில் தற்கொலைத் தாக்குதலும் கொழும்பில் அரசியல் எதிரிகளின் கொலைகளும் வடக்கிலும்-கிழக்கிலும் மிலேச்சத்தனமான படுகொலைகளும் இலங்கைக்கும் சர்வதேச சமூகத்துக்கும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளன. பேச்சுவார்த்தை மேசைக்கு மீண்டும் திரும்புவதன் மூலம் நிரந்தர சமாதானத் தீர்வுக்கான இலங்கை மக்களின் விருப்பையும் அபிலாசைகளையும் முன்னிலைப்படுத்துமாறு புலிகளையும் இலங்கை அரசாங்கத்தையும் ஐரோப்பிய யூனியன் வற்புறுத்துவதோடு, கடந்த வருடம் ஏப்ரல் மாதம் புலிகளால் இடைநிறுத்தப்பட்ட சமாதானப் பேச்சுக்களை மீண்டும் விரைவாக ஆரம்பிக்குமாறு புலிகளைக் கோருகிறோம் என்றும் அந்த அறிக்கை கூறுகிறது. இதற்கிடையில் பாலநடராஜ ஐயரின் கொலை குறித்து பி.பி.சி. தமிழோசைக்கு யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பிரதித் தலைவர் புறாவ் ஹொக்டே அளித்த பேட்டியில், இக் கொலை குறித்துப் போதிய விசாரணை நடத்துவதற்குத் தம்மிடம் போதிய அணியினர் இல்லையென்றும் தமிழ் தெரிந்தவர்களும் போதியளவு இல்லாததால் விசாரணை நடத்தாமல் சம்பந்தப்பட்டவர்கள் மீது குற்றம் சுமத்த முடியவில்லையென்றும் முதல் தடவையாக நிலைமையை ஒப்புக்கொண்டுள்ளார். இதேவேளை கொழும்பிலும் கிழக்கிலும் தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் அரசியல் படுகொலைகளைத் தடுத்து நிறுத்த அரசு ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் அப்பாவித் தமிழ் மக்களின் நலன்களுக்குப் பங்கம் ஏற்படாமல் தலைநகரில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட வேண்டுமென்றும் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இப் படுகொலை குறித்து அரசாங்க தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில், இக் கொலைகளின் தன்மையையும் குறிவைக்கப்பட்டவர்களையும் பார்க்கையில், புலிகளே இச் சம்பவங்களில் சம்பந்தப்பட்டுள்ளனரென்பதைக் காட்டுகிறது. யுத்த நிறுத்தத்துக்கு மதிப்பளிக்காமலும் சமாதானச் சூழலைக் கட்டியெழுப்புவதற்கான உணர்வுகளுக்கு முரணாகவும் இச் சம்பவங்கள் இடம்பெறுகின்றன என்று கவலை தெரிவித்துள்ளது. சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநிறுத்துவதற்கு அரசாங்கம் உறுதியாகவும் நியாயமாகவும் தனது அதிகாரத்தைப் பயன்படுத்துமென்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தூதுவர்களுடன் சந்திப்பு

ஜேர்மனியின் இலங்கைக்கான தூதுவர் ஜேர்கன் எலியாஸ் ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா அவர்களை நேரில் சந்தித்துப் பேசினார். அமைச்சரின் வாசஸ்தலத்தில் 12ஆம் திகதி காலை இச் சந்திப்பு இடம் பெற்றது.

தற்போதைய நிலைமைகள் குறித்து அமைச்சர் விரிவாக எடுத்துரைத்தார். புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்டதன் பின்னர், புலிகளால் மேற்கொள்ளப்படும் நிதி வசூலிப்புக்கள் மற்றும் கெடுபிடிகள், அச்சுறுத்தல்கள், பொது மக்கள் அன்றாடம் அனுபவிக்கும் அவலங்கள் குறித்தும் விரிவாக எடுத்து விளக்கினார். தொடருகின்ற படுகொலைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டிய அவசிய அவசர தேவை குறித்தும் வடக்கு-கிழக்கு இடைக்கால நிர்வாகம் ஏற்படுவது தொடர்பில் கட்சியின் நிலைப்பாடு குறித்தும் விரிவாக எடுத்துரைக்கப்பட்டது.

கனேடியத் தூதுவர் வலரி ரேமண்ட் அவர்களைப் 12ஆம் திகதியும் பிரிட்டிஷ் தூதுவர் ஸ்டீபன் எவான்சை 13ஆம் திகதியும் சந்தித்து நடத்திய பேச்சுவார்த்தையின்போது மேற்கண்ட விடயங்களை விளக்கினார்.

## பாலாவின் மரணத்துக்கு அஞ்சலிகள்

**தினமுரசு ஆசிரிய பீடத்தில் முக்கியமான காலகட்டத்தின்போது துணிச்சலுடன் காத்திரமான பங்காற்றி நேர்மையையும் மக்களுக்கான அர்ப்பண சேவையையும் வெளிப்படுத்திய தோழர் பாலநடராஜ ஐயரின் மறைவுக்கு தினமுரசு ஆசிரிய பீடத்தினர் தமது அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.**

## இடைக்கால நிர்வாகம் பற்றி
## 25 சதவீதமே பேச வேண்டியுள்ளது

இடைக்கால நிர்வாகத்தை நிறுவுவது தொடர்பான பேச்சுவார்த்தையைத் தொடர அரசாங்கம் முன்வந்திருந்தது. இதற்கான வழிமுறைகளில் 75 சதவீதமானவற்றை நாம் எட்டியிருந்தோம். ஏனைய 25 சதவீதத்தோடு இணங்கி வரப் புலிகள் விரும்பவில்லை. இந்த 25 சதவீதத்துக்கும் இணங்கி வர அவர்களைத் தூண்ட முடியுமென நாம் நம்புகிறோம். ஏனெனில் நாம் 75 சதவீதமான - விடயங்களைக் கையாண்டுள்ளோம் என்று ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க "யுனைற்றட் பிரஸ் இன்ரநசனல்" என்ற செய்தி நிறுவனத்துக்குக் கடந்த வாரம் அளித்த பேட்டியில் குறிப்பிட்டிருந்தார். இடைக்கால நிர்வாகத்தில் இடமளிக்கப்படுமென்று புலிகளுக்கு அரசாங்கம் சுட்டிக்காட்டியிருந்தது. இறுதித் தீர்வு பற்றி நாம் அமர்ந்து பேச வேண்டும் என்றும் ஜனாதிபதி கூறினார். இல்லை. நாம் இறுதித் தீர்வு பற்றிப் பேசத் தயாரில்லை. இடைக்காலத் தீர்வு பற்றி மட்டுமே பேசுவோம். நீங்கள் அது பற்றிப் பேசிக் கையெழுத்திட்டு அதனை நிறுவுங்கள். இடைக்கால நிர்வாகம் நிறுவி முடிந்த பின்னர் அது செயற்படும்போது இறுதித் தீர்வு பற்றிப் பேசுவோம் என்று புலிகள் தெரிவித்தனர். எந்தவொரு அரசாங்கமாவது இதற்கு இணக்கம் தெரிவிக்குமானால் அது கேலிக்கூத்தாகிவிடும் என்று நாம் கூறினோம் என்றார் ஜனபாதிபதி.

## நோர்வேயைச் சாடுகிறார் கருணா அம்மான்

மட்டக்களப்பு - அம்பாறைப் பகுதியிலிருந்த எமது அணியினர் மீது தாக்குதல் நடத்துவதற்கு வன்னியிலிருந்து ஆயுதபாணியான புலிகளை அனுப்புவதற்குப் பிரபாகரன் தயாராகிறாரென்று எனக்கு எமது புலனாய்வு வட்டாரங்களிலிருந்து தகவல் கிடைத்ததுமே இது குறித்து இலங்கை, நோர்வே அரசாங்கங்களுக்கும் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கும் அறிவித்தேன். நோர்வே அரசாங்கம் வேண்டுமென்றே எனது அறிவிப்பைத் தட்டிக்கழித்ததோடு, எனது புகாரைக் கவனத்திலெடுக்க வேண்டாமென்று ஸ்கெண்டிநேவிய யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கும் உத்தரவிட்டது என்று புலிக்ளின் முன்னாள் மட்டு-அம்பாறை மாவட்ட முக்கியஸ்தரான கருணா அம்மான் கடந்த வாரம் "ஆசியன் ட்ரிபியூன்" என்ற இணையத்தளத்துக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார். கடந்த ஏப்ரல் மாதம் ஒன்பதாம் திகதி, பிரபா அணிப் புலிகள் நடத்திய தாக்குதல் பற்றிக் குறிப்பிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு சொன்னார்.

மட்டக்களப்புக்கு வடக்கே 78 கிலோ மீற்றர்கள் அப்பாலுள்ள வெருகல் ஆற்றைக் கடந்து தாக்குதல் நடத்தப் பெருந் தொகையான ஆயுததாரிகளை எப்படிப் பிரபாகரனால் வன்னியிலிருந்து அனுப்பி வைக்க முடிந்தது என்று 'ஆசியன் ட்ரிபியூன்' எழுப்பிய கேள்விக்கு அவர் இவ்வாறு பதிலளித்தார்.

நோர்வே அரசாங்கத்தின் உதவி, ஒத்தாசையுடனேயே பிரபாகரன் பெருந் தொகையான ஆயுததாரிகளை சக்தி மிக்க ஆயுதங்களோடு வன்னியிலிருந்து எம்மைத் தாக்குவதற்கென அனுப்பிவைத்தார். இது எப்படி நடைபெற்றது என்பது இன்னமும் மர்மமாகவே உள்ளது. அரசாங்கத்தின் உதவி, ஒத்தாசையின்றி பிரபாகரனால் தாக்குதலை நடத்தியிருக்க முடியாது. இலங்கைக் கடற்படையினரின் ஒத்துழைப்பு இல்லாமல் வன்னியிலிருந்து கடல் வழியாக ஆயுததாரிகளை அனுப்பி வைத்திருக்க முடியாது. இந்த ஆயுததாரிகளின் நடமாட்டத்தைக் கண்டும் காணாத மாதிரி விட்டுவிடுமாறு யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருக்கும் அறிவுறுத்தப்பட்டிருந்தது. வன்னியிலிருந்து வாகரைக்குக் கடல்வழியாக ஆயுததாரிகளின் பயணம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இதற்காகப் பெருந் தொகைப் பணம் கைமாறியிருக்கலாமென்று நாம் சந்தேகிக்கிறோம். பிரபாகரனின் ஆயுத அணி பெருந் தொகையான ஆயுதங்களோடு இராணுவக் கட்டுபாடற்ற பகுதியிலிருந்து இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு செல்வதென்பது யுத்த நிறுத்த ஒப்பந்தத்துக்கு முரணானது என்று நான் சுட்டிக்காட்டினேன். வன்னியில் தங்கியிருந்த ஜெயந்தன் படையணியைச் சேர்ந்த 600 பேரை பிரபாகரன் எம்மைத் தாக்குவதற்கென ஆரம்பத்தில் அனுப்பியிருந்தார். இவர்கள் அனைவருமே மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள். ஜெயந்தன் படையணியில் என்னால் சேர்த்துக்கொள்ளப் பட்டவர்கள். சகோதரப் படுகொலைகளைப் புரிவதற்கு ஜெயந்தன் படையணியை அனுப்பியதன் மூலம் மட்டக்களப்பு அம்பாறைப் பகுதிகளைச் சேர்ந்த போராளிகளைக் கொல்வதே பிரபாகரனின் திட்டமாம். வன்னியிலிருந்து வந்திருந்த ஜெயந்தன் படையணியைச் சேர்ந்த 600 பேரையும் என்னோடிருந்த ஆறாயிரம் போராளிகளையும் பாதுகாக்க விரும்பியே நான் மோதலைத் தவிர்த்துக்கொண்டேன் என்றும் கருணா அம்மான் குறிப்பிட்டார்.

## இரத்தினபுரிக்கு உதவி

(இரத்தினபுரி நிருபர்)

இரத்தினபுரி தொலஸ்வல பாரதி தமிழ் வித்தியாலயத்துக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா 50 ஆயிரம் ரூபா நிதியினை ஒதுக்கீடு செய்துள்ளார். மேற்படி வித்தியாலயத்தில் அமைக்கப்பட்டு வரும் ஆலய மண்டப நிர்மாண வேலைகளுக்கான காசோலை அண்மையில் கையளிக்கப் பட்டது.

## சடலங்களிலும் சங்கிலிப் பிணைப்பு

மட்டக்களப்பு-கொழும்பு வீதி கிரான் பகுதியில் தலைளில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் கைகள், கண்கள் கட்டப்பட்டு கால்கள், சங்கிலியால் பிணைக்கப்பட்ட நிலையில் இளைஞர்கள் இருவரது சடலங்கள் கண்டு பிடிக்கப்பட்டன.

கடந்த 13ஆம் திகதி கண்டெடுக்கப்பட்ட இந்தச் சடலங்கள் கிரான் பகுதியைச் சேர்ந்த யோகராஜா பிரசாந்த் (17வயது) செல்வரத்தினம் சுதர்ஷன் (வயது 18) என அடையாளம் காணப்பட்டுள்ளது.

இதனிடையே 14ஆம் திகதி வாழைச்சேனையில் சுட்டுக் கொல்லப்பட்ட இளைஞனின் சடலம் வாழைச்சேனை தியாவெட்டுவான் பகுதியைச் சேர்ந்த சுநந்தன் குணராசா (வயது 23) என்பவருடையது என அடையாளம் காணப்பட்டுள்ளது.

## பெண்கள் தப்பியோட்டம்!

புலிகளின் பிடியிலிருந்த பெண்கள் நால்வர் தப்பி வந்து பொத்துவில் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளனர். தாங்கள் 1998ஆம் ஆண்டு ஜனகபுரப் பகுதியிலிருந்து புலிகளால் கடத்திச் செல்லப்பட்டதாக இவர்கள் தெரிவித்துள்ளனர்.

குளிப்பதற்காக இவர்களைக் கூட்டிச் சென்ற சமயம் காவலுக்கு இருந்தவர்களைத் தாக்கிவிட்டு தாம் தப்பி வந்ததாகவும் இந்தப் பெண்கள் கூறியுள்ளனர்.

இந்தச் சம்பவம் 11ஆம் திகதி இடம்பெற்றது. போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கும் இது பற்றி அறிவிக்கப்பட்டுள்ளது.

## நல்லைக் கந்தன் ஆலய உற்சவத்தில்

நல்லூர் கந்தசாமி ஆலய வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு நடைபெற்ற முன்னேற்பாட்டு ஆலோசனைக் கூட்டத்தில் புலி இயக்கத்தின் சார்பாக காந்தன் என்பவர் கலந்துகொண்டார். யாழ். கைலாசபிள்ளையார் கோயிலடியிலுள்ள புலிகளின் அலுவலகத்தைச் சேர்ந்த இவர், உற்சவ காலத்தில் வர்த்தக நிலையங்கள் மற்றும் சைக்கிள் தரிப்பிடங்கள் ஆகியவற்றை நிர்வகிக்கும் பொறுப்பு தமக்கு வழங்கப்பட வேண்டுமென்று வலியுறுத்தினார்.

## வன்மையான கண்டனம்

அரசியல் படுகொலைகள் தொடர்ந்தும் இடம்பெறாமல் தடுப்பதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை இந்த நாட்டிலுள்ள மனித உரிமை அமைப்புகளும் சர்வதேச இராஜதந்திர வட்டாரங்களும் மேற்கொள்ள வேண்டுமென்று, ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் பிரசாரச் செயலாளரும் மூத்த உறுப்பினருமான பாலநடராஜ ஐயரின் படுகொலையைக் கண்டித்து மேற்படி கட்சி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது. ஈரோஸ் பாலா என அழைக்கப்படும் தோழர் கந்தசாமி ஐயர் பாலநடராஜ ஐயர் அவர்கள் கடந்த 16ஆம் திகதி கொழும்பு பாமன்கடையில் அவரது இல்லத்தின் முன்பாக புலிகளால் படுகொலை செய்யப்பட்டார்.

1972ஆம் ஆண்டு முன்னாள் மாணவர் பேரவையில் ஆரம்பித்து இன்று வரை 32 வருடங்கள் தொடர்ச்சியாக தமிழ் பேசும் மக்களுக்கான அரசியல் பணியில் தன்னை அர்ப்பணித்துச் செயற்பட்ட தேர்ச்சியும் ஞானமும் கொண்ட அரசியல் தலைவரான தோழர் பாலநடராஜ ஐயரைப் புலிகள் படுகொலை செய்ததன் மூலம், தமிழ் பேசும் மக்களுக்கான சிறந்த ஒரு அரசியல் வழிகாட்டியை அழித்தொழித்துள்ளார்கள். தொடர்ச்சியாகத் தனது தலைமைகளை இழந்து அரசியல் சூனியத்துக்குள் தள்ளப்பட்டுக்கொண்டிருக்கும் தமிழ் மக்களுக்கு இது மற்றுமோர் பேரிழப்பாகும்.

கொல்லப்படுவதற்கு முதல் நாள் மனித உரிமைகள் அவதானிப்பு பிரதிநிதிகளுடன் கலந்துரையாடியபோது, 'எமது கைகளும் கால்களும் மட்டும்தான் எமக்கு இப்போதுள்ள பாதுகாப்பு' என அவர் வினயமாகக் கூறிக்கொண்டதுதான் அவர் சுட்டிக் காட்டிய இறுதிச் செய்தி. இச் செய்தியின் பாரதூரத் தன்மைக்கு அவரே ஓர் எடுத்துக்காட்டாக ஆக்கப்பட்டுவிட்டார்.

தோழர் பாலநடராஜ ஐயரின் படுகொலையை தமிழ் மக்கள் சார்பில் செயற்படும் சகல அரசியல் அமைப்புகளும் மற்றும் இந் நாட்டின் மனித உரிமை அமைப்புக்களும் சர்வதேச இராஜதந்திர வட்டாரங்களும் கண்டிக்க முன்வர வேண்டும். அத்துடன் இத்தகைய சம்பவங்கள் தொடராதிருப்பதை உறுதிப்படுத்தும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளில் இறங்க வேண்டுமெனக் கோரிக்கை விடுக்கிறோம். யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் செயலற்ற தன்மையையும், யுத்த நிறுத்த உடன்படிக்கை அர்த்தமற்றுள்ளதையும், இத் தருணத்திலாவது அக்கறையுடன் எடுத்து நோக்கி உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டியது பேச்சுவார்த்தையின் ஏற்பாட்டாளர்களான நோர்வேயின் பொறுப்பு என்பதையும் இத் தருணத்தில் சுட்டிக் காட்ட விரும்புகின்றோம். இதேவேளை அரசாங்கம் மாற்றுக் கருத்துள்ள தமிழ் அரசியல் கட்சிகளது பாதுகாப்பை உறுதிப்படுத்த ஸ்திரமான ஏற்பாடுகளை மேற்கொள்வது அவசியம் என்பதையும் வலியுறுத்துகின்றோம்.

இவ்வாறு ஈ.பி.டி.பி.யின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழ்க் கட்சி எம்.பி.யொருவர் பற்றி
## சிங்களப் பத்திரிகை செய்தி

தமிழ்க் கட்சியொன்றைச் சேர்ந்த எம்.பி.யொருவர் கல்கிஸ்சைக் கடற்கரையோரத்தில் வாகனம் ஒன்றினுள் இளநங்கையொருவருடன் அலங்கோல மான நிலையிலிருந்தபோது பொலிஸாரிடம் சிக்கினாரென்று சிங்களப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது. கடந்த 15ஆம் திகதி இரவு இச் சம்பவம் இடம்பெற்றதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கல்கிஸ்ஸ பொலிஸ் சார்ஜன்ட் தலைமையிலான ரோந்துக் குழுவொன்று கல்கிஸ்ஸ ஹோட்டல் வீதியில் கடற்கரை அருகில் நிறுத்தப்பட்டிருந்த சந்தேகத்திற்கிடமான ஒரு மோட்டார் வண்டியைக் கண்டதாகவும், அதைப் பரிசோதிக்கும் நோக்கில் அருகில் சென்றபோது உள்ளே ஓர் ஆணும் இளம் பெண்ணும் அலங்கோலமாக இருந்ததாகவும் கூறப்படுகிறது. மேற்படி இருவரையும் விசாரணை செய்தபோது ஆண், தமிழ் அரசியல் கட்சியொன்றின் எம்.பி. என்றும் பெண் பம்பலப்பிட்டிப் பகுதியைச் சேர்ந்தவரென்றும் தெரியவந்தது.

பொலிஸார் தம்மை விசாரணை செய்தது குறித்து அதிருப்தியைத் தெரிவித்த அரசியல்வாதி, பொலிஸாரைக் கண்டித்துப் பேசியதாகவும், பொலிஸாருக்கு நல்ல பாடம் புகட்டுவதாகவும் கர்ச்சித்தாராம்.

அதே வேளை, சுயவிருப்பத்தின் மீதே தான் அரசியல்வாதியுடன் வந்ததாகப் பெண் கூறியுள்ளாரென்றும் அப் பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

## சுவிஸ் முருகன் ஆலயத் திருவிழா

சுவிஸ் சூரிச் மாநிலத்திலுள்ள அட்லீஸ்வில் முருகன் ஆலய வருடாந்த உற்சவம் இம்முறையும் கோலாகலமாக நடைபெற்று வருகிறது. எதிர்வரும் சனிக்கிழமை 21ஆம் திகதி தேர்த்திருவிழா நடைபெறவுள்ளது. தினமும் மாலை 6 மணிக்கு வில்லிசைப் புலவர் கலாபூசணம் சின்னமணி வில்லிசைக் குழுவினரின் வில்லுப்பாட்டு நிகழ்ச்சியை மக்கள் ஆர்வத்துடன் கேட்டு வருகின்றனர். கிளிநொச்சி சிறீ கனகாம்பிகை அம்பாள் தண்ணீர்ப் பந்தலில் தாகசாந்தியும் நடைபெற்று வருகிறது. சர்வதேச இந்துமதகுரு பீடாதிபதி ஐயப்பதாஸ சாம்பசிவக்குருக்கள் அவர்களின் ஆன்மீக அருளுரையும் தினமும் இடம்பெற்று வருகிறது.

# முரசம்

**ஆயுத ர கலாசாரத்தால் பலிகொள்ளப்பட்ட சீரிய சிந்தனையாளர் - பாலா!**

***அன்புள்ள உங்களுக்கு, வணக்கம்.***

**நா**ட்டில் கோலோச்சும் துப்பாக்கிகளின் இராச்சியம் பல அரிய மனிதர்களைப் பலிகொண்டதைப் போலவே, தமிழ்ச் சமூகத்துக்கெனத் தனது சிறுபராயம் தொடக்கம் இன்று வரை அயராத உழைத்துவந்த சமூக சிந்தனையாளரும், எழுத்தாளரும், தமிழரின் விடுதலைப் போராட்டத்தின் ஆரம்ப கர்த்தாக்களில் ஒருவருமான க.பாலநடராஜ ஐயரையும் பலிகொண்டுள்ளது. அவர் தனது இளம் பராயத்தை 1972களிலேயே விடுதலைப் போராட்டம் பற்றிய விழிப்புணர்ச்சி ஏற்பட்டிராத காலத்திலேயே தனது இளமை, கல்வி, குடும்பம் ஆகியவற்றையெல்லாம் துறந்து முழுமையாகத் தன்னைச் சமூகப் பணிக்கு அர்ப்பணித்தவர். இதுவரையான அவரது போராட்ட வரலாற்றில் எந்த ஒரு தனிமனிதனுக்கும் தீங்கு நினைத்து அறியாதவர். தனது கருத்துக்களை எழுத்துக்கள் மூலமும் விவாதங்கள் மூலமுமே முன்வைத்து வந்தவரேயல்லாமல் வன்முறைகளை வரித்துக்கொண்டவரல்லர். வன்முறைகள் கோலோச்சிய காலங்களிலும் நிராயுதபாணியாக சமூகத்தின் மத்தியில் நின்று செயற்பட்டவர். அவர் கொல்லப்பட்டபோதும் கூட, தனது செயல் நேர்மையை மட்டுமே தனக்கான நியாயாதிக்கமிக்க துணையாக எண்ணி, சாதாரணமாக தமிழ் சமூகத்தவரின் சூழலில் எளிமையான வாழ்க்கை வாழ்ந்தவர். மிகவும் இனிமையான சுபாவம் கொண்டவர். மூன்று சிறிய பெண்பிள்ளைகளுக்குத் தந்தையான அவர், தனது ஒரு பிள்ளையைப் பாடசாலைக்கு முச்சக்கர வண்டியில் அனுப்பிவிட்டு நின்ற தருணத்தில் வீட்டின் முன்வைத்து துப்பாக்கிதாரிகளால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். தந்தையின் இழப்பை உணரக்கூடிய பருவத்தைக் கூட எய்தாத பிள்ளையின் கண்கள் அம் மரணத்தைப் பார்த்து நின்றன. இத்தகைய ஒரு சமூகச் செயற்பாட்டாளருக்கு எமது போராட்டத்தால் வழங்கப்பட்ட பரிசு இதுவாகத்தான் உள்ளது. பாலா இன்னொருபுறத்தில் சிறந்த சிறுகதை எழுத்தாளராக, இலக்கியவாதியாக, தேர்ந்த பத்திரிகையாளருமாக விளங்கியவர். இங்கே நாம் எடுத்து நோக்க வேண்டிய விடயம் என்னவென்றால், ஆயுதத்தாலன்றி கருத்துக்களாலேயே தாம் சரியென எண்ணியவற்றைக் கூறிவந்த மனிதர்களை, எதிர்க் கருத்துக் கொண்டவர்கள் கருத்துக்களாலேயே எதிர்கொள்ள முடியாமல் போன நிலைமை, இங்கு தோன்றியுள்ள கருத்தியல் வங்குரோத்து நிலைமையையன்றி வேறு எதைக் காட்டுகிறது? கருத்துக்கள் வாய்மூடி ஆயுதங்கள் பேசும் காலம் இதுவானால், நாம் பின்னோக்கிப் பயணித்துக்கொண்டிருக்கிறோமென்றல்லவா அர்த்தம்! பாலா போன்றவர்களின் சமுதாயப் பணியை வரலாறு என்றாவது ஒருநாள் உணர்ந்து மதிக்கும். அந்தக் காலம் வரும் வரை காத்திருப்போம்!

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

*என்றென்றும் அன்புடன்,*
*ஆசிரியர்.*

## எக்ஸ்ரே ரிப்போர்ட்

நரன்

# பாதுகாப்பு பலவீனம் சமாளிக்குமா அரசு?

**நா**ட்டின் பாதுகாப்பு நிலைமை மிக மோசமான நிலையை எட்டியுள்ளதென்பது தெளிவாகத் தெரிகிறது. யுத்த நிறுத்த காலத்தில் அரசாங்கத்தின் பாதுகாப்பு ஒழுங்கமைப்பு பாரிய ஓட்டை கண்டுவிட்டது. இப்போது நிகழ்ந்தேறும் சம்பவங்கள் எவற்றையும் கட்டுப்படுத்தும் நிலைமை அரசாங்கத்தின் கைகளில் இல்லை. இதுவரை நடைபெற்ற எந்தவொரு சம்பவத்திற்கும் சூத்திரதாரிகள் யாரெனக் கண்டுபிடிக்க அவர்களால் முடியவில்லை. அவர்களை நீதியின் முன் நிறுத்தவும் முடியவில்லை. கண்டன அறிக்கை விடுவது கூட மிகவும் சிந்திக்க வேண்டிய விடயமாக ஆகியுள்ளது அவர்களுக்கு.

அரசாங்கத்தின் இந் நிலைமைக்குக் காரணம் அவர்களுக்குள்ள யுத்த நிறுத்தம் முறிவடைந்துவிடக் கூடாதென்ற அச்சமே. குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கும் நடவடிக்கையில் இறங்கினால் அது இறுதியில் எங்கு போய்ச் சேரும் என்ற அச்சம் காரணமாக அவர்களால் அது குறித்து விசாரணை ஒன்றுக்கு அப்பால் செல்ல முடியவில்லை. தம்மால் தொடர முடியாதென்று உணர்கின்ற இவ் விடயங்களைப் பாரமெடுப்பதில் அர்த்தமில்லை என்பது பொலிஸாரின் எண்ணமாக இருக்கிறது.

இதேவேளை, யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் பின் இத்தகைய விடயங்களின் பொறுப்பு யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்குப் பாரப்படுத்தப்பட்டுவிட்டதாக நாட்டின் பாதுகாப்புப் பிரிவு கருத ஆரம்பித்துவிட்டது. இதை ஒரு வகையில் தமது இக்கட்டான நிலையிலிருந்து பொறுப்பை விலக்கிக்கொள்ளக் கிடைத்த வாய்ப்பாகப் பயன்படுத்திக்கொண்டது.

ஆனால், யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவோ, தான் அமர்த்தப்பட்ட பொறுப்பை நிறைவேற்றுவதற்கான எந்தவொரு அருகதையையும் கொண்டதாகத் தெரியவில்லை. நாட்டில் தொடர்ச்சியாக நிகழ்ந்து வரும் படுகொலைச் சம்பவங்கள் தலைநகர் உட்பட அரச கட்டுப்பாட்டு பகுதிகளில் ஏற்பட்டுள்ள பாரிய அளவிலான ஊடுருவல்கள் தனிப்பட்ட பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகவே உள்ளது.

நாட்டில் இனந்தெரியாதோரால் கொல்லப்படும் சம்பவங்கள் அதிகரித்துச் செல்வதே இவர்களுக்குப் பெரும் சங்கடமான விடயமாக உள்ளது. எதையாவது யுத்த நிறுத்த மீறலெனக் கூறினால் அது யுத்தத்துக்கு வழிவகுத்துவிடும் அல்லது ஆத்திரமூட்டிவிடும் என்று மட்டுமே அவர்கள் கவலைப்படுகிறார்கள். அத்துடன், யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் தெரிவிக்கப்பட்ட யுத்த நிறுத்த மீறல்கள் பற்றிய விடயங்களில் அவர்கள் பெரும்பாலானவற்றைத் தாமாகவே கைவிட்டவர்கள் போல நடந்துகொள்கின்றனர். குறிப்பாக, பொதுமக்கள் மீதான மீறல்கள், மாற்றுத் தரப்பினர் மீதான மீறல்கள் தொடர்பாக அசிரத்தையாகவே இருக்கிறார்கள். ஆக, யுத்த நிறுத்த உடன்படிக்கையின் ஒப்பந்தக்காரர்களான புலிகள் மீதும் அரசாங்கத்தின் மீதும் மேற்கொள்ளப்படும் மீறல்களை மட்டுமே யுத்த நிறுத்த மீறல்களாகக் கருதத் தலைப்படுகிறார்கள். அத்துடன், அவர்கள் இவ்வாறான மீறல்கள் குறித்து முடிவெடுக்கும் விதமும் மிக வேடிக்கையானதாக உள்ளது. யுத்த நிறுத்த மீறல் பற்றி முறைப்பட்டால், முதலில் தமக்கு அதை யுத்தநிறுத்த மீறல்தானாவென்றே வரையறுக்க முடியாதுள்ளதாகத் தெரிவித்து விடுகிறார்கள். அடுத்து முறைப்பாடு சுமத்தப்பட்ட தரப்பிடமே "இச் சம்பவத்துக்கும் உங்களுக்கும் தொடர்புண்டா" என வினவுகிறார்கள். அவர்கள் "இல்லை" என்று பதிலளித்தால் அதை மீண்டும் முறைப்பாடு செய்தவர்களிடம் "இதற்கு அவர்கள் பொறுப்பில்லையெனத் தெரிவித்துள்ளார்கள் என்று பதிலளித்துவிட்டு தமது கடமை முடிந்ததாக ..பைலை மூடிவிடுகிறார்கள்.

ஆக, நாட்டின் பாதுகாப்பு என்பது யார் கையிலும் இல்லாத விடயமாகிவிட்டது. பாதுகாப்புத் துறையினர் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரிடம் விடயத்தைக் கைகழுவிவிட, யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரோ கை விரித்துவிட, பாதுகாப்பு இப்போது அனாதரவாகியுள்ளது.

நாட்டின் பாதுகாப்பு என்று நோக்கும்போது அது இரண்டு வகைப்படும். ஒன்று நாட்டின் புறரீதியான பாதுகாப்பு. இது நாட்டின் படைபலம், கேந்திர முக்கிய நிலையங்களின் பாதுகாப்பு, எல்லைக்காவல் பாதுகாப்பு என்பன குறித்த நிலைமையாகும். இது இப்போதுள்ள யுத்த நிறுத்த சூழலில் நேரடியான அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்படவில்லை. அதனால் இது குறித்த பிரச்சினை தற்போது எழவில்லை. ஆயினும், இவற்றிலும் மறைமுக அச்சுறுத்தல்கள் சூழ்ந்து கொண்டுதான் உள்ளன. யுத்த நிறுத்தமாக இருந்தாலும் மறுதரப்பின் படைத் தயாரிப்புகளும், ஆயுத இறக்குமதிகளும், திருகோணமலை போன்ற கேந்திர நிலையங்களைச் சூழ்ந்து அமைக்கப்பட்டு வரும் முகாம்களும் மற்றும் தலைநகரில் அரசாங்க முக்கிய நிலையங்களுக்குள்ள பாதுகாப்பு அச்சுறுத்தல்களும் அரசாங்கத்தின் புறப் பாதுகாப்புக்குக் கேள்விக் குறிகளாக எழுந்து வருகின்றன. ஆனால், யுத்தமொன்று வெடிக்கும் பட்சத்தில்தான் அரசால் அவற்றுக்கு நேரடியாக முகங் கொடுக்க நேரிடும். உடனடியான பிரச்சினையாக இவையில்லை.

ஆனால், இரண்டாவது வகையான அகரீதியான பாதுகாப்பு என்பதுதான் இப்போது பெரும் சர்ச்சைக்குரியதாக முன்னிற்கிறது. அதாவது நாட்டில் தொடர்ச்சியாக நிகழ்ந்தேறி வரும் படுகொலைச் சம்பவங்களும் தலைநகர் உட்பட அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் ஏற்பட்டுள்ள பாரிய அளவிலான ஊடுருவல்களும் உள்ளார்ந்த பாதுகாப்பு அச்சுறுத்தலாகியுள்ளது. இந்த அச்சுறுத்தல் அரசியல், ஜனநாயகம், பன்மைத்துவம், கருத்துச் சுதந்திரம் என்பவற்றுக்கு அச்சுறுத்தலாக எழுந்துள்ளது மட்டுமன்றி சட்டம், ஒழுங்குக்குச் சவாலாகவும் மாறியுள்ளது. இதேவேளை நாட்டின் மற்றொரு முக்கிய பாதுகாப்புத் துறையாகிய உளவுத்துறையைப் பெருமளவு சிதைத்துள்ளது. உளவுத்துறையின் 90 சதவீதமான தகவல் தரும் மூலங்கள் சிதைக்கப்பட்டுவிட்டதாக அத் துறையின் தலைமைப்பீட அதிகாரிகள் அண்மையில் பகிரங்கமாகவே குறை கூறியிருந்தனர். தமக்குத் தகவல் வழங்குவோரில் ஒரு பகுதியினர் கொல்லப்பட்டுவிட்டானரென்றும் இன்னொரு பகுதியினர் வெளிநாடுகளுக்குச் சென்றுவிட்டனரென்றும் இன்னுமொரு பகுதியினர் அச்சம் பாதுகாப்பின்மை ஊழியம் போதாமை ஆகியவற்றால் தகவல் தருவதை நிறுத்திவிட்டனரென்றும் தெரிவித்திருந்தனர். இவ்வாறு பகிரங்கமாகவே தமது பலவீனத்தையும் இயலாமையையும் முறைப்படுகின்ற நிலைமை இந் நாட்டின் உளவுத்துறைக்கு ஏற்பட்டிருக்கின்றதெனில் அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ள பின்னடைவை ஊகித்துக்கொள்ள முடிகிறது. இந்தப் பின்னடைவு, யுத்தமின்றியே- யுத்த நிறுத்தச் சூழலின்போதே ஏற்பட்டிருக்கிறது என்பதுத்தான் எடுத்து நோக்க வேண்டிய ஒன்று.

இப்போதுள்ள யுத்த நிறுத்தச் சூழ்நிலையில் அரசாங்கம், யுத்த நிறுத்தத்துக்குப் பங்கம் ஏற்படாமலும், மேற்கொள்ளவுள்ள பேச்சுவார்த்தைகளுக்கு தடையேற்படாமலும் மோசமாகி வரும் பாதுகாப்பு நிலைமையை எவ்வாறு சமாளிக்கப் போகிறது என்பதே இப்போதுள்ள கேள்வியாகும். தற்போது தலைநகரில் கூட பகிரங்க இடங்களிலே பட்டப் பகலிலும் படுகொலைகள் நிகழ்த்தக்கூடிய நிலைமையும், கொலையாளிகள் மிக இலகுவாகவே தப்பிச் செல்லக்கூடிய நிலைமையும் தோன்றியுள்ளது. கடந்த மாதத்திலிருந்து இவ்வாறான சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

நாட்டில் இனந்தெரியாதோரால் கொல்லப்படும் சம்பவங்கள் அதிகரித்துச் செல்வதே இவர்களுக்கும் பெரும் சங்கடமான விடயமாக உள்ளது. எதையாவது யுத்த நிறுத்த மீறலெனக் கூறினால் அது யுத்தத்துக்கு வழிவகுத்துவிடும் அல்லது ஆத்திரமூட்டிவிடும் என்று மட்டுமே அவர்கள் கவலைப்படுகிறார்கள். அத்துடன், யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் தெரிவிக்கப்பட்ட யுத்த நிறுத்த மீறல்கள் பற்றிய விடயங்களில் அவர்கள் பெரும்பாலானவற்றைத் தாமாகவே கைவிட்டவர்கள் போல நடந்துகொள்கின்றனர்.

இந்த நிலையில்தான் ஐரோப்பிய யூனியனின் தூதுக் குழுவினர் தமிழ்ச்செல்வனுடன் நிகழ்த்திய சந்திப்பின்போது இத்தகைய அரசியல் கொலைகள் பற்றித் தமது கடுமையான நிலைப்பாட்டைத் தெரிவித்திருந்தனர். இத்தகைய அரசியல் கொலைகள் பேச்சுவார்த் தைக்குப் பாரிய தடையாக அமையுமென எச்சரித்திருந் தனர். இதேவேளை சிறுவர் படை திரட்டல் குறித்தும் தமது அதிருப்தியை வெளிப்படுத்தியிருந்தனர்.

சர்வதேச சமூகத்தின் அக்கறை இந்த அரசியல் கொலைகள் குறித்துத் திரும்பியுள்ளமை நிலைமையில் மாற்றங்களை ஏற்படுத்துமா என்பது மற்றொரு எதிர்பார்ப்பாக உள்ளது. தமிழ் பேசும் மக்களின் இனப் பிரச்சினைக்கான தீர்வுக்கு சர்வதேச சமூகத்தின் ஆதரவு தேவை என்ற கருத்துப் பலமாக உள்ளது. அவ்வாறான ஆதரவின் அவசியம் குறித்தே உலகளாவிய பிரசாரங்களும் செய்யப்படுகின்றன. இதேவேளை இலங்கை அரசாங்கத்துடனான பேச்சுவார்த்தையில் மத்தியஸ்தம் செய்ய சர்வதேச மத்தியஸ்தவத்தையே தமிழ்த் தரப்பு கோரியிருந்தது. அதனடிப்படையிலே நோர்வே நாடு மத்தியஸ்தம் வகிக்க முன் வந்தது.

இந் நிலையில் சர்வதேச அபிப்பிராயத்தைப் பாதிக்கும் வகையிலமைந்த ஐரோப்பிய யூனியனின் அண்மைய கருத்துக்கள் பாரதூரமானவையாகும். நிகழ்ந்தேறும் சம்பவங்கள் இனந்தெரியாதவர்களால் நிகழ்த்தப்படுவதாகக் கூறிக் கொள்வது மட்டும் சர்வதேச சமூகத்தைத் திருப்திப்படுத்திவிடாது என்பதுவும், அவர்கள் இது குறித்து தமது சொந்த அனுமானங்களுடன் முடிவு செய்துகொள்ளக் கூடியவர்களாக உள்ளார்களென்பதுவும் புரிந்து கொள்ளப்பட வேண்டும். இவ்வாறான சர்வதேச அக்கறை இந் நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர உதவுமா என்பது பொறுத்திருந்தே பார்க்க வேண்டிய ஒன்று. மாறாக, இச் சம்பவங்கள் தொடருமாயின் அது சர்வதேச மட்டத்தில் எத்தகைய விளைவுகளை ஏற்படுத்தும் என்பது குறித்தும் சிந்திக்க வேண்டியது அவசியம்.

இருந்தபோதிலும், கிளிநொச்சியில் ஐரோப்பிய ஒன்றியத் தூதுக் குழுவினர் பேச்சுவார்த்தை நடத்திய அதேவேளை கொழும்பில் மற்றொரு அரசியல் படுகொலை நிகழ்த்தப்பட்டதென்பது மற்றொரு அதிர்ச்சிச் செய்தியாகும். ஈரோஸ் பாலா அல்லது சின்ன பாலா என்று அழைக்கப்படும் க.பாலநடராஜ ஐயரே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டவர். இவர் 1972களில் மாணவர் பேரவை அமைப்பிலிருந்து ஈரோஸ் அமைப்பின் மத்திய குழு உறுப்பினராகச் செயற்பட்டு, பின்னர் ஈ.பி.ஆர்.எல்.எப். இல் சொற்ப காலமும், இறுதியாக ஈ.பி.டி.பி.யின் பிரசாரச் செயலாளராகவும் செயற்பட்ட அரசியல்வாதி. 32 வருடங்களாக தொடர்ச்சியான அரசியல் வாழ்க்கையை நடத்தி ஈழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் பல திருப்புமுனைகளையும் சந்தித்த ஒருவர். அதேவேளை அவர் பல்வேறு பத்திரிகைகளிலும் பணியாற்றியவர். அத்துடன் சிறந்த சிறுகதை எழுத்தாளர். இத்தகையோரின் அநுபவம், அறிவு, செயற்பாடு என்பனவெல்லாம் கேள்வியற்ற படுகொலைகளுக்குப் பலியாகும் நிலமையையிட்டு எமது சமூகம் சிந்திக்க வேண்டியுள்ளது. சமூகப் பங்களிப்பு எதையுமே செய்யாமல் சுகபோக வாழ்வை மட்டும் வாழ்ந்து கழிப்பவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள வாழ்க்கை உத்தரவாதம் கூட தமது வாழ்நாள் முழுவதையும் தமிழ் மக்களின் மீட்சிக்காக அர்ப்பணித்தவர்களுக்கு இல்லை என்ற நிலைமையை எண்ணிப் பார்ப்பது கவலையளிப்பதாக உள்ளது.

எவ்வாறாயினும், அரசாங்கமோ, சர்வதேச சமூகமோ, நிலைமையைச் சீராக்கிப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்து இவற்றுக்கெல்லாம் அடிப்படைக் காரணமாகிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதையும் எடுத்தாக வேண்டும். மக்களின் இன்றைய ஏக்கம் அதுதான்.

சென்ற வாரத் தொடர்ச்சி...

சென்றவாரம் இப் பகுதியில் இரண்டு தவறுகள் இடம்பெற்றுவிட்டன. இதனால் சிரமமடைந்து வாசகர்களுக்கு எமது வருத்தங்கள்.

முதல் தவறு - இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி கொலைசெய்யப்பட்டது ஸ்ரீ பெரம்புதூரில் என்பதற்குப் பதிலாக கோயம்புத்தூர் என்று எழுதப்பட்டது. இரண்டாவது, மட்டக்களப்பில் சுடப்பட்ட புளொட் உறுப்பினர் வாமதேவன் அல்ல, பரமதேவன் என்பவராவார். இதற்காக எமது வருத்தங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# துரோகிகளாக்கப்பட்ட போராளிகளின் மரணங்கள்!

> ஈரோஸ் இயக்கத்தின் தலைவர் பாலகுமார் பெரிய பாலா என்றும் இவர் சின்ன பாலா என்று இனங்காணுமளவுக்குத் தன்னை ஆளுமையுள்ளவராக வளர்த்தவர். தமிழ் பேசும் மக்களுக்கான அரசியல் பணியில் தன்னை அர்ப்பணித்துச் செயற்பட்ட அவர், தேர்ச்சியும் ஞானமும் கொண்ட அரசியல் தலைவராகத் திகழ்ந்தார்.

தமிழர்கள் தாக்கி அழிக்கப்பட்டபோது- சொந்த நாட்டுக்குள்ளேயே சொந்த அரசாங்கத்தால் இன அழிப்பு செய்யப்பட்டபோது தனது உடன் பிறப்புக்களாகவும் உறவுகளாகவும் இணைத்தார். சர்வதேச நாடுகள் வெறும் கண்டனங்களைச் செய்துவிட்டு நமக்கென்ன என்று ஒதுங்கிக்கொண்டபோது எல்லா எதிர்ப்புக்களுக்கும் முகங்கொடுத்து துணிந்து இலங்கை வாழ் தமிழர்களுக்காகப் பாடுபட்ட, மதிப்பிற்குரிய ராஜீவ் காந்தி படுகொலை செய்யப்பட்டது எந்த வகையில் நியாயமாகும். இது எப்படி சாதாரண துன்பியல் சம்பவமாகும்?. இந்தியப் படையினரை இலங்கைக்கு அனுப்பி, தமிழர்களைப் பாதுகாத்து, வடக்கு - கிழக்கை இணைத்து, தமிழர்கள் தங்களை ஆளும் சக்தியாக வளர வேண்டும் என்பதற்காக உழைக்க விருப்பம் கொண்டிருந்தார். இதைப் புரிந்துகொண்ட அப்போதைய ஜனாதிபதி பிரேமதாசா புலிகளைத் தூண்டிவிட்டார். மோதல்கள் ஆரம்பிக்கக் காரணமாக இருந்தார். இந்த இராஜதந்திரத்தைப் புரிந்துகொள்ளாமல் புலிகள் இந்திய இராணுவத்துடன் மோதல்களில் ஈடுபட்டனர். இதுவே வரலாறு.

இப் பகுதியில் புளொட் மோகன், ஈ.பி.ஆர்.எல்.எப். ராசிக், த.வி.புலிகள் கருணா அணியைச் சேர்ந்த சச்சு மாஸ்டர் என்போரது போராட்ட வரலாறுகளை விரிவாகப் பார்க்கவே விருப்பம் இருந்தது. இவர்களின் போராட்ட வரலாற்றில் சில கசப்பான பதிவுகளும் இல்லாமலில்லை. புளொட் மோகன் 1984 காலப்பகுதியில் விடுதலைப் போராட்டத்தில் தன்னை இணைத்துக்கொண்டு பேரினவாதத்துக்கு எதிராகச் செயற்பட்டவர். பின்னர் இயக்க மோதல்கள் காரணமாக புளொட் இயக்கத்தைப் புலிகள் அழித்த காலகட்டத்தில் விரக்தியடைந்து புலிகளுக்கு எதிராகச் செயற்பட முற்பட்டவர். இதைப் புரிந்துகொண்ட படையினர் புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளை எடுக்க இவரைப் பயன்படுத்தினர். இதே போல ஈ.பி.ஆர்.எல்.எப். உறுப்பினரான ராசிக் 1983ஆம் ஆண்டு இயக்கத்தில் இணைந்து கிழக்கு மாகாணத்தில் சிங்களப் பேரினவாதத்துக்குக் கடுமையான எதிர்ப்பைக் காட்டியவர். பின்னர்


கடந்த 16.08.2004இல் வெள்ளவத்தையில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான ஈ.பி.டி.பி.யின் பிரசாரச் செயலாளர் பாலநடராஜ ஐயர்.

ஈ.பி.ஆர்.எல்.எப். இயக்கமும் அதன் உறுப்பினர்களும் புலிகளால் தேடி அழிக்கப்பட்டபோது, ஈ.பி.ஆர்.எல்.எப். தோழர்கள் பலர் இந்தியாவுக்குத் தப்பிச் செல்ல, நாட்டிலேயே நின்று புலிகளுக்கு எதிராகச் செயற்பட்டவர். இவரையும் படையினர் பயன்படுத்தினர். இவ்விருவரின் போராட்ட வரலாறு மிகத் துல்லியமாக ஆராயப்பட வேண்டும். அதனாலேயே குறிப்புகளை மாத்திரம் இங்கு தருகிறேன்.

இவர்கள் தமிழ் இனத்தின் விடுதலைக்காகப் போராட்டத்துக்குள் இணைந்துகொண்டு அவர்கள் சார்ந்திருந்த இயக்க உறுப்பினர் அழிக்கப்பட்டதால் திசை மாறிச் செயற்பட்டவர்கள். இலங்கைப் படைகளுக்கு எதிராக இவர்கள் செய்த தாக்குதல்களை மறந்து அல்லது சகித்து இவர்களை படைத் தரப்பு தம்முடன் இணைத்துக்கொண்டு புலிகளுக்கு எதிராகப் பயன்படுத்தியது. இவர்களும் தனித்து நின்று புலிகளை எதிர்க்கும் சக்தி தமக்கு கிடைக்காது என்பதைப் புரிந்துகொண்டு படையினரோடு இணைந்துகொண்டனர்.

ஒரு நாயைக் கூட மூன்று பக்கமும் அடைத்த பகுதிக்குள் விட்டுத் தாக்கினால் தப்ப வழியில்லாமல் கடைசியில் தாக்குபவரின் மீதே பாய்ந்துவிடும். தமிழ் மக்கள் ஏன் போராட முற்பட்டனர்? நாலு பக்கமும் கடல். சிறிய நிலப்பரப்பில் சொந்த அரசே தாக்குகின்றபோது வேறு வழியில்லாமல் எதிர்க்கத் தலைப்பட்டனர். இவர்களின் நிலையும் அதுதான். தேடித் தேடி அழித்தபோதும்- பல சகோதரத் தோழர்கள் கொல்லப்பட்டபோதும்- பலர் நாட்டைவிட்டு தப்பி ஓடியபோதும் இவர்களைப் போன்று மாறுபட்ட பேரினவாதத்திடமே தஞ்சம் பெற வேண்டிய சூழல் உருவானதுதான் துரதிர்ஷ்டம். தங்களுக்கு எதிராகப் போரிட்டவர்களை படைத் தரப்பினால் அரவணைத்துப் போக முடிந்துள்ளபோது, சகோதர இயக்கங்கள் தலைமை மோதல்களால் அடிபட்டுச் செத்ததுதான் மற்றுமொரு துரதிர்ஷ்டம். இவ்வாறு பேரினவாதத்துக்கு எதிரான தமிழரின் அனைத்துச் சக்திகளும் ஓரணியாக நின்று விடுதலைப் போரை நடத்தியிருந்தால் எப்போதோ தமிழரின் இருள் நீங்கியிருக்கும். ஈ.பி.ஆர்.எல்.எப். அழிக்கப்பட்டபோது இந்தியாவுக்குச் சென்று, பின்னர் இலங்கைக்கு வந்து புலிகளுக்கு எதிராகப் பல நடவடிக்கைகளை மேற்கொண்டு, இப்போது தலைமையின் நினைவஞ்சலிகளைக் கூட நினைவு கூர முடியாமலும், நம்பி வந்த உறுப்பினர்களை நடுத் தெருவில் விட்டும் பதவிகளுக்காகக் கூட்டுச் சேர்ந்துள்ள தோழர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தியாகியாகிவிட்டார். அவர் பிடித்துப் பயிற்சி கொடுத்த உறுப்பினர்கள், இவர்கள் பேசிய கொள்கைகள் எல்லாம் தலைமுழுகியாகிவிட்டன. அவரைத் தவிர அனைத்து ஈ.பி.ஆர்.எல்.எப். தோழர்களும் துரோகிகளாக்கப்பட்டுள்ளார்கள். இது போல, புளொட் இயக்கம் சின்னா பின்னமாகி உறுப்பினர்கள் தவித்தபோது மோகன் கிளர்ந்தெழுந்தார். துரோகியானார். எஞ்சிய உண்மையான உறுப்பினர்கள் சிலர் பல வகையான நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்துக்கொண்டு வாழ்கிறார்கள். ஒரு போராளி எப்படித் துரோகியாக்கப்பட்டான்? என்பதைத்தான் ஆராய்ந்தோமே தவிர, இவர்களின் செயற்பாடுகள் நியாயமானவை என்றோ, அவை தவிர்க்க முடியாதவை என்றோ கருத முடியாது. எமது போராட்ட வடிவத்தில் பாரிய குறைபாடுகள் இருந்ததே இங்கு கவனிக்கப்பட வேண்டியது.

அடுத்ததாக சச்சு மாஸ்டர் இவர் பற்றிச் சொல்லவே தேவையில்லை. பெப்ரவரி 22, 2002ஆம் ஆண்டு புலிகளுக்கும் ரணில் அரசுக்குமிடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடுவதற்கு முன்பு வரை இலங்கை அரசுக்கெதிராகப் பல போராட்டங்களை நடத்தியவரும் ஈடுபட்டவருமாவார்.

பின்னர் அரசு-புலிகள் சமாதானப் பேச்சுக்களில் ஈடுபட்ட காலப் பகுதியில் இயல்பு வாழ்வை நேசித்தவர். கருணாவின் தலைமையுடனான பிளவில் நியாயமிருப்பதாக நினைத்தார். கிழக்கு மாகாண அபிவிருத்தி, ஜனநாயக வழி முறைகள் பற்றிச் சிந்தித்தார். நடைமுறை ரீதியாகச் செயற்பட்ட சரியான திட்டமிடல் இல்லாததால் இன்று எதிர்பாராத விதமாகக் கொல்லப்பட்டுவிட்டார், அதுவும் துரோகியாகச் சித்திரிக்கப்பட்டு.

இவை எல்லாவற்றையும் மிஞ்சிய மற்றுமொரு சம்பவம் ஈ.பி.டி.பி.யின் ஊடகப் பிரசாரச் செயலாளராக இருந்து 16.08.2004இல் சுட்டுக் கொல்லப்பட்ட பாலா என அழைக்கப்படும் பாலநடராஜ ஐயர். தமிழினத்தின் விடுதலைப் போராட்டத்தில் 1972இல் மாணவர் பேரவையின் உறுப்பினராக இணைந்து, பின்னர் ஈரோஸ் இயக்கத்தில் அயராத உழைப்பால் அநுபவத்தையும் அரசியல் திட்டமிடல்களையும் கற்றுக்கொண்டு, தலைமைப் பாங்கோடு வாழ்ந்தவர். ஈரோஸ் இயக்கத்தின் தலைவர் பாலகுமார் பெரிய பாலா என்றும் இவர் சின்ன பாலா என்று இனங்காணுமளவுக்குத் தன்னை ஆளுமையுள்ளவராக வளர்த்தவர். தமிழ் பேசும் மக்களுக்கான அரசியல் பணியில் தன்னை அர்ப்பணித்துச் செயற்பட்ட அவர், தேர்ச்சியும் ஞானமும் கொண்ட அரசியல் தலைவராகத் திகழ்ந்தார்.

புலிகளால் ஈரோஸ் இயக்கம் உள்வாங்கப்பட்டபோது பாலகுமாரும் புலிகளோடு இணைந்ததால் இவரும் புலிகளுக்கு ஆதரவாகச் செயற்பட்டார். அக் காலப் பகுதியில் "ஈழநாதம்" எனும் புலிகளின் பத்திரிகைக்கு ஆசிரியராகப் பணியாற்றிய இவர், யாழ்ப்பாணப் பிரதேசம் இராணுவத்தின் கட்டுப்பாட்டுக்குள் வந்த பின்னர் கொழும்புக்கு வந்தவர். பின்னர் ஈ.பி.டி.பி.யுடன் இணைந்து செயற்பட்டார்.

அலசுவது

**- மதியூகி -**

இப்போது துரோகியாகச் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். இந்தத் துரோகி எனப்படும் சொற்பதம் எப்படி உருவானது? இன அழிப்பைச் செய்கிறவர்கள் தியாகிகளாகவும் இலக்காகிப் போனவர்கள் துரோகியாகவும் பரிணாமம் பெற்றதுதான் காலக் கொடுமை.

இவையெல்லாவற்றையும் பார்த்து அநுபவித்துக்கொண்டிருக்கும் தமிழினம் இன்னும் எத்தனை நாளைக்குத்தான் மௌனம் சாதிக்கப்போகிறது. சமூக அக்கறையுள்ளபடியாலும், தமிழ் மக்களின் விருப்பு, வெறுப்புக்களை நம்புகின்றபடியாலும் இக் கொலைகளுக்கான நியாயத்தையும் உங்களிடமே கேட்டு நிற்க வேண்டியுள்ளது.

## அதிரடி அய்யாத்துரை



***பட்டப்பகலில*** வெள்ளவத்தையில பகிரங்க இடத்தில சாவகாசமாய் நிண்டு கொலை செய்திட்டுப் போற அளவுக்கு எங்கட நாட்டுப் பாதுகாப்பு நிலவரம் இப்ப கடையைப் பூட்டிக் கொண்டு குறட்டை விட்டுக் கொண்டு நிக்குது. யார் யாரெல்லாம் பலியாகிறதெண்டதுக்கு ஒரு கணக் கில்லாமல் போட்டுது. போன 16ஆம் திகதி ஈரோஸ் பாலா எண்ட அரசியல் முன்னோடி பரிதாபமாய் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார். அவர் எங்கட அரசியலில் போராட்டம் எண்ட சொல்லு தெரியவர முன்னமே 72களில் மாணவர் பேரவை தொட்டு தமிழ் மக்களுக்கென்று உழைச்சு வந்தவர். அரசியல் கருத்துக்களையே முழுசா நம்பி பங்களிக்க நடமாடி வந்த அவரையும் எங்கட எழுதிச் செல்லும் கொடுவிதி விட்டு வைக்கேல்ல. எல்லாப் பழி பாவங் களையும் சுமந்துகொண்டுதான் எங்கட புனித கங்கை பயணிக்கும் போல. எங்க போய்ச் சேரப்போறமோ!

***ஒரு*** பக்கம் அரசியல் கொலைகள் உச்சக் கொப்பில ஏறி நிக்குதெண்டால் மற்றப் பக்கம் பாதாள உலகப் படு கொலைகள் கொடி கட்டிப் பறக்குது. பழிக்குப் பழியெண்டு சிக்காகோ பாணியில சம்பவங்கள் நிகழுது. செத்த வீட்டுக் குள்ளயும் புகுந்து செத்த வற்ற சகோதரங்கள் 4 பேரைப் படுக்கையிலேயே சுட்டுக் கொன்று சவத்துக்கும் சுட்டிட்டுப் போற மயிர்க்கூச்செறியும் திறில் சம்பவங்க ளெல்லாம் படங்களில இல்ல, நிஜத்தில நடக்குது. எந்தக் கொலைக்குப் பழி வாங்க எந்தக் கொலை நடந்ததெண்டும் எந்தக் குழு எதைச் செய்ததெண்டும் பப்ளிக்குக்குத் தெரியுது. பொலிஸுக்குத் தான் தெரியுதில்ல. நாளடைவில பாதாள உலகக்காறர் ஒரு குட்டிப் பாராளுமன்றத் தைக் கட்டி தாங்கள்தான் ஆட்சியாளர்க ளெண்டு பிரகடனப்படுத்தினாலும் ஆச் சரியமில்லை. சொல்ல ஏலாது பாருங்கோ?

***அரசாங்கம்*** தீர்வுத் திட்டம் வைச்சால் நிராகரிக்கப்படுமெண்டு ரெண்டெழுத்தார் தெரிவிச்சிருக்கிற நிலை யில, எங்கட மீடியேட்டர்மார் என்னெண்டு தான் நிலமையை மாத்தப்போகினமாம். ரெண்டெழுத்தாற்ற திட்டத்தை ஜே.வி.பி. ஏற்கிறது ஒரு பக்கம், அதை வழங்க அரசியல் யாப்பு மாத்த வேண்டியி ருக்குமெண்டது மறுபக்கம். இதுக்கிடை யில இதைத் தவிர எதையும் பேச ஏலாதெண்டது ரெண்டெழுத்தாற்ற நிலை. எல்லா நிபுணர்களையும் சேத்து வைச்சு வகுத்ததோட, தேர்தலில மக்களா ணையும் எடுத்து வைச்சிருக்கிறம். இதுக்கு மேல வேற என்ன வேணு மெண்டு கேக்கினம் அவை. இந்த நில மையிலயும் விரைவில பேச்சுவார்த்தை ஆரம்பிக்குமெண்டு நம்பிக்கை விடுகிறவையைப் பார்த்தால்தான் வியப்பா யிருக்கு அவை நம்பிக்கை விடுகினமா, நம்பிக் "கைவிடுகினமா" எண்டதுதான் தெரியேல்ல.

***ரெண்டெழுத்தாரோட*** ஜே.வி.பி. எண்ட மூண்டெழுத்தையும் சந்திக்க வைக்கிற அரசியல் ஸ்டண்டை அடுத்தபடி ஆரம்பிச்சிருக்கிறார் எங்கட சந்திரமான மலையகத் தலைவர். இவர் சாத்திய மானதுகள முயற்சிக்கிறாரா, இல்லை ஸீன்ல பப்ளிசிட்டி வாறதுக்கானதுகளை எடுத்து விடுகிறாரோ எண்டு தெரி யேல்லை. முந்தியும் இப்பிடித்தான் அகண்ட தமிழ் கூட்டெண்டு துடங்கினார். தேர்தல் வரவிட்டுப் பறந்து யூ.என்.பி யோட கூட்டுக் கட்டினார். ஏதோ நல்ல நோக்கம் இருந்தால் நல்லதுதான். ஆனால், ஜே.வி.பி.காறர், மலையகத் தலைவர் சொல்லித்தான் தாங்கள் ரெண்டெழுத்தாரைச் சந்திக்க வேண்டிய அவசிய மில்லை எண்டிருக்கினம்- எதுக்கும் முயலுங்கோ. 'முயற்சி திருவினை யாக்கட்டும்.

***மனித*** குளோனிங்கை பிரித்தானியாவில அனுமதிச்சிருக்கிறாங் களாமே! ஐடியா, இதை எங்கட நாட்டிலையும் அனுமதிச்சால் நல்லாயி ருக்கும். எங்கட தலைவர்மார் ஆளுக்கு அஞ்சாறு குளோனிங்கைச் செய்து வைச்சாலாவது இந்த அழித்துச் செல்லும் கொடுவிதியில தங்கட தலைமைத் துவத்தைக் காப்பாத்த டுப்ளிகேட் செய்து வைக்கலாம். அதோட பாருங்கோ, தமிழ்ச் சனத்தொகை விழுகிற வேகத்துக்கு, 10 மாதம் சுமந்து பெறுகிற வேகம் ஈடு குடுக்காது போல கிடக்குது. குளோனிங்க் தான் கை கொடுக்குமோ தெரியேல்ல.

***எரிபொருள்*** கிலி இப்ப சனத்தைப் போட்டு ஆட்டுது. அதுக்குள்ள பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில ஸ்ரைக்கும் வேற. பெற்றோல் செட்டுகளெல்லாம் முற்றுகை நடந்து வறண்டு போய்க் கிடக்குது. கெதியில நிலமை சீராகுமெண்டிருக்கினம். 'கெதியில" இல்லாட்டால் சனத்துக்கு கதியில்லை!

***அடையாள*** அட்டையை தேர்தலில வாக்காளர் தங்களை அடையாளப் படுத்தும் ஆவணமாப் பயன்படுத்திற ஐடியாவை அரசாங்கம் முன்வைச்சிருக் குது. தெரிஞ்ச விசயம். இது அமுலுக்கு வந்தால் தங்கட பாடு ஆபத்தெண்டு எங்கட அரசியல்வாதிகள் சில பேர் அவதிப்படுகினமாம். மலையகக்காறரைக் கொண்டுவிச்சு, மலையகத் தமிழருக்கு அடையாள அட்டைகள் முழுமையா விநியோகிக்கப்படயில்லயெண்டு சொல்லி எதிர்ப்புத் தெரிவிக்க முயற்சிக்கினமாம். அரசாங்கம் மலையகத் தமிழருக்கு உடனடியாக அடையாள அட்டை வழங்க ஏற்பாடு செய்யிறதாச் சொல்லியிருக்கு. சொன்னபடி செய்திட்டால் யாரைப் பிடிச்சுக் காரியஞ் சாதிக்கப் போகினமோ! ம்.... அடையாள அட்டை அமுலுக்கு வந்தால்தான் கள்ள வாக்குக்காறற்ர வண்டவாளங்கள் வெளிச்சமாகும்.

# விளம்பரப் பகுதி

## சிறுகதை, கவிதை எழுத்தாளர்களுக்கு....

முரசுக்காக சிறுகதைகளை எழுதிவரும் அன்பு எழுத்தாளர்களே! எதிர்காலத்தில் எழுத்துப் பணியில் ஈடுபட இருப்பவர்களே! முரசுக்காக சிறுகதைகள் எழுதுகின்றபோது கையெழுத்துப் பிரதியாக இருந்தால் மூன்று பக்கங்களும், தட்டச்சு செய்திருந்தால் ஒன்றரைப் பக்கம் வரக்கூடிய விதத்திலும் எழுதி அனுப்பி வையுங்கள்.

கவிதை எழுதுபவர்கள் தொடர் சங்கிலியாக எழுதாமல் எடுத்துக்கொள்ளும் விடயத்தை சிறியதாகவும் சுவையாகவும் எழுதுமாறு கேட்டுக்கொள்கிறோம். முரசு எழுத்தாளர்களாக இருப்பவர்களைக் கௌரவிக்கும் அதேவேளை, புதிய புதிய எழுத்தாளர்களுக்குக் களம் அமைத்துக் கொடுக்கவும் வாசகர்கள் ஒத்துழைப்பார்கள் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.

நன்றி.

- ஆசிரியர்




## என்னிடம் கைரேகை பார்க்க வருபவர்கள் என்ன கூறுகிறார்கள்

அமைதியாகவும் ஆறுதலாகவும் பேசிக் கைரேகை பார்க்க வருபவர்களின் பிரச்சினைகளை உள்வாங்கிக் கொண்டு, நாங்கள் எதை கைரேகையின் மூலம் எதிர்பார்க்கின்றோமோ அந்த எதிர்பார்ப்பினைப் பூர்த்தி செய்து, எமக்கு இருக்கும், வரப்போகும் பிரச்சினைகளையும் எமக்கு எதிர்காலத்தில் அமையவிருக்கும் வாழ்க்கையினையும் கூறுவதோடு, அதற்கான வழிமுறைகளை கூறுவது மனதிற்கு ஆறுதலாகவும், திருப்தியாகவும் இருப்பதோடு, வாழ்க்கை பற்றிய தன்னம்பிக்கையும் பிறக்கின்றது.

நான் கூறும் இராசி பலனை ரூபவாஹினி 'ஐ' அலை வரிசையில் ஞாயிறு காலை 8.30 மணிக்கும் மித்திரன் பத்திரிகையிலும் கேட்டு படித்துத் தெரிந்து கொள்ளுங்கள்.

மன வள ஜோதிட ஆலோசகர்
K. கங்காதரன் (M.A) J.P
23, மேபில் ரோட், கொழும்பு-13
தொ.பே.இல: 0777 388860, 2342463


## தினமுரசு சந்தா விபரம்

### சந்தாக் கட்டண அதிகரிப்பு விபரம்

இலங்கையில் தபால் கட்டண அதிகரிப்பு காரணமாக சந்தாக் கட்டணமும் உயர்த்தப்பட்டுள்ளது. அது சம்பந்தமான விபரம் பின்வருமாறு:

| நாடுகள் | ஒரு வருடம் | 6 மாதம் | 3 மாதம் |
|---|---|---|---|
| ஐரோப்பிய நாடுகள் | ரூ. 3000 | ரூ.1500 | ரூ.750 |
| அமெரிக்கா, கனடா | ரூ. 3650 | ரூ.1800 | ரூ.900 |
| மத்திய கிழக்கு நாடுகள் | ரூ. 2600 | ரூ.1300 | ரூ.650 |
| உள்ளூர் | ரூ. 850 | ரூ.450 | ரூ.250 |

சந்தா செலுத்தி தபாலில் தினமுரசு வாரமலரை பெற விரும்புவோர் D.D. Enterprises எனும் பெயரில் எழுதப்பட்ட காசோலைகள் அல்லது வங்கிக் கட்டளை களை முகாமையாளர் தினமுரசு 16A, Nelson Place, Wellawatta, Colombo-06. Srilanka என்ற முகவரிக்கு அனுப்பி பெற்றுக் கொள்ளலாம். இந்த முகவரிக்கு வந்து நேரில் பணம் செலுத்தவும் முடியும்.

ஈ-மெயில்: (E-mail):- murasu@sltnet.lk

## எழுத்தாளர்களின் கவனத்திற்கு

மலையகச் செய்திகள் எமக்கு அரசியல் சாயம் பூசி அனுப்பப்படுவதால் எமது தெரிவுக்குட்படுவதில்லை. எனவே சுதந்திரமாகவும், நியாயமாகவும் எவரையும் நேரடியாகக் குறிப்பிடாமலும் உண்மைச் செய்திகளை எழுதக் கூடியவர்கள் தாராளமாக எமக்கு எழுதலாம். செய்தியாகவோ / கட்டுரையாகவோ உங்கள் மன எண்ணங்களை எம்மோடு பகிர்ந்துகொள்ளுங்கள்.

1. மலையகச் செய்திகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கவும் முறைப்பாடுகளைச் சம்பந்தப்பட்டவர்களின் கவனத்திற்குக் கொண்டுவரவும் நாம் கடமைப்பட்டுள்ளோம். ஏற்கெனவே கவிதை, சிறுகதை என்பவற்றுடன் முரசின் வளர்ச்சியில் ஒன்றித்திருப்பவர்களுக்கு எமது சிரம் தாழ்ந்த நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

பி.கு.

துணிந்து உண்மைச் செய்திகளை நேர்மையாக எமக்கு எழுதக் கூடிய பிராந்தியச் செய்தியாளர்களின் பங்களிப்பும் வரவேற்கப்படுகிறது. வடக்குக் கிழக்குச் செய்திகளை விடவும், மலையகச் செய்திகள் தொடர்பிலும் முரசு கூடிய கவனம் செலுத்தவுள்ளதால் ஒத்தாசை புரிந்து செயலாற்றத் துடிப்பான எழுத்தாளர்கள் வரவேற்கப்படுகிறார்கள்.

நம்மால் முடிந்த சேவையை நம் சமூகத்திற்குச் செய்வோம். நமக்கு என்ன கிடைத்தது என்பதை விடவும் நாம் என்ன கிடைக்கச் செய்தோம் என்ற கேள்வியை நம்மை நோக்கி நாமே கேட்போம்.

நன்றி.

- ஆ - ர்

# வருடாந்த சக்தி விழா




நிகழும் தாரண வருடம் ஆவணித் திங்கள் இரண்டாம் நாள் 17.08.2004 செவ்வாய்க்கிழமை இரவு அன்னமலை அருள்மிகு ஸ்ரீ வடபத்திரகாளி அம்பாள் ஆலயத்தின் வருடாந்த சக்தி விழா அம்மனின் ஆலயத் திருக்கதவு திறந்ததுடன் ஆரம்பமாகி, தொடர்ந்து ஒன்பது நாட்கள் ஆலயத்தின் கிரியாகால நிகழ்வுகள் நடைபெற்று, சக்தி விழா மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்படும்.

தொடர்ந்து மூன்றாம் நாள் 19.08.2004 ஆறாம்நாள் 22.08.2004 ஞாயிற்றுக்கிழமை மாணிக்கப்பிள்ளையார் ஆலயத்திலிருந்து வாழைக்காய் எழுந்தருளப்பண்ணுதலும், ஏழாம் நாள் 23.08.2004 திங்கட்கிழமை வீசேட சக்தி பூசையும் அம்மன் முத்துச் சப்பரத்தில் வீதி உலா வருதலும். எட்டாம்நாள் 24.08.2004 செவ்வாய்க்கிழமை நோர்ப்பு நெல் குற்றுதல் விநாயகப் பானை எழுந்தருளப்பண்ணுதல், நோர்ப்பு கட்டுதல் அதனை தொடர்ந்து புனித கங்கை தீர்த்தமாடச் செல்லுதல் என்பனவும் நடைபெறும். இறுதி நாளான ஒன்பதாம் நாள் 25.08.2004 காலை தீ மிதிப்பு வைபவத்துடன் சக்தி விழா இனிதே நிறைவு பெறும்.

ஸ்ரீ வடபத்திரகாளி அம்பாள் ஆலயம்
நிருவாக சபை,
அன்னாமலை, கல்முனை


# மலையாள மாந்திரீகம்





## கை கண்ட பலன் பெற வாருங்கள்

எம்மால் வெற்றி பெறுவது என்பதாலேயே வாங்கும் பணத்திற்கு திட்டவட்டமாக ரசீது வழங்குகிறோம்

### மலையாள மனோவசிய மதுரைவீரன் சக்கரம்

இக் சக்கரத்தால் தொழில் அல்லது வியாபாரத்தில் ஏற்படும் நட்ட நிலை மாறி மீண்டும் இலாபம் அமையும். குடும்பத்தில் கணவன் மனைவி ஒற்றுமை கிடைக்கும். பெற்றோர்கள், பிள்ளைகளின் உறவு வலுவடையும். கடன் தொல்லைகள் அகலும். செல்வம் சேரும்.

### மலையாள மனோவசிய வாழைதேவி சக்கரம்

இது திருமணம் ஆகாதவர்களுக்கு கைகண்ட பலனைக் கொடுத்து வருகிறது.

### மலையாள மனோவசியம் ருத்திர ஜண்டி சக்கரம்

இது எதிரிகள் இன்றி வாழ ஒவ்வொருவருக்கும் அவசியமே.

### மலையாள மனோவசிய சக்தி மைந்தன் மூல சக்கரம்

பிரிந்த கணவன் ஒன்று சேரவும், காதலன், காதலி ஐக்கியப்படவும், மேலும் இச் சக்கரத்தால் எதிரிகளால் உங்களுக்கு தீய வேலைகள் செய்ய முடியாமலும் காவல் நிற்கும்.

நேரடித் தொடர்புகளுக்கு:-

**Prof. Dr. P.K. Samy (J.D.G.A.N) J.P.**

No: 162, Kotahena Street, Mayfield Road, Colombo-13

Sri-Lanka CLI-No-0094(11)2342463, 42470615, 3431137, 2344832-2449110, Hotline-CLI No:- 0094-(11)-4613133, 4613124,4613127,
Fax-0094112344831
Email-drpksamy@sltnet.lk

நுவரெலியாவில் : Tel Cli No : 052-2222508, 2235097, 223093

வெளிநாட்டவர்களுக்கு எம்மிடம் பிரத்தியேக விசேட சேவை பிரிவுண்டு. (இங்கு தீய வேலைகளுக்கு இடமில்லை இரகசியங்கள் பாதுகாக்கப்படும்)


# வன்முறைக் சலாச்சாரமும் சமூகச் சீர்கேடும்

சமீபகாலமாக இலங்கையின் பல பகுதிகளிலும் வன்முறைக் கலாசாரமும் சமூகச் சீர்கேடுகளும் அதிகரித்து வருகின்றன. நாட்டில் நடைபெற்றுவரும் யுத்தமும் மற்றும் அரசியலும் வன்முறைக் கலாசாரத்துக்கு வித்திடுகின்றன எனலாம். வரையறையின்றி யுத்தம் நடைபெறும்போது கட்டுப்பாடுகள் இன்றி பல பகுதிகளுக்கும் ஆயுதம் கடத்தப்படுவதனால் பலரின் கைகளில் தாராளமாக ஆயுதம் புழங்குகின்றது. மற்றும் ஆயுதப் படைகளில் இருந்தும் இராணுவத்தில் இருந்தும் தப்பியோடும் சிப்பாய்களும் தங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக வன்முறைகளிலும் கொள்ளைகளிலும் ஈடுபடுகின்றார்கள்.

அரசியல் படுகொலைகளுக்காகவும் தனிமனித படுகொலைகளுக்காகவும் சட்டவிரோதமான அடிதடிக் குழுக்களைத் தோற்றுவித்து அவர்கள் மூலம் தங்கள் தேவைகளைச் சாதித்துக்கொள்கிறார்கள். இதனால் வெட்டுக் குத்துக்கள் சாதாரணமாகிவிடுவதுடன் இதில் அரசியல் செல்வாக்குச் செலுத்தவதினாலும் வன்முறையில் ஈடுபடுபவர்கள் தப்பித்துவிடுகின்றார்கள். அவர்கள் மீண்டும் வன்செயல்களில் துணிகரமாக ஈடுபடுகின்றார்கள்.

இவ் வன்முறைக் கலாசாரத்தின் மூலம் சமூகச் சீர்கேடுகள் அதிகம் இடம்பெறத் தூண்டுகின்றது. கொலைகள், கொள்ளைகள், ஆள்கடத்தல்கள், கற்பழிப்பு, பாலியல் சேட்டைகள், விபசாரம், சட்டவிரோதமான மது போதை உற்பத்திகள், போதைவஸ்து விற்பனைகள் (கஞ்சா உட்பட) தினமும் பெருகிவருகின்றன. சர்வ சாதாணமாகிவிட்டன. இதனால் சமூகம் சீரழிந்து , நலிந்து போகும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. ஒரு பக்கம் யுத்தத்தின் கொடூரத் தாக்கமும் மறுபுறம் சமூகச் சீர்கேடுகள் அதிகரித்து வருவதும் ஒட்டுமொத்த அழிவின் நிலைக்குக் கொண்டு செல்கின்றது எனலாம்.

இதற்குத் தீர்வு காணும் வகையில் ஏதுவான சட்ட நடவடிக்கைகளை அமுலாக்குவதில் அக்கறை காட்ட வேண்டிய அரசாங்கமும் மக்கள் பிரதிநிதிகளும் அசமந்தப் போக்கையே காட்டி வருகின்றனர். தங்கள் அரசியல் இருப்புக்கான தேவைகளில் மட்டுமே கவனம் செலுத்தி வருகின்றார்கள்.

மேற்குறிப்பிட்ட வன்முறைக் கலாசாரம், சமூகச் சீர்கேடுகள் விடயமாகச் சட்ட நடவடிக்கைகள் எடுப்பதற்கான சட்ட அமைப்பு வலுவாக உள்ளதா? என்பதற்கு அப்பால், சாதாரண சட்டங்களுக்கு உட்பட்டே நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. இதனால் இவர்கள் வெகு விரைவில் விடுதலையாகிவிடுவதுடன் மீண்டும் அச் செயல்களில் ஈடுபடுவதற்கும் தயங்குவதில்லை.

உள்நாட்டில் நடைபெற்றுவரும் போரைப் பயன்படுத்தி பயங்கரவாதத் தடைச் சட்டம், அவசரகாலச் சட்டம் போன்றவற்றின் மூலம் தமிழ் அப்பாவிப் பொது மக்களை சந்தேகத்தின் பேரில் கைதுசெய்து பல சித்திரவதைகளுக்கு உட்படுத்துவதுடன் அவர்கள் வெளியில் வர முடியாத அளவுக்கு வலுவான சட்ட அமைப்பையும் நடைமுறைப்படுத்தத் தயங்குவதில்லை. இதனால் பல ஆயிரம் தமிழ் இளைஞர்கள் விசாரணைகள் இன்றி இன்றும் சிறைகளில் வாடுகின்றார்கள். அவர்களை எந்தச் சட்டம் கைதுசெய்து கொடுமைப்படுத்தியதோ அந்தச் சட்டம் நீக்கப்பட்ட பின்பும் அந்த அப்பாவிகளுக்கு விமோசனம் கிடைக்கவில்லை. இது விடயமாக ஆளும் தரப்பு சட்டச் சிக்கல் என கூறி நழுவல் போக்கைக் கடைப்பிடித்து வருகின்றது.

இதே சட்டம் வன்முறைகளிலும் சமூகச் சீர்கேடுகளிலும் ஈடுபட்டுவருபவர்களுக்குத் தண்டனையாக பிணையையும், சில ஆண்டு சிறைத் தண்டனையையும் வழங்குகின்றது. அதற்கு ஒரு படி மேலே போய் விசேட தினங்கள் என்ற பேரில் பொது மன்னிப்பு வழங்கி விடுதலை செய்து விடுகின்றன. இதற்குச் சட்டச் சிக்கல் ஏட்படுவதில்லை.

எனவே, குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்கள் மீண்டும் அச் செயல்களில் ஈடுபட அஞ்சி ஒதுங்கித் திருந்துவதற்கும், புதிதாகக் குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்களைத் தடுப்பதற்கும் கடுமையான சட்ட நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துவதன் மூலம் மக்களையும் சமூகத்தையும் சீரழிவில் இருந்து காப்பாற்ற முடியும்.

*"மக்களைக் காப்பாற்றுவதன் மூலம் சமூகம் வளம் பெறும் நாடு செழிப்படையும்."*

இப்படிக்கு
எஸ்.தயா, திருமலை.

## 12.08.2004 திகதிய ஆங்கில தினசரி ஒன்றில் பிரசுரமான அரசியல் ஆய்வுக் கட்டுரையின் தமிழாக்கம்

### இன்னொருவர் பார்வையில்

# சமாதானத்தின் போர்வையில் யுத்தத் தயாரிப்பு

**1994** நெருக்கடி மிக்கதொரு ஆண்டாக இருந்தது. அல்லது வடக்கு-கிழக்கு பிரச்சினையில் மிக முக்கியமானதொரு திருப்புமுனையாக இருந்தது. இந்த வருடத்தில்தான் வடக்கு-கிழக்குப் பிரச்சினை தொடர்பாக செய்தி ஊடகங்களின் பார்வையில் ஒட்டுமொத்தமான ஒரு மாற்றம் தென்பட்டது. வடக்கு-கிழக்குப் பிரச்சினையை முற்றிலும் வித்தியாசமானதொரு கோணத்தில் அணுக முற்பட்டன. இந்தப் புதிய சிந்தனையானது தேசிய சிறுபான்மையினரின் குறிப்பாக அரசுடன் கடந்த இருபது வருடங்களாக ஆயுதம் ஏந்திப் போரிட்டு வரும் புலிகளின் உணர்வுகளைப் புரிந்துகொள்வதும்; ஏற்றுக்கொள்வதுமாக இருந்தது. இது இப் பிரச்சினைக்குப் புதியதொரு வடிவத்தைக் கொடுத்தது.

இந்தப் புதிய பார்வையை அறிமுகமாக்கிய பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கம், இந்த நாட்டில் நிலவுவதாகக் கூறப்படும் இனப் பிரச்சினைக்கு சமஷ்டி அடிப்படையிலான தீர்வொன்றைக் காண முற்பட்டது. இனப் பிரச்சினை மற்றும் அரசியல் தீர்வு என்ற சொற்பதங்கள் அரசாங்க அச்சு ஊடகங்களிலும் இலத்திரனியல் ஊடகங்களிலும் தினந்தோறும் வெளிவரலாயின. நாட்டின் ஜனாதிபதியாகப் பதவியேற்ற திருமதி சந்திரிகா இந்தியாவுக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டபோது இந்தியாவில் விசாரணைகளை எதிர்நோக்குவதற்காக பிரபாகரன் நாடுகடத்தப்படுவாரா என்ற கேள்வி ஒரு பத்திரிகையாளரால் எழுப்பப்பட்டது. இதற்கு திருமதி சந்திரிகா பதிலளித்தபோது "இத்தகையதொரு கோரிக்கை இதுவரை இந்தியாவினால் முன்வைக்கப்படவில்லை. ஆனால், ஒரு தனி மனிதரைச் சட்டத்தின் முன் நிறுத்துவதை விட கடந்த பத்து ஆண்டுகளாக யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட இலங்கையின் ஒரு பகுதியில் அமைதியை நிலைநாட்டுவது முக்கியமானது என்பதை இந்திய அரசு ஏற்றுக்கொள்ளும் என நம்புகிறேன்" என்றார். அதாவது பிரபாகரனின் பங்கு இல்லாமல் இலங்கையில் சமாதானம் சாத்தியமில்லை என்றே அவர் அர்த்தப்படுத்தினார்.

இந்தக் காலகட்டத்தில் இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதுதான் ஒரே வழி என்பதை திருமதி சந்திரிகா மிக உறுதியாக வெளிப்படுத்திவந்தார். அத்துடன், "இன்று ஒரு பிரபாகரனைக் கொன்று இப் பிரச்சினைக்கு தீர்வு காண முற்பட்டால், நாளை மேலும் பல பிரபாகரன்கள் தோன்றுவதைத் தடுக்க முடியாது" எனவும் ஆணித்தரமாக வலியுறுத்தி வந்தார். ஆனால், இதே கொள்கை சிங்களப் புரட்சிவாதியான றோகண விஜயவீர விடயத்திலும், மிக அண்மையில் புலிகளிலிருந்து வெளியேற்றப்பட்ட கருணா விடயத்திலும் பொருத்திப் பார்க்கப்படுவதில்லை.

சுனந்த தேசப்பிரிய, சுஜீவ திசாநாயக்க, ஜயம்பதி விக்கிரமரட்ண மற்றும் கார்லோ பொன்சேகா போன்றோர் இலத்திரனியல் ஊடகங்களில் தோன்றி தமிழ் மக்களின் பிரச்சினைகள் குறித்து விபரமாக விளக்கி அரசியல் தீர்வு காணப்படுவதன் அவசியத்தை வலியுறுத்தினார்கள். விக்கிரமபாகு கருணாரத்னா மற்றும் வாசுதேவ நாணயக்கார போன்றோர் அரசாங்க செலவில் பிரபாகரனைக் குற்றங்களிலிருந்து விடுவிக்கும் பிரசாரங்களை மேற்கொண்டனர். பேச்சுக்கள் முறிந்து போர் ஆரம்பிக்கப்பட்ட பின்னரும் கூட அரசியல் தீர்வு அவசியம் என்பதை வலியுறுத்த திருமதி குமாரதுங்க ஒருபோதும் தயங்கியதில்லை. அத்துடன் "சமாதானத்துக்கான போர் அல்லது பேச்சுவார்த்தை மேசைக்குக் கொண்டு வருவதற்காகவே போர்" என்றே அவர் கூறிவந்தார்.

மேற்கத்தைய சார்பிலான மிதவாத அணுகுமுறையையே பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் போக்கில் கடைப்பிடிப்பவர் திருமதி சந்திரிகா என்பது தெரிந்ததே. சில அரச சார்பற்ற நிறுவனங்கள் ஊடாக சந்தேகத்திற்குரிய சில இடங்களிலிருந்து திருமதி சந்திரிகா நிதியுதவிகளைப் பெற்று 1994 தேர்தல் பிரசாரத்தில் பயன்படுத்தியதாகவும் கூறப்படுகிறது. பிரேமதாசாவின் ஆட்சிக் காலத்தில் நெருக்கடிகளைச் சந்தித்த இந்த அரச சார்பற்ற நிறுவனங்கள் மேற்கத்தைய சார்புடைய மிதவாத போக்குடைய தலைவர் ஒருவரைத் தேடிக்கொண்டிருந்தன. இந்த அரச சார்பற்ற நிறுவனங்கள் திருமதி குமாரதுங்கவைப் புகழ்ந்தபடி மிதவாத மேற்கத்தைய சார்பு அணுகுமுறையை ஏறத்தாழ ஒவ்வொருவர் மீதும் திணித்துள்ளன. இதனால், இனப் பிரச்சினை என்று எல்லோரும் இப்போது உச்சரிக்கின்றனர். கவர்ச்சிகரமான பெயர்களைத் தாங்கி நிற்கும் இதே அரச சார்பற்ற நிறுவனங்கள் தமது செயற்பாடுகள் சாதாரணமானவையல்ல என்றே கூறுகின்றன. இத்தகைய நிறுவனங்களின் செல்வாக்கு இலங்கைச் சமூகத்தில் இப்போது பெரும் பாதிப்புகளை ஏற்படுத்துகிறது என்பதை மறுப்பதற்கில்லை.

பிரசாரங்களை முன்னெடுப்பதன் மூலமாகவும், தாராளமாக நிதியைச் செலவிடுவதன் மூலமாகவும் கடந்த பத்தாண்டு காலத்தில் இலங்கையர் சமூகத்தின் சிந்தனைப் போக்கில் ஒரு மாற்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இலங்கையின் செய்திப் பத்திரிகைகள் பலவற்றிலும் இத்தகைய அரச சார்பற்ற நிறுவனங்களின் ஊடுருவல் இருப்பதாகத் தெரிகிறது.

அத்துடன் சில ஆங்கிலப் பத்திரிகைகள் இத்தகைய அரச சார்பற்ற நிறுவனங்களின் ஊதுகுழலாகவே மாறிப்போயிருக்கின்றன.

இவை மேற்கொண்டுவரும் பிரசாரத்தின் கருப்பொருள் சமாதானம் அத்துடன் தமிழர் பிரச்சினைக்கு நியாயமான தீர்வு காணப்படுதல் என்பதாகவே இருக்கிறது. இந்தப் பிரசார சாதனங்களில் சமாதானம் எவ்வளவு அழகானது, இனிமையானது என்பது வலியுறுத்தப்படுவதோடு, இலங்கையில் போர் ஏற்படுத்திய அழிவுகள் அவலங்கள் பற்றிச் சித்தரிக்கப்பட்டிருக்கும்.

போர் கொடுமையானது என்பதையும் சமாதானம். இனிமையானது என்பதையும் சாதாரணமாக எவரும் நன்கறிவர். ஆனால், உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சக்திகளின் நிகழ்ச்சித் திட்டங்களிலிருந்து நாங்கள் விடுபட்டுக் கொள்ளும் வழி என்ன என்பதுதான் எமது தேவையாகும். அதனால் போர் கொடுமையானது எனவும், சமாதானம் நன்மையானது எனவும் பிரசாரப்படுத்துவதற்காக அரச சார்பற்ற நிறுவனங்கள் அதிகளவு முயற்சிப்பது அநாவசியமானது. ஆனால் இந்தப் பிரசாரத்தின் மூலமாக சமாதானத்தின் காவலர்கள் அல்லது சமாதானம் பற்றிப் பேசுபவர்கள் அதிகாரம் தமக்கு மட்டுமே உரியதாகக் காட்டி, சமாதானத்தின் ஏகபோக உரிமையை அவர்கள் தமக்கு உரியதாக்க முயற்சிக்கின்றனர். இந்தப் போக்கில் நீங்களும் இணைக்கப்பட்டுவிட்டால், பின்னர் நீங்களும் சமாதானத்தின் பெயரால் எதையும் செய்யலாம். பயங்கரவாதத்தைப் புகழ்ந்தபடி அவர்களுக்குப் புகலிடம் அளிப்பதைக் கூட எவரும் சந்தேகப்பட மாட்டார்கள். சிலவேளை சமாதானத்தை நிலைநாட்டுவதற்கு அப்படியும் ஒரு வழி இருப்பதாகவும் சிந்திக்கப்படலாம். இந்த வகையான அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடு மூலமாக புலிகளின் பல்வேறு தவறுகள் மூடி மறைக்கப்படுகின்றன- ஏற்றுக்கொள்ள வைக்கப்படுகின்றன- புலிகளின் குற்றச் செயற்பாடுகளால் உள்ளூர் மற்றும் சர்வதேச சமூகம் பாதிக்கப்பட்டு வருகின்ற போதும் கூட.

இந்த அரச சார்பற்ற நிறுவனங்கள் போராட்டத்தை ஆதரித்துப் பிரகடனம் செய்வதோடு, தமிழ்ப் பிரச்சினையை நியாயப்படுத்தவும் செய்கின்றன. ஆனால், எந்தவொரு நியாயமான போராட்டமும் நியாயமற்ற வகையில் எவரையும் கொன்றுவிடுவதற்கு அனுமதிக்காது என்பது நிச்சயம். இந்த யுத்தத்தோடும், அரசியல் விவகாரங்களோடும் எந்தவிதத்திலும் தொடர்பில்லாத சிங்களக் கிராமவாசிகள் சுமார் 6,000 பேர் வரையில் படுக்கையில் வைத்தே படுகொலை செய்யப்பட்டனர். இதை விட அதிகமான தமிழர்கள் புலிகளின் தலைமைக்கு விசுவாசம் தெரிவிக்காமைக்காக கொல்லப்பட்டுள்ளனர். இந்த வேளையிலும், தேசிய சமாதானப் பேரவையின் பணிப்பாளரைக் கேட்டால், உள்ளக சுயாட்சியை புலிகளுக்கு வழங்கிவிடும் சட்டத்தை நெருங்கி இருப்பதாகவும், சமாதானத்தை நிலைநிறுத்த வேறு வழியில்லை எனவும் அவர் உங்களுக்குக் கூறுவார்.

அவர்களது பிரசார வெளியீடுகளில் தொண்ணூறு சதவீதமானவை ஆங்கிலத்தில் அல்லது சிங்களத்தில் தான் காணப்படுகின்றன. தமிழில் மிகக் குறைவு. தமிழர் பிரதேசத்தில் தான் போர் என்பது உண்மையாக இருந்தால் அப் பிரதேசத்திலேயே சமாதானம் தொடர்பான பிரசாரங்கள் அதிகமாக இடம்பெறவேண்டும் என்பது பொதுவான எதிர்பார்ப்பு ஆகும். ஆனால், பிரபாகரனின் நிலைப்பாடு என்பது வட பகுதியில் தன்னை நிலைநிறுத்திக் கொண்டு தென்பகுதிக்குள் ஊடுருவி வருவதாகவே இருக்கிறது.

இந்தப் பிரசாரகர்கள் சமாதானத் தோற்றப்பாட்டை இலங்கைச் சமூகத்தின் மத்தியில் ஏற்படுத்தியுள்ளனர். எமது நாளாந்த வாழ்வில் பயன்படுத்தப்படும் சொற்களின் அர்த்தம் கூடத் திரிபுபடுத்தப்படுகிறது. உதாரணமாக இலங்கையில் பயங்கரவாதிகளுக்கு எதிரான ஆயுதக் களைவு நடவடிக்கைக்கு "போர்" எனப் பெயர் சூட்டப்படுகிறது. இது உள்ளூர் மக்கள் மத்தியில் மனோரீதியான தாக்கத்தை ஏற்படுத்துகிறது. ஆக்கிரமிக்கும் எண்ணத்துடன் பேராசை கொண்ட ஒரு அரசு இன்னும் ஒரு நாட்டின் மீது மேற்கொள்ளும் தாக்குதலே பொதுவாக போர் எனக் குறிப்பிடப்படுவதாகும். இந்தப் பிரசாரகர்கள், நாட்டு மக்களில் 52 சதவீதமானவர்கள் போர் நடப்பதை விரும்பவில்லையென தமது ஆய்வுகள் மூலம் தெரியவருவதாக பிரகடனம் செய்கின்றனர். இத்தகைய அறிக்கைகள் ஆடம்பரமாக வரவேற்கப்படுவதுடன் தவறாக வழிநடத்துபவையாகவும் இருக்கின்றன. உதாரணமாக தெருவில் போய்க் கொண்டிருக்கும் ஒருவரிடம் "நீங்கள் போரை விரும்புகிறீர்களா?" எனக் கேள்வி எழுப்பினால் அவர் மிகுந்த பதற்றத்தோடு வேண்டாம் என்றே நிச்சயமாகப் பதில் அளிப்பார்.

ஆனால், அதே நபரிடம் மிகுந்த பவ்வியமாக, "பயங்கரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கைகள் தொடரப்பட வேண்டுமா?" எனக் கேட்டால் அவர் நிச்சயமாக "ஆம்" என்றே பதிலளிப்பார் என எதிர்பார்க்கலாம். ஆகவே, ஆய்வுகளை நடத்துபவர்கள் தமக்கு விருப்பமான பதில்களைப் பெறக் கூடிய வகையிலேயே கேள்விக் கொத்துக்களைத் தயார் செய்கின்றனர் என்பதை புரிந்துகொள்ள வேண்டும்.

மறுபுறத்தில் 52 சதவீதமானோர் போர் நடப்பதை விரும்பவில்லை என்றால் மிகுதியான 48 வீதமானோர் போர் நடப்பதை விரும்புகின்றனரா? போர் நடப்பதை நியாயப்படுத்தும் முட்டாள்தனத்தை இந்த நாட்டில் எவருமே விரும்பமாட்டார்கள். ஏனெனில் அது அழிவுகளுக்கு மட்டுமே வழிவகுக்கும். சமாதானம் என்பதற்குப் பதிலாக போரை விரும்புபவர்கள் வெளிநாடுகளில் அரசியல் புகலிடம் கோரும் எண்ணம் கொண்டவர்களாக இருக்கலாம். ஆனால், 52 சதவீதமானவர்கள் போர் நடப்பதை விரும்பவில்லை எனக் கூறும் பிரசாரகர்கள் எதனைக் கருதுகின்றார்கள் எனின் இப் பிரச்சினைக்குப் போர் மூலம் தீர்வு காணலாம் என்பதை நம்பவில்லை என்பதையே. ஆனால், போர் மற்றும் சமாதானம் என்ற வார்த்தைகள் பயன்படுத்தப்படும் விதம், இணக்கத் தீர்வு காணுதல் மற்றும் பயங்கரவாதிகளைக் கட்டுப்படுத்த படைபலத்தை பயன்படுத்துவதை நாகரிகமற்ற போர் எனக் கருதிக் கண்டனம் செய்தல் என்பவற்றுடன் இணைத்துக் குழப்பப்படுகிறது.

"சமாதானத்தை விரும்புகின்ற எவரும் யுத்தத்தை எதிர்கொள்ளத் தயாராக இருக்க வேண்டும்" இது இங்கிலாந்தின் பிரதமர் வின்சன்ட் சேர்ச்சில் கூறிய ஒரு கூற்றாகும். உலகின் சமாதானம் மிகவும் நெருக்கடிக்கு உள்ளாகியிருந்த ஒரு காலப்பகுதியில், ஹிட்லரைத் தோற்கடித்து சமாதானத்தை நிலைநாட்டிய பெருமைக்கு உரியவர் அவர். ஆக்கிரமிப்பாளர்களும் சந்தர்ப்பவாதிகளும் மலிந்துள்ள இன்றைய உலகில் குழப்பங்களையும் நிச்சயமற்ற தன்மைகளையும் எதிர்கொள்வதற்காக ஒரு கூட்டுச் செயற்பாடு அவசியம். அதன் மூலமாகவே அராஜகம் மற்றும் அமைதியற்ற சூழல் என்பவற்றைத் தடுக்க முடியும். எமது இந்த விருப்பத்தைப் பூர்த்தி செய்வதற்காக இரக்கமற்ற- கொடூரமான- மனித நாகரீகத்துக்கே புறம்பான வகையில் செயற்படுகின்ற ஒரு இயக்கத்துடனா பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட வேண்டும்? உலக அரங்கில் மிகக் கொடூரமாகச் செயற்படும் பயங்கரவாதிகளுக்கு ஒரு சட்டபூர்வ அந்தஸ்தைப் பெற்றுக் கொடுத்ததைத் தவிர, புலிகளுடன் பேசியது மூலம் இலங்கை அரசாங்கம் மக்களுக்குப் பெற்றுக் கொடுத்துள்ளது என்ன?

ஆயுதக் களைவு குறித்து ஒருசொல் தானும் வாக்குறுதி பெறப்படாமல் முன்னைய அரசாங்கம் தடையை நீக்கியதையடுத்துப் புலிகள் அதி உச்சகட்டப் பலனைப் பெற்றுக்கொண்டனர்.

மறுபுறத்தில் இணக்கத் தீர்வு ஒன்றைக் காண விரும்புபவர்களுடன்தான் பேச்சுவார்த்தைகளைத் தொடர முடியும்.

பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்குப் பேச்சுவார்த்தைகள் நடத்துவதை ஒரு வழிமுறையாகப் புலிகள் விரும்புகின்றனரா?

பிரபாகரன் தனது அரசியல் வழிகாட்டியான அமிர்தலிங்கம், தனது இயக்கத்தின் முன்னைய தலைவரான உமா மகேஸ்வரன், தனது துணைத் தளபதியான மாத்தயா ஆகியோர் உட்பட தனது சகாக்கள் பலரை ஆயுத பலத்தின் மூலமும் அடக்குமுறை மூலமும் அகற்றியிருக்கின்றார். அவரது அண்மைய நடவடிக்கைகள் பதினைந்து ஆண்டுகளாக இணைந்து செயற்பட்ட கருணாவுக்கு எதிராக உள்ளன. கருணாவைக் கொல்லும் முயற்சியில் சுமார் 300 தமிழ் இளைஞர்கள் கொல்லப்பட்டுள்ளதுடன், கிழக்கிலிருந்து சுமார் 10,000 குடும்பங்கள் வெளியேறியுள்ளமையானது பிரபாகரனுக்கு பேச்சுவார்த்தைகள் மீதுள்ள நம்பிக்கையை வெளிப்படுத்துவதாகாது. இலங்கை அரசாங்கமானது, திரும்பத் திரும்ப் மாற்றுத் தரப்புக்களை வன்முறை மூலம் பலவீனப்படுத்தும் ஒரு தரப்புடன் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்த முடியாது. இது காட்டுமிராண்டிகளுக்குச் சோறும் கறியும் பரிமாறுவதற்கு ஒப்பானதாகவே இருக்கும்.

இலங்கை அரசாங்கத்தை இராணுவ மற்றும் இராஜதந்திர ரீதியில் வென்று விடுகின்ற நோக்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தப் புலிகள் முனைகின்றனர். அந்த நிலையை எட்டியதும், அவர்கள் பழைய பாதைக்கே திரும்பிவிடுவார்கள். அப்போது மூன்றாம் தரப்போ அனுசரணையாளர்களோ அவர்களுக்குத் தேவைப்படப்போவதில்லை. நாடு போர்ச் சூழலுக்குள் சிக்குண்டு இருக்கும்போது அவர்கள் வீட்டில் அமைதியாக இருக்கக் கூடும்.

இந்த உண்மையை மூடி மறைப்பதற்காகவே இப் பிரசாரகர்கள் பேச்சுவார்த்தைகளை சமாதான நடைமுறை எனப் பெயரிடுகின்றனர். பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவதென்பது சமாதானத்தை நிலைநாட்டுவதற்கான ஒரு வாய்ப்பாகவே இலங்கை மக்களுக்கு அவர்கள் காட்டுகின்றனர். சமாதான நடைமுறை என்பதன் மூலமாக, புலிகள் தொடர்பாக நீடிக்கும் அச்சம் அகற்றப்படுவதாகக் கூறுகின்றனர். இது பசியோடு இருப்பவனுக்குச் சமையல் நடந்து கொண்டிருப்பதைக் காட்டி, சாப்பிடும் நடைமுறை ஆரம்பமாகிவிட்டதாகக் கூறுவதற்கு ஒப்பானதாகும். அதிலும் நஞ்சு கலந்த உணவைத் தயாரித்தபடி, சாப்பிடும் நடைமுறை ஆரம்பமாகியுள்ளதாகக் கூறுவது மிக மோசமானதாகும். மேலும், என்ன சமைக்கப்படுகிறது என்பது தெளிவாக்கப்பட்டால் சாப்பிடுவதற்கு எவரும் தயக்கம் தெரிவிக்கப்போவதில்லை. ஏனெனில் சாப்பிடும் நடைமுறையின் விளைவு என்பது சாப்பிடுவதுதான். இதேபோல சமாதான நடைமுறைகளில் காணப்படும் இணக்கம் நடைமுறைப்படுத்தக் கூடியதாக இருக்க வேண்டும். ஏனெனில் இது சமாதானத்தின் பெயரால் மேற்கொள்ளப்படுகிறது.

> **பிரபாகரன் தனது அரசியல் வழிகாட்டியான அமிர்தலிங்கம், தனது இயக்கத்தின் முன்னைய தலைவரான உமா மகேஸ்வரன், தனது துணைத் தளபதியான மாத்தயா ஆகியோர் உட்பட தனது சகாக்கள் பலரை ஆயுத பலத்தின் மூலமும் அடக்குமுறை மூலமும் அகற்றியிருக்கின்றார். அவரது அண்மைய நடவடிக்கைகள் பதினைந்து ஆண்டுகளாக இணைந்து செயற்பட்ட கருணாவுக்கு எதிராக உள்ளன. கருணாவைக் கொல்லும் முயற்சியில் சுமார் 300 தமிழ் இளைஞர்கள் கொல்லப்பட்டுள்ளதுடன், கிழக்கிலிருந்து சுமார் 10,000 குடும்பங்கள் வெளியேறியுள்ளமையானது பிரபாகரனுக்கு பேச்சுவார்த்தைகள் மீதுள்ள நம்பிக்கையை வெளிப்படுத்துவதாகாது.**

இத்தகையதொரு சூழலில் சமாதான நடைமுறை என்பதன் விளைவு, புலிகளின் இடைக்கால நிர்வாக யோசனைக்கு ஒப்புதல் வழங்கி எல்லைகளில் நீண்ட போர் நடைபெறுவதற்கு வழிவகுப்பதை அமைதியாக அனுமதிக்க முடியும் என்று எவரும் கருதலாமா?

முடிவாக, பத்து ஆண்டு காலமாக இந்தப் பிரசாரகர்கள் மேற்கொண்டு வரும் சமாதானம் என்பதன் விளைவு பற்றி மதிப்பீடு செய்யலாம். 21 வருட காலமாக நீடித்து வரும் நெருக்கடி நிலைமையை இரு கட்டங்களாக வகுக்கலாம். பயங்கரவாதத்துக்கு எதிராக பயங்கரவாதிகளை நிராயுதபாணிகளாக்கும் நடவடிக்கைகள் பதினொரு வருடங்கள் 1983-94வரை நீடித்தது. அடுத்த பத்தாண்டுகளில் சமாதானத்துக்கான போர் அல்லது அரசியல் தீர்வு காண்பதற்கான போர் 1994-2004 வரை நடத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது.

ஒப்பிட்டுப் பார்த்தால் பிரசாரங்களுடன் கூடிய சமாதானத்துக்கான போர் நடைபெற்ற காலத்தில்தான் அதிகளவு இழப்புக்கள் நேரிட்டன. என்பதைக் கண்டுகொள்ளலாம். புலிகள் இப்போது சுமார் 15,000 பேரைக் கொண்ட பலம்பெற்ற அணியாகவுள்ளனர். 1994இல் இந்த எண்ணிக்கை சுமார் 3,000 வரை இருந்திருக்கும்.) இடைக்கால நிர்வாகம் தரப்படாவிட்டால் யுத்தத்தில் ஈடுபடப்போவதாக அவர்கள் அச்சுறுத்துகின்றனர்.

1993இல் பிரேமதாசா பயங்கரவாதிகள் ஒவ்வொருவரும் தமிழராக இருக்கும் போதும், தமிழர்கள் எல்லோரும் பயங்கர வாதிகள் அல்ல என்ற நிலைப்பாட்டைக் கொண்டிருந்தார். தமிழர்களின் ஏகப்பிரதிநிதிகள் தாமே என்று புலிகள் உரிமை கோருகின்ற மையானது இந்த நிலையில் குறிப்பிடத்தக்க மாற்றமுள்ளதாகும். தமிழர்களில் பலர் புலிகளுக்குப் பின்னால் அணி திரண்டுள்ளதையே காட்டுவதாகும். எப்படியிருந்தபோதும் புலிகளின் பலம் என்பதை தற்போதைய நிலையில் இருந்து மட்டும் மதிப்பிட்டுவிட முடியாது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்பது எம்.எச்.எம். அஷ்ரப் தலைமையில் சமாதானப் பேச்சுக்களில் ஒரு தரப்பாகப் பங்கேற்பதற்காக சம்பிரதாய பூர்வமற்ற வகையில் நிறுவப்பட்டது. வடக்கு-கிழக்குச் சுயாட்சி தொடர்பாக பேச்சுக்கள் நீடித்துச் சென்றபோது முஸ்லிம் மக்களின் நலன்களைப் பேணுவதற்கான கட்சியொன்றின் தேவை எம்.எச்.எம். அஷ்ரப் அவர்களால் உணரப்பட்டது. இப்போது முஸ்லிம் காங்கிரஸ் இன ரீதியாக ஒருங்கிணைக்கப்பட்ட சக்தியாக அரசாங்கங்களுடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுகிறது. இப்போது சிங்கள மக்களும் குறிப்பாக பௌத்த சிங்கள மக்களும் அரசில் இருந்து அந்நியப்பட்டவர்களாக உணர்கின்றனர். சமாதானம் என்பதற்காக புலிகளுக்கு அளவுக்கு அதிகமான விட்டுக்கொடுப்பு செய்யப்படுவதாகக் கருதுகின்றனர். இது தேசியப் பாதுகாப்பையும் சிங்களவர்களின் பாதுகாப்பையும் அச்சுறுத்துவதாக நம்புகின்றனர்.

இது சிங்களக் கட்சிகளையும், சிங்களப் பௌத்தர்களையும் ஜாதிகஹெல உறுமயவின் பின்னால் அணி திரள வைத்துள்ளது. பத்து வருட சமாதானப் பிரசாரங்களுக்குப் பின்னால் இன்றுள்ள நிலைமை 1994இல் இருந்ததை விடச் சிக்கலானதாகியுள்ளது. விடயங்கள் இதே போக்கில் போக அனுமதிக்கப்பட்டால் சமாதானப் பிரசாரங்களின் போர்வையில்- பிரிவினைக்கு ஆதரவு காட்டப்பட்டால் மத அடிப்படைவாதம் போன்றவை மேலும் தலைதூக்கும். தேசிய அபிலாஷைகளை விட ஏனைய நலன்கள் மேலோங்கும். சமாதானம் நிலைக்கும் என்ற எண்ணம் சுருங்கும். நாடு முழுமையும் சமாதானப் பிரசாரத்தின் பாதக விளைவுகளைச் சுமக்கும்.

**ஆக்கம் : பாலித சேனநாயக்க.**

# கவிஞர் வாலி எழுதுகிறார்!

## -வாழ்க்கை சரிதம்-

மயிலாப்பூர் மாடத் தெருவில் ஒரு மாடியில் கலியபெருமான் என்ற ஓர் எழுத்தாளர் படத் துறையில் தனக்கென்று ஓர் இடத்தை எப்படியும் பிடித்தே தீருவது என்று பிரும்மப் பிரயத்தனத்தோடு அதற்கான வழிமுறைகளில் ஈடுபட்டிருந்தார்.


இந்தக் கலியபெருமாள் என்னுடைய ஊர்க்காரர். அந்நாளைய திரை இசைக் குயிலாகவும், தேர்ந்த நடிகையாகவும் திகழ்ந்த திருமதி யூ.ஆர்.ஜீவரத்தினம் அவர்களின் உறவினர்.

நல்ல எழுத்தாளராகிய கலியபெருமாள், கவிஞர் திரு.எஸ்.டி.சுந்தரம் அவர்களோடு 'சாரங்கதாரா' 'மனிதனும் மிருகமும்' 'கள்வனின் காதலி' முதலிய படங்களில் உதவியாளராகப் பணிபுரிந்தவர். திருஎம்எஸ்விஸ்வநாதன், திரு.ஜி.கே.வெங்கடேஷ் முதலிய புகழ்வாய்ந்த இசையமைப்பாளர்களுக்கு மிக மிக நெருக்கமான நண்பராகவும் திகழ்ந்தவர்.

நான் சென்னையில் சினிமா வாய்ப்பிற்காகப் பல சிரமங்களை ஏற்றுப் போராடிக் கொண்டிருந்த நாளில் பெரும்பாலான நேரத்தை நண்பர் கலியபெருமாளின் அறையில்தான் கழிப்பேன்.

அனேகமாக வாரத்தில் நான்கு நாட்கள், அங்கு காலை பத்து மணி முதல் மாலை ஏழு மணி வரை சீட்டாட்டக் கச்சேரி இடைவிடாது நடைபெறும். அங்கு சந்தித்துக் கொள்ளும் பல கலைஞர்கள், பரஸ்பரம் தங்கள் கஷ்ட நஷ்டங்களைப் பேசித் தீர்த்துக்கொள்வார்கள். 'கீழ்வானம் ஒரு நாள் வெளுக்கும்' எனும் நம்பிக்கை அனைவரின் விழிகளிலும் அப்பியிருக்கும். அவர்களோடு பொழுதைக் கழிப்பது எனக்கும் ஆறுதலாக இருந்தது.

அங்கு எங்களோடு சேர்ந்து சீட்டாடுவதற்கென்றே சூளைமேட்டிலிருந்து ஒரு நாடக நடிகர் அன்றாடம் சைக்கிளில் மயிலாப்பூருக்கு வருவார். அப்போது அவர் படங்களில் சின்ன சின்ன வேஷங்கள் செய்து கொண்டிருந்தார். மனைவி குழந்தைகளோடு குடித்தனம் நடத்திக்கொண்டிருந்த அந்த நடிகருக்கு உள்ளத்தில் ஏகப்பட்ட உளைச்சலிருந்தாலும், வெளிக்காட்டிக்கொள்ளாமல் வாய் விட்டுச் சிரிக்கின்ற பக்குவம் கைவந்த கலையாக இருந்தது.



என்னுடன் சீட்டாடும் போதெல்லாம் அவர், "வாலியண்ணே! நாமெல்லாம் ஒரு காலத்துல இந்த சினிமாவைப் பிடிக்கத்தான் போறோம்.... பார்த்துக்கிட்டேயிருங்க, நான் இப்ப சொல்றது அப்புறம் பலிக்கத்தான் போவுது..." என்று சொல்லி தொய்ந்து போன என் நரம்புகளை முறுக்கேற்றி விட்டுக்கொண்டேயிருப்பார்.

அவர் வார்த்தைகள் பொய்க்கவில்லை. அவரையும் என்னையும் திரையுலகம் ஐந்தாண்டுகளுக்குப் பிறகு நட்சத்திர அந்தஸ்திற்கு உயர்த்தியது.

அந்த நடிகர் என்னுடைய அருமை நண்பர் அமரர் திரு. முத்துராமன் ஆவார்.

நான் கோபியுடன், அவர் பங்கேற்கும் படப்பிடிப்பிற்குச் செல்வதுண்டு. அப்போது, கோபி நான்கைந்து படங்களில் கதாநாயகனாக நடித்துக் கொண்டிருந்தார்.


கோல்டன் ஸ்டூடியோவில் 'தாமரைக்குளம்' என்று ஒரு படம் தயாராகிக் கொண்டிருந்தது. கோபிதான் அதன் கதாநாயகன் திருமதி.சௌகார்ஜானகி கதாநாயகி. திரு.எம்.ஆர்.ராதா முதலானோர் பங்கு பற்றிய அந்தப் படத்தின் இயக்குநர் திரு.முக்தா ஸ்ரீநிவாசன். அந்தப் படப்பிடிப்பில் ஒரு புதிய இளம் நடிகரை கோபி எனக்கு அறிமுகப்படுத்தி வைத்துவிட்டு, ஷாட் ரெடியாகிவிட்டதால் நடிப்பதற்காக உள்ளே சென்று விட்டார்.

நானும் அந்தப் புதுமுக நடிகரும் மரத்தடியில் நின்று பேசிக்கொண்டிருந்தோம். மிக மிக ஒல்லியான உருவம். சினிமாவிற்கே அவசியமான கவர்ச்சி என்பது சிறிதளவும் இல்லாத முகம். ஆயினும் படித்தவராக இருந்ததால், அவர் விழியிலும் வார்த்தையிலும் ஓர் அறிவு தீட்சண்யம் இருந்தது. அவருடைய உருவ அமைப்பை வைத்து, இவர் எதை நம்பி சினிமாவில் தன் எதிர்காலத்தைத் திட்டமிடுகிறார் என்ற எண்ணத்திலேயே அவரிடம் பேச்சைக் கொடுத்தேன். அறிமுகமாகி ஒரு நிமிடமே ஆகியிருந்தும் அவர் என்னிடம் மனம் விட்டுப் பேசினார்.

"மிஸ்டர் வாலி....என் சொந்த ஊர் தாராபுரம்....என் பேரு குண்டுராவ். நான் ரெயில்வே டிபார்ட்மெண்டுல கைநிறைய சம்பளத்தோட ஆனந்தமா இருந்தவன். இருந்தாலும் இந்த நடிப்பு ஒரு பித்தாகவே மாறி, என்னுடைய சிந்தனையை முழுநேரமும் ஆக்கிரமிச்சுடுச்சு..... நாடகங்கள்லேயும் நடிச்சிக்கிட்டிருக்கிறேன்.

(தொடரும்.....)






அந்நாளில் எனது தாயாரைப் பற்றி நினைப்பதற்கும் அவர் பற்றிய ஞாபகங்களை அசைபோடுவதற்கும் எனக்குக் கிடைத்த ஒரே நேரம் அதுதான். நல்ல வேளை! எனக்குத் தண்டனை கிடைத்ததைக் கேட்பதற்கு எனது தாயார் அவர்கள் உயிருடனிருக்கவில்லை. அதற்கு நான் நன்றி செலுத்துவது இது முதல் தடவையல்ல. எனக்கு நல்ல கல்வியை வழங்குவதற்காக எனது தாயார் மேற்கொண்ட தியாகங்கள், அவரால் கொடுக்கக் கூடிய ஒரு நல்ல ஆரம்பம். எனது தந்தையார் அவர்கள் இறக்கும்போது 500 பவுண் கடனிருந்தது. ஆகவே, செலவைச் சரிக்கட்டுவதற்காக எனது தாயார் வெளியே போய் உழைக்க வேண்டி இருந்தது. வாழ்வின் பிந்திய காலத்திலாவது ஒரு வசதியான வாழ்க்கையை எனது தாயாருக்குக் கொடுக்க நான் முயற்சித்தேன். ஆயினும், அவருக்கு நான்பட்ட கடனை முழுமையாக அடைப்பதற்கு என்னால் முடியவில்லை.

'Jesu Joy Of Man's Desiring' - 'ஏசு மனித ஆசையின் இன்பம்' எனும் வாசகத்துடன் ஆராதனை முடிவுற்றது. மேரியும் நானும் பிஷப்பைப் பின் தொடர்ந்தோம். இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்ட இசைக் கலைஞர்கள் சர்ச்சின் பக்கவழியால் வெளியேறினர். நாம் மத குருமார் ஆடை மாற்றும் அறையை அடைந்ததும் ஜோர்ஜ் எம்முடன் உடனே இணைந்துகொள்கிறார். பத்திரிகையாளர் ஒருவர் பெல்மார்ஷுடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு, நான் ஓல்ட் விக்காரேஜிற்குத் திரும்புவதற்கு எவ்வாறு அனுமதிக்கப்பட முடியும்? என்று கேட்டிருக்கிறார்.

"நீங்கள் இங்கு வைத்தே பிரியாவிடை பெற்றுக்கொள்ள வேண்டிவருமென நான் அஞ்சுகிறேன். ஆணையாளர், நீங்கள் மீண்டும் வீட்டுக்குப் போகக் கூடாதென்று ஃபோனில் தெரிவித்தார்". அதற்குப் பிறகு ஆராதனையில் கலந்துகொண்ட அனைவருடனும் கைகுலுக்குகிறேன். அதிலும் குறிப்பாக டொனால்ட் மற்றும்

**தமிழில் தருவது ஜெஃப்ரி ஆர்ச்சர்**

டயானாசின்டன் இருவரது பிரசன்னமும் எனது இதயத்தைத் தொட்டது. அவர்கள் இருவரும் எனது தாயாரின் அன்புக்குப் பாத்திரமானவர்கள்.

பிஷப்புக்கு நன்றி தெரிவித்த பிற்பாடு கென்ட்லூப் ஃபார்ம் அருகே நிறுத்தப்பட்டிருக்கும் சிறைச்சாலை வேனை நோக்கிய எனது மெதுவான நடையில் எனது குடும்பமும் சேர்ந்து கொள்கிறது.

(பக்கங்கள் வளரும்)

# மணப்பெண்கள் இறக்குமதியில் இந்தியாவும் சீனாவும்

இந்தியாவும் சீனாவும் உலகில் அதி கூடிய சனத்தொகையைக் கொண்ட நாடுகளாகும். இந்த இரு நாடுகளும் தற்போது ஒரு பிரச்சினையை எதிர்நோக்கியுள்ளன. அதாவது நாட்டின் ஆண்களது தொகை அதிகமாம்.

இதனால் திருமணம் முடித்துக்கொள்வதற்காக மணப் பெண்களை இறக்குமதி செய்ய வேண்டிய நிலையேற்பட்டுள்ளதாகத் தகவல்கள் கூறுகின்றன.

ஆண்களின் தொகை அதிகரித்து வருவதால் அவர்கள் பெரியவர்களானதன் பின்னர் திருமணம் செய்துகொள்வதற்குப் பெண்கள் பற்றாக்குறை நிலவுகின்றதாம்.

சீன அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ அறிக்கைகளின்படி கடந்த காலங்களில் பெண்களை விட வருடமொன்றிக்கு இரண்டு மில்லியன் ஆண்கள் பிறக்கின்றனராம்.

ஆண்களுக்கும் பெண்களுக்குமிடையில் இவ்வாறானதொரு விகிதாசார இடைவெளி நிலவுமாயின் எதிர்காலத்தில் மானசீக நோய்கள் உருவாகலாம் என 'பெயா பிரான்ச்சஸ்' நூல் அச்சுறுத்தியுள்ளது.

மேற்படி நூலை எழுதியுள்ள என்ட்ரியா டென் போஞர் பி.பி.ஸி.யின் 'எவ்ரி வுமன்' நிகழ்ச்சியில் கலந்துகொண்டு இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"இந்தியாவின் கடந்த காலத்தை நோக்கும் போது இவ்வாறான நிலைமையை காண இயலும். பெண் குழந்தைகள் பிறந்தவுடனேயே கொன்றுவிடும் சம்பவங்கள் மலிந்து கிடந்த காலத்தில் பெண்கள் தொகை மிகவும் குறைவாகக் காணப்பட்டது. அக் காலகட்டத்தில் இதன் பிரதிபலனாக கோத்திரங்களுக்கிடையில், குலங்களுக்கிடையில், இனங்களுக்கிடையில் பயங்கர யுத்தங்கள் ஏற்பட்டன. சீனாவில் 1850இல் 'சீ பாய்' பகுதியில் நிகழ்ந்த சம்பவங்களும் இதற்கோர் உதாரணமாகும். அக்கால கட்டத்தில் இப் பகுதியில் 100 பெண்களுக்கு 129 ஆண்கள் இருந்துள்ளனர். இராணுவப் பயிற்சிகளைப் பெற்றிருந்தபோதிலும் தொழில் வாய்ப்புக்கள் இன்மையால் இவர்கள் கொள்ளையர்களாக மாறினர். இந்த நிலையானது பாரிய கிளர்ச்சிப் படையாக மாறியதுடன் படிப்படியாக இவர்கள் சீனாவின் பாரிய பூமிப் பகுதியைக் கைப்பற்றிக்கொண்டனர்."

இந்தியாவிலும், சீனாவிலும் ஆண் குழந்தைகள் பிறப்பதையே அதிகம் விரும்புகின்றனர். பெண் குழந்தைகள் பிறந்தால் ஒன்று கொன்று விடுகின்றனர். அல்லது ஸ்கேன் செய்து பார்த்துவிட்டு பெண் குழந்தை என்றால் கருக்கலைப்பு செய்து கொள்கின்றனர். இவ்விரு நாடுகளிலும் ஆண் குழந்தைகளின் பால் அதீத விருப்பு காட்டுவதானது தொன்றுதொட்டு வரும் ஒரு யுகமாகவே இருக்கிறது. இந்தியாவில் ஆண் குழந்தை வேண்டுமென்றால் திருமணமான பெண்களை பால் கொண்டு குளிப்பாட்ட வேண்டும் என்றொரு வழக்குமொழி இந்தியில் இருக்கிறது. அதே நேரம் சீனப் பழங்குடிகள், பெண் குழந்தைகள் துரதிர்ஷ்டத்தைக் கொண்டுவருவதாகக் கூறுகின்றனர்.

இவ்வாறான நாடுகளில் ஆண்களின் தொகை அதிகரிப்பதன் மூலம் பல்வேறு சமூக-வாழ்க்கைப் பிரச்சினைகள் தோன்றுவதாக சமூக ஆய்வாளர்கள் கருத்துக்களை வெளியிட்டுள்ளனர். இதே நேரம் சமூகத்தில் இடம் பெறுகின்ற குற்றச் செயல்களில் அநேகமானவை ஆண்களால் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிய வந்துள்ளது.

இந்த நிலைப்பாட்டை சீன அரசு ஏற்றுக் கொண்டுள்ளது. சீனாவில் இன்றைய நிலையில் 117 ஆண்களுக்கு 100 பெண்கள் என்ற வீதத்திலான இடைவெளி காணப்படுகின்றது. தென் சீனாவின் ஹினான் பகுதியின் நிலை இதை விட பாரதூரமானதாகவே காணப்படுகின்றது. அதாவது இங்கு 135 ஆண்களுக்கு 100 பெண்களே இருந்து வருகின்றனர்.

இவ்வாறான நிலையில் இந்த நாடுகளில் விபசாரத் தொழில் நாளுக்குநாள் அதிகரித்து வருவதை அவதானிக்க முடிகின்றது. ஆண்களின் பாலியல் தேவைகளுக்கேற்ப விபசார தொழில் பல மட்டங்களில் வியாபித்து வருவதாக அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர். இதன் மூலம் அதிக வருவாய் கிட்டும் ஒரு காரணத்தால் பாடசாலை மாணவிகள் முதல் பல்வேறு துறைசார்ந்த பெண்கள் கூட தங்களது பகுதி நேர வருமானங்களை இவ்வழியிலேயே ஈட்டிக்கொள்கின்றனர்.

அடுத்ததாக சட்ட விரோதமான வழிகளில் இந் நாடுகளுக்குப் பெண்கள் இடம் பெயர்ந்து வருவதும் அதிகரித்துக் காணப்படுகின்றது.

மேலும், இன்னொரு பயங்கரமான நிகழ்வும் இடம் பெற்று வருகிறது. அதாவது, பல ஆண்களது பாலியல் தொடர்புகளுக்கு ஒவ்வொரு பெண்ணும் பழக்கப்பட்டுக் கொண்டுள்ளதாகும்.



ஒரு பெண், பல ஆண்களுடன் பாலியல் உறவுகளைக் கொள்வதானது சமூக, சீரழிவுக்கும் பல்வேறு நோய்கள் பரவுவதற்கும் ஏதுவாகின்றது என சமூக அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

விரைவில் சீனாவின் நகர்ப் பகுதிகளில் வெளிநாட்டுப் பெண்கள் இறக்குமதி இடம் பெறவுள்ளதாகவும், அதனால் சீனாவின் அந்நியச் செலாவணி வெளிநாடுகளை நோக்கி இழுபட்டுச் செல்லக் கூடும் என்றும் அந் நாட்டு உயரதிகாரிகள் எச்சரிக்கை விடுத்து வருகின்றனர்.

பி.பி.ஸி.யில் ஒரு கலந்துரையாடலில் கலந்துகொண்ட புதுடில்லி ஊடக நிருபர் திருமதி ஜில் மெக்ஹி பெரின் கருத்துக் கூறும்போது, ஹரியானா பகுதியில் தான் சந்தித்த ஒரு குடும்பத்தில் உள்ள இளைய புதல்வன், பணம் கொடுத்து பங்களாதேஷில் வறிய குடும்பமொன்றைச் சேர்ந்த ஒரு பெண்ணைக் கொண்டுவந்து திருமணம் முடித்துக்கொண்டுள்ளதாகக் கூறுகின்றார்.

இந்தப் பெண் இப்போது தனது நாட்டில் இருந்து ஆயிரக்கணக்கான மைல்கள் கடந்து தனக்குப் பழக்கப்படாத கலாசாரத்தினுள் துன்பப்பட்டு வாழ்ந்து வருவதாகவும் அவர் கூறுகின்றார்.


"எங்களது புதல்வர்களுக்குத் தகுந்த மணமக்களைத் தேடிக்கொள்ள இயலாதிருப்பது வேதனைக்குரிய விடயமாகும். உரிய வயதில் திருமணமாகாத ஆண்கள் பல்வேறு சமூகப் பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து வருகின்றனர். விரைவில் தற்போது நிகழ்வதைவிட பெரும்பாலான பெண்கள் திருமணத்துக்காக வெளிநாடுகளில் இருந்த கொண்டுவரப்படுவர்.." என்பது இன்றைய இந்தியப் பெற்றோர்களது கருத்துகளாகும்.

- பாரூக் -

# இதய அஞ்சலிகள்

படைப்பு

06 ❄✲ 06 ❄✲ 1957



அழிப்பு

16 ❄✲ 08 ❄✲ 2004

# அமரர் பாலநடராஜ ஐயர்

## (தோழர் பாலா)

**தமிழ் மக்களின் போராட்ட வரலாற்றின் ஓர் ஆரம்பகர்த்தாவே**
**முழுநாளும் தன்னை அர்ப்பணித்த பெருந் தியாகியே**


சீரிய சிந்தனையாளனே!
சிறந்த எழுத்தாளனே!
அர்ப்பணம் மிக்க போராட்ட வழிகாட்டியே!
தன்னை உருக்கி சமுகத்திற்கு
ஒளியூட்டிய ஞான தீபமே!
கோழைகளால் அணைக்கப்பட்டாலும்
எங்கள் நெஞ்சில் ஜோதியாய்
என்றும் ஒளிர்வாய்!
தமிழரின் விலங்கு உடைபடும்போது
எங்கள் தலைமகனை
வரலாறு என்றும் நினைவில் கொள்ளும்!!

தோழனே! மீளாத் துயில் கொண்டிருக்கும் உங்கள் பிரிவால் ஆறாத் துயர் கொண்டிருக்கும் உங்கள் இனிய பாரியாருக்கும், பிஞ்சு முகம் மாறாத செல்வக் குழந்தைகளுக்கும் மற்றும் உறவுகளுக்கும் எங்களின் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

**ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (E. P. D. P.)**



சக்தி சக்தி சக்தீ
சக்தி சக்தி சக்தீ என்றோது;
சக்தி சக்தி சக்தீ என்பார் –
சாகார் என்றே நின்றோது.
சுப்பிரமணிய பாரதியார்–



## மூட்டைப்பூச்சி மற்றும் உண்ணியின் கதை

பாப்பா முரசு சிறுகதை

முன்னொரு காலத்தில் ஒரு நாட்டை ஒரு ராஜா ஆண்டு வந்தார். அவரது அந்தப்புரத்திலுள்ள பள்ளியறை கண்ணைக் கவரும் வண்ணத் திரைச் சீலைகளும், மிகப் பெரிய மஞ்சமும், பட்டு மெத்தைகளும் உடையதாகும். அந்தப் பட்டு மெத்தையின் ஒரு மூலையில் ஓர் உண்ணி வசித்து வந்தது. அது இரவு நேரங்களில், மெத்தையில் உறங்கும் மன்னனின் இரத்தத்தைக் குடித்து, மிக்க மகிழ்ச்சியுடன் இருந்து வந்தது.

ஒரு நாள் அந்தப் பள்ளியறைக்கு ஒரு மூட்டைப்பூச்சி வந்தது. அதைக் கண்டு அச்சமும் ஆச்சரியமும் அடைந்த உண்ணி, "யார் நீ? இங்கே என்ன செய்து கொண்டிருக்கிறாய்? இது அரசரின் பள்ளியறை என்பது உனக்குத் தெரியாதா? உடனே இங்கிருந்து வெளியேறு!" என்று கூறியது.

"நான் உனது விருந்தினன். நீ என்னை இவ்வாறு அவமரியாதையாக நடத்தக் கூடாது. ஒரு விருந்தினனை முகமன் கூறி வரவேற்கவேண்டும். நான் எல்லா வகையான இரத்தங்களையும் சுவைத்துள்ளேன். அரச குடும்பத்தினரின் இரத்தத்தை இதுவரை சுவைத் ததில்லை. அதனால் அருள் கூர்ந்து நீ எனக் க இடந்தர வேண்டும்" என்று அது வேண்டிக் கேட்டது.

"ஆனால், உன்னிடம் ஒரு கெட்ட குணம் உள்ளதே! நானோ அரசர் அயர்ந்து தூங்கும்போது மட்டுமே அவரது இரத்தத்தை உறிஞ்சுவேன். நீயோ, விழித்திருக்கும்பொழுதே உனது ஊசி போன்ற கூர்மையான கொடுக்கினால் அவரைக் கடித்து விடுவாயே! அதனால் தான் சொல்கிறேன், இங்கிருந்து போய் விடு என்று" உண்ணி மறுத்துப் போது பேசியது.




"நான் உனக்கு உறுதியளிக்கிறேன். அரசர் அயர்ந்து நித்திரை செய்யும்பொழுது மட்டுமே அவரை நான் கடிப்பேன். மேலும் நீ அவரது இரத்தத்தை உறுஞ்சிய பிறகே நான் அவரது இரத்தத்தை உறுஞ்சுவேன். அதுவரை பொறுமையுடன் காத்திருப்பேன்" என்று மூட்டைப்பூச்சி கெஞ்சியது.

இவ்வாறு இவையிரண்டும் பேசிக்கொண்டிருக்கும்பொழுது படுக்கை அறைக்கு அரசர் வந்தார். படுக்கையில் படுத்தார். அரசரின் இரத்தத்தைச் சுவைக்கப்போவதை எண்ணி, மூட்டைப்பூச்சிக்கு மகிழ்ச்சி தாங்க முடியவில்லை. அரசர் அயர்ந்து தூங்கும்வரை அதனால் தன்னைக் கட்டுப்படுத்திக்கொள்ள முடியவில்லை.எனவே அது குடுகுடுவென்று ஓடி அவரைக் கடித்தது. உடனே படுக்கையிலிருந்து எழுந்த அரசர், தனது காவலர்களை அழைத்து "ஏதோ ஒன்று என்னைக் கடித்து விட்டது. மூட்டைப் பூச்சியோ, உண்ணியோ இருக்கிறதா என்று சோதியுங்கள்" என்று உத்தரவிட்டார்.

இதைக் கேட்ட மூட்டைப்பூச்சி அவசரஅவசரமாக ஓடி மெத்தையின் மூலையில் போய் ஒளிந்துகொண்டது. படுக்கையின் விரிப்புகளை எடுத்துப் பார்த்த காவலர்கள் அடியில் உண்ணி இருப்பதைக் கண்டு அதை அடித்துக் கொன்றனர்.

***ஆம், பிள்ளைகளே! தந்திரமான செயல் என்றும் நிலைக்காது ஏதோ ஒரு வகையில் எமக்கு ஆபத்தையே விளைவிக்கும் ஆகவே, எதிலும் எமக்குச் சாதகமான வழிகளிலே செயல்படக் கற்றுக்கொள்வோம்.*** ○

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **28.08.2004.**

வர்ணம் தீட்டும் போட்டி இல: **558**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 556

பரிசுக்குரியவர்:
**கமிலன் கிரித்திகன், தந்தை செல்வா பாலர் பாடசாலை, பண்டாரிகுளம், வவுனியா.**

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| ஜெ. நிரோஜா, தரம் 2, சிலா/ நஸ்ரியா மத்திய கல்லூரி, சிலாபம். | எம். எச். அமானி, தரம் 2, கஹட்ட பிட்டியா முஸ்லிம் வித்தியாலயம், கம்பளை |
| ஜீ. சுதாகரன், 172, காத்தார் சின்ன குளம், வவுனியா. | பா. சிறிகுகன், யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக்கோட்டை. |
| அ. பிரியந்தி, ஞானசேகரம் பாலர் பாடசாலை, திருகோணமலை. | சு. ரூபிணி, கெலிவத்தை கொலனி, பத்தனை. |
| ஜெ. காயத்திரி, தரம் 6, "மதிபதி" மாகியப்பிட்டி, சண்டிலிப்பாய். | பா. கீர்த்தனா, அமிர்தாம்பிகை வித்தியாலயம், நுணாவில் கிழக்கு, சாவகச்சேரி. |
| எம்.காயத்திரன், இல. 254, ரெவன்சூட் கோவில் வீதி, பள்ளக்கெட்டுவ. | அ. கலக்சனா, தரம் 9, ஆவரம்பள்ளம், கைதடி மத்தி, கைதடி. |



## கண்ணன் மீண்டும் பிறப்பானா?

குழந்தையாக மீண்டும் கண்ணன்
பிறக்க மாட்டானா? – புல்லாங்
குழல்எடுத்தே ஊதி என்னை
மயக்க மாட்டானா?

மாடுகன்றைக் காட்டில்ஓட்டி
மேய்க்க மாட்டானா? – அங்கே
ஓடிஆட என்னைக்கூட்டுச்
சேர்க்க மாட்டானா?


என்னை அவன் தோழனாக
ஏற்க மாட்டானா? – தினம்
வெண்ணெயில்ஓர் பங்குபோட்டு
நீட்ட மாட்டானா?

மலைஎடுத்துக் குடையைப்போலப்
பிடிக்க மாட்டானா? – என்
தலையில்மழை விழுவதையும்
தடுக்க மாட்டானா?

சின்னஞ்சிறு வாயைக் கொஞ்சம்
திறக்க மாட்டானா? – என்
கண்ணில்இந்த உலகமுழுதும்
காட்ட மாட்டானா?

கீதைதன்னைத் திரும்பவுமே
கூறமாட்டானா? – அதைக்
காதில்கேட்டுச் சிறந்தவனாய்
மாற மாட்டேனா? – நான்
மாற மாட்டேனா?

## அதிசய உலகம்




**மனிதன் மட்டும்தான் கண்ணீர்விட்டு அழுவான் என்றில்லை. கடல் ஆமைகள் கூட கண்ணீர் விடும். அவை கரையில் ஒதுங்கும் சமயங்களில் தொடர்ந்து கண்ணீர்விட்டுக் கொண்டே இருக்கும். கடன் பிரச்சினை காரணமாயிருக்குமா? இல்லை.**

**இவை கண்ணீர் விடுவதற்குக் கடன் பிரச்சினையோ, குடும்பப் பிரச்சினைகளோ அல்லது விலைவாசி ஏற்றமோ காரணமில்லை. இவ்வகை ஆமைகள் கடலுக்கடியில் சில வகை மீன்கள், கடல் புல் உள்ளிட்ட இரைகளை உண்ணும்போது, அவற்றுடன் கூடவே கடல் நீரையும் சேர்த்துக் குடித்துவிடும். இதனால் இதன் உடலில் அளவுக்கதிகமான உப்பு சேர்ந்துவிடுகிறது. இதை வெளியேற்றவென்றே அதன் இரு கண்களிலும் பிரத்தியேகமான சுரப்பிகள் உள்ளன. இச் சுரப்பிகள் அதிகமான உப்பை கண்ணீராக வெளியேற்றுகின்றன.**

**நீருக்கடியில் இருக்கும்போது இது கண்ணீர் விடுவது தெரியாது நிலத்தில் இருக்கும்போது மட்டுமே இது தெரியும். முதலைக் கண்ணீர் மற்றும் ஓநாய் கண்ணீர் என்றுதான் கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால் இது ஆமைக் கண்ணீர் ஆச்சரியமாக இல்லையா?**

## உங்கள் பொது அறிவு எப்படி?

| | |
|---|---|
| 1. சுயஸ் கால்வாயை வெட்டுவிதவர் யார்? | நெபுகத் நெசார் |
| 2. முதலாவது பிரித்தானிய பாராளுமன்றத்தைக் கட்டியவர் யார்? | சைமன் டி மொன்ற்போட் |
| 3. ஆங்கிலக் கால்வாயை முதன்முதலாக நீந்திக் கடந்தவர் யார்? | கப்ரன் மத்திறாவெப் |
| 4. பாக்கு நீரிணையை முதன்முதலாக நீந்திக் கடந்தவர் யார்? | மு. நவரத்தினசாமி. |
| 5. உலக சாதனை பல நிகழ்த்தி கின்னஸ் புத்தகத்தில் இடத்தைப் பெற்றவர் யார்? | ஆழிக்குமரன் ஆனந்தன் |
| 6. ஆங்கில அகராதியை முதன் முதல் தொகுத்தவர் யார்? | சாமுவேல் ஜோன்சன் |
| 7. சிங்கள அகராதியை முதன்முதல் தொகுத்தவர் யார்? | சோரட்ட தேரர் |
| 8. தமிழ் அகராதியை முதன்முதல் தொகுத்தவர் யார்? | நா. கதிரவேற்பிள்ளை. |
| 9. சமண மதத்தைத் தோற்றவித்தவர் யார்? | மகாவீரர் |
| 10. இலங்கை பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்ட முதல் பெண்மணி யார்? | புளோறன்ஸ் சேனாநாயக்கா. |

# தகவல் பெட்டி


## தவறு! தவறு!!!

அவுஸ்திரேலியாவில் உள்ள சிட்னியில் நடைபெற்ற சத்திரசிகிச்சை அவுஸ்திரேலிய மக்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. 2002ஆம் ஆண்டு மே மாதம் படத்தில் உள்ள பெண்மணியின் வயிற்றில் உள்ள சிறிய கத்தியை அகற்றுவதற்காக சத்திரசிகிச்சை மேற்கொள்ளப் பட்டது. சத்திரசிகிச்சை வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது. ஆனால், சத்திரசிகிச்சைக்குப் பயன்படுத்திய கத்தரிக்கோல் வயிற்றிலேயே தவற விடப்பட்டுள்ளது. சுமார் 18 மாதங்களின் பின்பு மேற்படி பெண்ணுக்கு முன்பு இருந்ததைவிடவும் வயிற்றுவலி அதிகரித்ததால் அவரை எக்ஸ்ரே எடுக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அப்போதுதான் முதல் தடவை சத்திரசிகிச்சையின்போது டாக்டர்களால் தவறவிடப்பட்ட கத்தரிக்கோல் வயிற்றுக்குள்ளேயே இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. பாவம் பெண்மணி கத்திரிக்கோலை எடுப்பதற்கான சத்திரசிகிச்சைக்கே தயங்குகிறார்.









## மனிதன் பாதி-மிருகம் பாதி!


மிருகங்கள் மனித குணத்தைக் கொண்டவை என்பார்கள். ஆனால், மிருகம் ஒருநாள் தனது மிருகக் குணத்தைக் காட்டியே தீரும் என்பதை இப் படம் விளக்குகிறது. திரைப்படக் காட்சிக்காக கரடி ஒன்றை நடிக்க வைக்க இவர் முயற்சி செய்கின்றார் என்று நினைத்தால் அது தவறு. பராமரிப்பாளர் செல்லமாய் தனது மடியில் கரடியை வைத்து தடவிக் கொடுத்தபோது கரடி தன் குணத்தைக் காட்டியது. கரடி தாக்குவதாக இவர் தொலைபேசி மூலமாக நண்பர்களுக்குத் தெரியப்படுத்தி, அவர்களை உடனடியாக வரும்படியும் அழைத்தார். அதற்குள் கரடி அவரை விழுத்திவிட்டது. இடத்திற்கு வந்த நண்பர்களால் கரடி சுட்டுக் கொல்லப்பட்டது. இது அமெரிக்காவின் கலிபோர்னியாவில் நடைபெற்ற உண்மைச் சம்பவம். விநி என்று செல்லமாக அழைக்கப்பட்ட கரடி குணம் மாறியதால் குறிவைத்துச் சுடப்பட்டது.

## தாடி

கதை கேட்டு, கதை கேட்டு வளர்ந்தவர் பற்றிக் கதை கதையாய் கேள்விப்பட்டிருப்பீர்கள். தாடி, மீசை வளர்த்த வளர்ந்தவர்களைப் படத்தில் பார்க்கிறீர்கள். ஜேர்மனியின் ஸ்டட்காட் நகரத்தில் நடைபெற்ற அகில உலக தாடிக்காரர் போட்டியில் வெற்றிபெற்ற இரண்டு வெற்றியாளர்களே இவர்கள். தாடிக்கான போட்டியில் சுமார் 100 பேர் கலந்துகொண்டனர். அவர்களில் 16 பேருக்குள் போட்டி பலமாக இருந்தது. ஆனாலும், இவ்விருவரும் வெற்றியாளர்களாகத் தெரிவுசெய்யப் பட்டனர்.



## இராட்சத விமானம்!



விமானங்கள் உற்பத்தி செய்யப்படும் நாடுகளுள் பிரான்ஸ் முன்னணி வகிக்கின்றது. அதிவேக விமானமான சூப்பர் சொனிக் விமானத்தை உற்பத்தி செய்து பராமரிப்பது செலவு கூடியது என்பதால் கடந்த வருடம் அவ் விமானச் சேவையை பிரான்ஸ் நிறுத்திக்கொண்டது. தற்போது இரண்டு தட்டுள்ள, 550 பிரயாணிகள் பயணம் செய்யக்கூடிய இராட்சத விமானத்தை தயாரித்து வருகிறது. ஏ 380 என பெயரிடப்பட்டிருக்கும் இவ்விமானம் 2005 ஆம் ஆண்டு சேவைக்கு விடப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

# சினி விசிட்




## கனடாவில் இருந்து..

'கட்டிப்புடி கட்டிப்புடி இந்த கானாங்குருவியை எட்டிப்புடி' , இப்படி இளமைத் தூக்கலாக கானா பாட்டும் கூடவே இசையும் தந்தவர் கபிலேஷ்வர். நெல்லைத் தமிழர். ஆனால் பிறந்து வளர்ந்ததெல்லாம் கனடாவில். ஆனாலும் வீட்டில் தமிழ் பேசி வளர்ந்த குடும்பமாதலால் தமிழ் நன்றாக வருகிறது. கபிலேஷ்வர் வந்ததும் வராததுமாக 'முதல் கனவு' என்ற பாடல் தொகுப்பை வெளியிட்டு வைக்க, உடனடியாக 'சிவராம்', 'மனசே மனசே' என 2 புதிய படங்களுக்கு ஒப்பந்தமாகி இருக்கிறார்.

இசையில் மெலடிதான் பிடிக்கும் என்றவரிடம், அப்படின்னா, 'கட்டிப்புடி கட்டிப்புடி' அந்த ரகம் இல்லையே என்று கேட்டதற்கு அவர், 'நம் ரசனை வேறு; தொழில் வேறு' என்கிறார்.இதில் குறிப்பிடக்கூடிய மற்றுமொரு தகவல் 'கட்டிப்புடிமாமா' பாடலை எழுதியவர் புதுக்கவிஞர் எம்.ஐ.முருகன். இவர் கபிலேஷ்வரின் நண்பராம்.

## "என்னைக் காதலிப்பது கஷ்டம்" மல்லிகா

"என்னுடைய கேரக்டருக்கு எந்த ஆணுமே காதலனாக கிடைக்க மாட்டான்" என்கிறார் ஆட்டோகிரா.்.ப் மல்லிகா. 'ஆட்டோகிரா.்.ப்' படத்தில் நடித்த ஸ்னேகா, கோபிகா, மல்லிகா மூவரில் ஸ்னேகாவுக்கு எப்போதும் போல வாய்ப்புகள் வந்தபடிதான் இருக்கின்றன. ஆஹா ஓஹோ என்று பேசப்பட்ட கோபிகாவுக்கு எதிர்பார்த்தபடி வாய்ப்புகள் குவியவில்லை. சில குறிப்பிட்ட சான்ஸ்களே கிடைத்துள்ளன. அதே நேரத்தில் படத்தில் மிக அழகாக நடித்த மல்லிகாவை கோடம்பாக்கம் ஆரம்பத்தில் கண்டுகொள்ளாமல் விட்டாலும், இப்போது அவரைத் தேடிப் போகும் தயாரிப்பாளர்கள் எண்ணிக்கை கணிசமாகியுள்ளது. 'திருப்பாச்சி', 'ராஸ்கல்', 'மகா நடிகன்', லட்சுமி மூவி மேக்கர்ஸின் புதிய படம், மற்றும் மலையாளத்தில் 'நேருக்கு நேர்' என இப்போது பிஸி நடிகையாகி இருக்கிறார். ஆனால், எல்லாமே அக்கா, தங்கச்சி ரோல்கள், செகண்ட் ஹீரோயின் ரோல்கள்தான். இது குறித்தெல்லாம் மல்லிகா கவலைப்படவும் இல்லை. "நான் ஒரு நடிகை, எந்த ரோல் கொடுத்தாலும் நடிக்க வேண்டியதுதானே" என்கிறார். 'திருப்பாச்சி'யில் விஜய்க்குத் தங்கையாக நடிக்கிறார். இந்தப் படத்தில் விஜய்க்கு ஜோடி த்ரிஷா. 'மகா நடிகனில்' மல்லிகாவுக்கு அரசியல்வாதி வேடமாம். கலெக்டராக இருந்து பின்பு முதல்வராக மாறுகிறாராம். இது எந்த அளவுக்கு மல்லிகாவின் வளர்ச்சிக்கு ஒத்துப்போகும் கேரக்டராக இருக்கும் என்று தெரியவில்லை.




## ரகஸ்யாவின் கவர்ச்சிக்கு கமல் தடை

'வசூல்ராஜா எம்.பி.பி.எஸ்.' படத்தில் மும்பையைச் சேர்ந்த பெல்லி டான்ஸ் அழகி ரகஸ்யாவின் அட்டகாசமான குத்தாட்டம் இடம்பெற்றுள்ளது. ஸ்னேகாவிடம் கவர்ச்சியை எதிர்பார்க்க முடியாது என்பதால் சரண் இவரை புக் செய்திருக்கிறார். "சிரிச்சு சிரிச்சு வந்தாள் சீனா தானா டோய்" என்ற பாடலுக்கு பிரபு மற்றும் அழகிகளுடன் சேர்ந்து தூள் கிளப்பியிருக்கிறார் ரகஸ்யா. இந்தப் பாடலை நடிகர் கருணாஸின் மனைவி கிரேஸ் பாடியிருக்கிறார். படத்தில் ரகஸ்யாவுக்கு வேறு காட்சிகள் ஏதும் கிடையாது. சிங்கிள் டான்ஸ் மட்டும்தான். இந்தப் பாட்டைப் பார்த்த கமல் ஷாக் ஆகிவிட்டாராம். 'நம்ம படத்துல இப்படி ஒரு கவர்ச்சி ஆட்டமா' என்று அரண்டுபோன அவர், சரணைக் கூப்பிட்டு கவர்ச்சியை குறைத்துவிடும்படி கூறிவிட்டாராம். ஸ்னேகாவுடனான முத்தக் காட்சிகளே நிறைய இருக்கும்போது ரகஸ்யாவின் ஆட்டமும் சேர்ந்தால், படத்திற்கு காம முத்திரை குத்தப்பட்டுவிடும் என்ற பயம்தான் கமலுக்கு. மொத்தப் படத்தையும் எடுத்த பின் ரஷ் பார்த்த கமலுக்கும் சரணுக்கும் ஏக திருப்தி. வயிறு குலுங்கிச் சிரிக்க வைக்கும் வகையில் படம் இருக்கும் என்று கியாரண்டி தருகிறார் சரண்.

## ஐஸ்வர்யாராயே...

ஒரு வழியாக 'அரசாட்சி' முடிவுக்கு வந்ததில் குதூகலத்தில் இருப்பவர் முன்னாள் உலக அழகி லாரா தத்தாதான். 'அரசாட்சி' வரட்டும் என்பதற்காகவே புதிய தமிழ்ப் பட வாய்ப்புகளைத் தள்ளிப் போட்டு வந்தார் லாரா. இனி விதம் விதமான கேரக்டர்களில் புகுந்து கலக்க முடிவு செய்துவிட்டாராம்.

## வாரிசு வந்தாச்சு!

காமெடி நடிகர் சிங்கமுத்து பட அதிபர் ஆகிறார். அவரின் மகன்தான் ஹீரோ. டைரக்டர் பி.வாசுவின் உதவியாளர் கிருஷ்ணன் படத்தை இயக்குகிறார்.

## ஹீரோ மோகம்!

ஹீரோ கிடைக்காததால் 'ஆட்டோகிரா.்.ப்' படத்தின் ஹீரோவானார் இயக்குநர் சேரன். முன்ணணி நடிகர் ஒருவர் ஒப்புக்கொண்டு கடைசியில் கை விரித்ததால் 'நியூ' படத்தின் ஹீரோவானார் இயக்குனர் எஸ்.ஜே.சூர்யா. நடிக்க ஒப்புக்கொண்ட ஹீரோ ஒருவர் கடைசி நிமிடத்தில் கடுக்காய் கொடுத்ததால் 'துள்ளல்' படத்தின் ஹீரோவாகிறார் இயக்குநர் பிரவீன்காந்த்.




## கவர்ச்சிக் கலக்கல்!

ஒரு காலத்தில் நாயகியாக கொடிகட்டிப் பறந்துகொண்டிருந்த ரம்பாவை தேடியும் காணவில்லையே என்றால், அம்மணி இப்போ ஒரு பாட்டுக்கு ஆட வந்துவிட்டார். 'சத்ரபதி' படத்தில் ஒரு பாட்டுக்கு இவர் ஆடினார். ஆட்டம் முடியும் வரை பார்வையாளர்களுக்கு அனுமதி வழங்கப்படவில்லையாம். பாடலுக்கு அத்தனை கவர்ச்சி கலக்கலான உடையில் வந்திருந்தாராம்.

## வசூல்ராஜா எம்.பி.பி.எஸ்.

பத்மஸ்ரீ கமல்ஹாசனின் நடிப்பு படத்துக்குப் படம் வேறுபட்டிருக்குமென்பது அனைவருக்கும் தெரிந்தது. சரணின் இயக்கத்தில் 'வசூல் ராஜா எம்.பி.பி. எஸ்.' நகைச்சுவைக் கலக்கல். பல வெற்றிப் படங்களுக்குத் திரைக்கதை எழுதிய கிரேஸி மோகனே எம்.பி.பி.எஸ்.ஸுக்கும் திரைக்கதை எழுதியிருக்கிறார். பார்த்த பழைய முகங்கள் அவ்வப்போது தலைகாட்டி ஆறுதல் தருகின்றன. இதில் நாகேஷ், காக்கா ராதாகிருஷ்ணன் குறிப்பிடக்கூடியவர்கள். 'கில்லி'யில் வில்லனாக நம்மைக் கொள்ளைகொண்ட பிரகாஷ்ராஜ் டாக்டராகவும் சிறப்பாக நடித்திருக்கிறார். நீண்ட இடைவேளைக்குப் பிறகு பிரபுவின் மீள் பிரவேசம் எதிர்பார்ப்புகளைத் தந்தாலும், அவர் நம்மை ஏமாற்றியிருக்கிறார். சினேகா அழகைத் தவிர நடிப்பால் கவரவில்லை. ஒரே ஒரு பாடல் காட்சியில் ரகசியா இருக்கையின் நுனி வரை இழுத்து வீழ்த்துகிறார். லேட்டர்ஸ்ட் கவர்ச்சிப் புயல் என்பதை நிரூபித்திருக்கிறார். ஏற்கெனவே கேட்டுப் பழகிப்போனதால் பரத்வாஜின் இசையில் புதுமைகளைக் காண முடியவில்லை. டாக்டர்கள் கடவுள் இல்லை என்பதில், நோயாளிகளை வெறும் சதையும் உடம்புமாக இல்லாமல் மனிதத்துடன் பார்க்க வலியுறுத்தியிருக்கும் 'வசூல் ராஜா' வரவேற்பைப் பெறும். படத்தின் ஆரம்பத்திலிருந்து முடிவு வரை கமல்ஹாசனின் முற்றுகை சிரிக்கவும் சிந்திக்கவும் வைக்கிறது. உலக நாயகனாகக் கௌரவிக்கப்படும் கமல்ஹாசன் தற்போதைய சினிமாவின் நிலை, அதிரடி காதல் என்பவற்றைக் கடந்து நல்ல நகைச்சுவையும் சினிமா இரசிகர்களைத் திரையரங்கு வரை இழுத்து வருமென நம்பிக்கை தந்திருக்கிறார். 'வசூல்ராஜா எம்.பி.பி.எஸ்.' பார்க்கலாம்.

# தரணி படத்தில் ரஜினி!

ரஜினியின் 'ஜக்குபாய்' கதை விவாதம் பாதியில் திடீரென நிறுத்தப்பட்டு, அந்தரத்தில் விடப்பட்ட நிலையில், அந்தப் படம் அடுத்த நிலைக்கு நகருமா என்பதே இப்போது கேள்விக்குறியாகியுள்ளது. படப்பிடிப்பு ஜுன், ஜுலை, ஆகஸ்ட் என்று பல மாதங்கள் பின்தள்ளப்பட்டு இப்போது அடுத்த ஆண்டு ஜனவரிக்கு ஒத்திவைக்கப்பட்டுவிட்டதாக சொல்கிறார்கள். கதாநாயகியாக ஐஸ்வர்யாவே நடிக்க வேண்டும் என்று ரஜினி விரும்புவதால், அவரது கால்ஷீட் அட்ஜஸ்மெண்ட்டுக்காக படப்பிடிப்புத் தள்ளிப் போனதாக முதலில் சொல்லப்பட்டது. ஐஸ்வர்யா ரொம்பவே பிஸி என்பதாலும், அவர் மிகவும் பிகு செய்வதாலும் பூமிகாவை ஹீரோயினாக்கி செப்டம்பரில் சூட்டிங்கைத் தொடங்கிவிடலாம் என இயக்குநர் ரவிக்குமார் யோசனை சொல்ல பூமிகாவிடம் கால்ஷீட் பெறப்பட்டது.

இந் நிலையில் திடீரென கதை விவாதத்தையே நிறுத்தச் சொல்லிவிட்டார் ரஜினி. பெங்களூரில் வைத்து ஸ்கிரிப்ட் பில்ட் அப்பில் இருந்த கே.எஸ்.ரவிக்குமாரும் ரமேஷ் கண்ணா உள்ளிட்ட அவரது அசிஸ்டெண்ட்களும் அந்தப் பணியை அப்படியே நிறுத்திவிட்டனர். (இப்படி 'ஜக்குபாய்' கதை விவாதம் நிறுத்தப்படுவது இது இரண்டாவது முறையாகும்) இப்போதைக்கு நேரம் சரியில்லை என்பதால், பூஜை புனஸ்காரங்கள், ஆலய வழிபாடுகளை முடித்துவிட்டு சூட்டிங்கைத் ரஜினி தொடரத் திட்டமிட்டுள்ளதாக, கதை விவாத நிறுத்தத்துக்குக் காரணமும் சொல்லப்பட்டது.இது இப்படி இருக்க 'தில்', 'தூள்', 'கில்லி' என சொல்லி வைத்து வரிசையாக ஹாட்ரிக் வெற்றிப் படங்களைத் தந்துள்ள தரணி திடீரென ரஜினியைச் சந்தித்துப் பேசியுள்ளாராம். ரஜினியின் அழைப்பின் பேரிலேயே இச் சந்திப்பு நடந்துள்ளதாகச் சொல்கிறார்கள். கே.எஸ்.ரவிக்குமாரைக் கழற்றிவிட்டு, தனது அடுத்த படத்தை தரணியை வைத்து ரஜினி எடுக்கப்போவதாகக் கோடம்பாக்கத்தில் பேசிக்கொள்கிறார்கள். ஏற்கெனவே ரெடியான 'ஜக்குபாய்' கதையை தரணியிடம் ரஜினி கூறியதாகவும், அதையே கொஞ்சம் மாற்றி எடுக்கலாம் என தரணி யோசனை சொன்னதாகவும் தெரிகிறது. அதே நேரத்தில் ரஜினிக்காக புதுக் கதை ஒன்றையும் சொல்லிவிட்டு வந்திருக்கிறாராம் தரணி. கே.எஸ். ரவிக்குமார் தரப்பில் கேட்டால், 'ஜக்குபாய்' படப்பிடிப்பு அடுத்த ஆண்டு ஜனவரியில் தொடங்கும் என்று செய்தி கசிய விடுகிறார்கள். இவர் சொல்வதை வைத்துப் பார்த்தால் தரணியை வைத்து ஒரு படத்தை ரிலீஸ் செய்துவிட்டு அப்புறமாக 'ஜக்குபாய்' பக்கமாக ரஜினி வரலாம் என்று தெரிகிறது.

# 'ஜக்கு 'கேர்ள்!'

நடந்துகொண்டிருந்த 'ஜக்குபாய்' படத்தின் கதை விவாதம் இடையில் நிறுத்தப்பட்ட காரணம், கதாநாயகி பிரச்சினைதான் என்கின்றார்கள். கொஞ்சக் காலம் காத்திருந்தால் ஐஸ்வர்யாராயின் கால்ஷீட் கிடைக்கும் என்று நம்பகமாகத் தெரிந்ததால் இந்த முடிவாம்.

அப்போ பூமிகா, ஜோதிகா 'ஜக்கு கேர்ள்' ஆகிறதுக்கு சான்சே இல்லாமல் போய்விடுமே!



அறிவுமதி

முரளி- மீராவாசுதேவன்

ஆகஸ்டில் விஜய் படம் : மதுர


கலாபவன் மணி

## தெலுங்கில்!

சம்பளம் அதிகம் என்பதால் தான் தெலுங்குப் படங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கிறீர்களா? என திரிஷாவிடம் கேட்டால், உண்மைதான். தமிழை விட தெலுங்கில் அதிக சம்பளம் கொடுக்கிறார்கள். இதற்குக் காரணம் தமிழை விட தெலுங்குப் படங்கள் அதிகம் பிஸினஸ் ஆகிறது என்கிறார். இது தவிர தெலுங்கில் தனக்கான ரோல்களும் பிடித்தபடியே அமைந்து விடுகிறதாம்.


# மீண்டும்!

'தூள்' படத்தில் சொர்ணக்காவாக வந்து வில்லி நடிப்பில் தூள் பரத்தியவர் சகுந்தலா. இவர் இப்போது தெலுங்கில் பிஸியான வில்லியாகிவிட்டார். இப்போது 'சூப்பர்டா' படத்திற்காக மறுபடியும் தமிழுக்கு அழைத்து வந்திருக்கிறார்கள்.



பச்சை நிறமே...

நந்திதா



செவ்வேல்

கலாபவன் மணி

'ஜெமினி', 'குத்து' ஆகிய படங்களின் மூலம் தமிழ் திரையுலகில் தனது குறும்பு கலந்த வில்லத்தன்மையால் பிரபல்யமடைந்த திரு.கலாபவன்மணி அவர்கள் இலங்கையில் படமாக்கப்படும் 'செவ்வேல்' திரைப்படத்தின் சில காட்சிகளைப் படமாக்குவதற்காக இலங்கை வந்திருந்தபோது முரசுக்காக வழங்கிய பிரத்தியேகப் பேட்டி.

வணக்கம் திரு.கலாபவன் மணி அவர்களே!

வணக்கம்!

**நீங்கள் எப்படித் திரையுலகத்திற்குள் பிரவேசித்தீர்கள்?**

(கண்களை அகலவிரித்தபடி) அது ஒரு பெரிய கதை சார். அடிப்படையில் நான் ஒரு மலையாளி (கேரளா). நான், முதல்ல நடிச்ச படம் 'கல்லாயம்' எனும் மலையாள படம். ஆரம்பத்தில் நான்,ஒரு நகைச்சுவை நடிகராகதான் அறிமுகமானேன். மலையாளத் திரையுலகில் நான் ஒரு ஹீரோ நிலையில வரும்போது தமிழ்ப் படங்களில நடிக்கிற வாய்ப்பை மம்முட்டி சார் ஏற்படுத்திக் கொடுத்தாங்க. நான் முதல்ல தமிழ்ல நடிச்சது 'மறுமலர்ச்சி' எனும் படத்தில. பிறகு வில்லனாக 'வாஞ்சிநாதன்' படத்தில. பின்பு ஏவி.எம். ஸ்தாபனத்தாரின் 'ஜெமினி', 'குத்து', ஆகிய படங்கள் மூலமாக நான் தமிழ் திரையுலகுக்கு உள்வாங்கப்பட்டேன்.

**'ஜெமினி' படத்தில் நீங்கள் பல மிமிகிரிகள் செய்துள்ளீர்களே! இது உங்கள் திரையுலகப் பயணத்திற்கு தூண்டுகோலாக அமைந்ததா?**

கண்டிப்பா! (என்று அடித்துக் கூறியபடி) பேசிக்லி நான் ஒரு மிமிகிரி ஆர்ட்டிஸ்ட்தான். எனக்கு பல குரல்களில் பேசத் தெரியும். மலையாளத் திரையுலகில் 'கலாபவன்' என்பது மிமிகிரி ஆர்ட்டிஸ்டைக் கொண்ட ஒரு குழு. அதையே நான் என் பெயரின் முன்னால் வைத்துள்ளேன். 'ஜெமினி' படத்தில என் மிமிகிரிக்கு தமிழ் மக்கள் குடுத்த ஆதரவு அபாரம். (என்றார் ஆவலாக.)

**திரையுலகில் வில்லத்தனம். இதைப் பற்றி உங்கள் கருத்து?**

(சிரித்துக்கொண்டே.....) இப்ப நாம தியேட்டர்ல போய் பிலிம் பார்க்கும்போது ரிலாக்ஸாக இருக்க வேண்டும். இதற்காகவே வில்லத்தனம் பயன்படணும். வில்லனுங்குறது சினிமாவில மட்டும்தான். இவ்வளவோ.....உயரம். இவ்வளவோ.....பயங்கரம். ஆனா நிஜத்தில அப்படியில்ல. என்னை பொறுத்தவரையில வில்லங்க வில்லத்தனம் பண்ண வேண்டிய இடத்தில மட்டும் வில்லனாகவும் மத்த நேரங்களில கொஞ்சம் ஹியுமராகவும் இருக்க வேண்டும்.

**'செவ்வேல்' படத்தில் உங்கள் கதாபாத்திரம் எப்படியாம்?**

'செவ்வேல்'ல நான் ஒரு வழக்கறிஞர். அதாவது ஒரு வில்லன் கேரக்டர். அதுவும் மியூசிக்க நல்லா விரும்பும் ஒரு வில்லன்.

**தமிழ்த் திரையுலகில் நீங்கள் நடித்து வெளிவரவிருக்கின்ற படங்கள் எவை?**

'ஏய்', 'போஸ்' ஆகியன தற்போது. இது இரண்டிலும் முற்றிலும் மாறுபட்ட கரெக்டரே எனக்குக் கிடச்சுது. அதுமட்டுமல்ல, 'ஜித்தன்', 'அந்நியன்' ஆகியனவும் அடங்கும்.

**தமிழிலே நீங்கள் ஹீரோவாக நடிக்க வாய்ப்பு இருக்கிறதா?**

(ஏளனமாகச் சிரித்துக்கொண்டே) நான் மலையாளத்தில ஹீரோவாத்தான் நடிச்சிருக்கன். தமிழ்ல இன்னும் வாய்ப்பு வரல்ல.

**உங்கள் கணிப்பில் இலங்கை எப்படி?**

மிகவும் நல்லா இருக்கு. பார்க்கிற இடத்திலெல்லாம் பசுமையாய் இருக்கு. இங்கத்தைய காலநிலை, இடம் எல்லாம் இந்தியாவில் கேரளாவை ஞாபகப்படுத்துகிறது.

**தற்போதைய தமிழ் வில்லன்களில் உங்களுக்குப் பிடித்தவர் யார்?**

எனக்கு எம்.ஆர்.ராதாவைப் நல்லாப் பிடிக்கும். அதுக்கப்புறம் இப்ப பிரகாஷ்ராஜ், ரகுவரன் இரண்டு பேரையும் நல்லாப் பிடிக்கும்.

**தமிழிலே நீங்கள் யாருடன் நடிக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறீர்கள் ?**

எனக்கு கமல்ஹாசன் ரொம்பப் பிடிக்கும். ஆனாலும் நான் நடிக்க விரும்புவது சூப்பர் ஸ்டார் ரஜினியோடதான். (என்றார் உறுதியான தொனியில்.)






## என் உயிரே உனக்காக!

முன் பனிக் காலத்தின்
பின்னிரவின் போது
உறங்கவிடாமல் எங்கோ ஓர்
கூரையில் நின்று கூவிக்
கெடுக்கும் ஊர்க்கோழிபோல
இம்சிக்கிறது உன் நினைவு!

நீ தோண்டிய இதயப்
பள்ளத்தில்
நிரம்பிக் கிடக்கிறது என்
விழி பொழிந்த கண்ணீர்
மழை.


காதல் துயரில் வடித்த
கண்ணீர்
கன்னம் முழுதும்
நனைத்துக்கொண்டு
அமில மழையாய்....

இத்தனைக்குப் பிறகும் கூட
ஏனோ தெரியவில்லை....
உருகி உருகி
உழுத்துப்போன
உடம்பின் ஓரிரு பகுதிகள்
மட்டும்
நீதொட்டுச் சீண்டியதால்
உயிர்
உள்ளதை
உணர்த்திக்கொண்டிருக்கிறது.

–ஆர்.பாஸ்கர், ஆரையம்பதி,
புதுக்குடியிருப்பு.

## டூயட் டொட் கொம்

தென்றல் வழுக்கிய
கண்ணாடியில்
எனைப் பூப்பறிக்க அழைத்ததே
ஒருகலர்ஃபுல் நிகழ்காலம்
அது நீயா....?



கண்களுக்குள்
கறிவேப்பிலை வாசம்
என் முந்தானைக்காரியே,
எங்கிருந்து
கவிதை தாளிக்கிறாய்....!

விழி மீன்களால்
என் மணவறைக்கு
விண்ணப்பமெழுதும்
மக்னீசியத் தூண்டில் நீ....
குளோனிங் பைந்தமிழில்
குளிர்காலக் கவியெழுதும்
கவிஞர் பரம்பரை நான்...!

செல்ஸியஸ் புன்னகைக்காரியே
ஸஹாராவின்
கைக்குட்டையில்
மழைச்சாரலின் நிச்சயதார்த்தம்
உன்னால்தானே....!

கருங்கூந்தல் காட்டுக்குள்
ஆயுதம் சேகரித்து
கனாக்களில் துவங்குகிறாய்
ஹைக்கூ யுத்தம்....!

ப்ரியமுள்ள
நிலாத் தோழியே
உன் காதில் விழுகிறதா
நான் பாடும்
டூயட் டொட் கொம்....!

நியாஸ் முஸாதிக், கிண்ணியா - 05.

## தமிழனமே!

இரத்தம் கறுத்து
எறும்பு ஊறும்
தெரு நாயைப் போல்
அலட்சியப் பார்வைகளின்
அர்த்தமற்ற தேடல்களுக்கு இடையில்
சுடப்பட்டுக் கிடக்கிறது
மனித உடம்பு.

இனத்தின் விடுதலைக்காய்
இல்லறம் துறந்து
தமிழ்ச் சுமை சுமந்து
கூட்டு வாழ்க்கையில்
தனிமை மறந்தவன்
இதோ.....
வெற்றுடம்பாய்
சரிந்து கிடக்கிறான்.

பேரினவாதத்தை
வேரறுக்கப் புறப்பட்ட
போராளியின் உடல்
சகோதரப் படுகொலையின்
சதியில் புதைந்து
புழுதி குளிக்கிறது..
நேற்று போராளியாய்
இன்று துரோகியாய்.

விடுதலைப் பயணம்
நெடியது தான்
தலைமைகள் நடத்திய
காட்டுத் தர்பாரினால்
ஏந்திய துப்பாக்கிகள்
எங்களை ஏப்பமிடுகிறது
சந்தோசத்தில் சிரிக்கிறான்
பொது எதிரி.

மௌனித்திருக்கும்
உறவுகளே உடன் பிறப்புக்களே
நெஞ்சறைக்குள் மட்டும்
நெருப்பை வளர்த்து
உணர்வுகளையும்- உணர்ச்சிகளையும்
ஏன் எரித்துச் சாம்பலாக்குகிறீர்கள்?

பேரினத்திடம் விடுதலை கேட்டு தன்
இனத்திடம் சிறைப்படுகிறோம்
சீ.... என்ன மானங்கெட்ட
மனிதம் நாம்
சுயமாகச் சிந்திக்கவும்
சுயமாகப் பேசவும் கூட
சுதந்திரம் இழந்தோம்
அணைத்துக் கொல்பவனை விட
அடித்து உதவுபவன் மேல்...

போராளிகளைச் சுட்டு
துரோகிகளாக்குவது தலைமை
வெறி வாங்கி வந்த
தமிழினத்தின் சாபக்கேடு.....
மௌனித்து ஆமோதிப்பவர்களே!
நீங்கள் வெற்றுடம்பு வாங்கும்
மரண வியாபாரிகளா?

இரும்புச் செருப்புகளுக்குக் கீழே
இருக்கைகளைத் தேடுகிறீர்கள்
கனவுகளில் கூட நீங்கள் நீங்களாக
வாழமுடியாது.
பாவம் தமிழினம்
வழிநடத்தப்படுகிறது.
பாதாளத்தை நோக்கி....
உங்களுடன் நானும் தான்.

–திருமலை தாமரை மகன்

## இளமை

பொன்விழாவின்
அரைவாசிக்குள்ளேயே
புதைந்து போய் விடுகிறது
இளமை.....
வயதுகளால் மட்டுமே
வரையறுக்கப்படும்போது

அங்கங்களை வைத்து
அளக்கும்போது,
அடிவயிற்றுத்
தொப்பைக்குள்ளும்
விழிச் சுருக்கத்துக்குள்ளும்
இளமை.....
ஐக்கியமாகிவிடுகிறது.

தோற்றத்தில் ஏற்பட்ட
மாற்றத்தை வைத்து
சில நரைத்த
முடிகளுக்குள்
தொலைந்து போகிறது.
இளமை....
வண்ணங்களின்
வசீகரிப்பில்
எண்ணங்களைத்
தொலைத்த இவர்கள்
கறுப்பினால்
உன்னைக்
காட்சிப்படுத்தும்போதும்

மௌனத்துக்குள்ளேயே
இன்னுமேன் நீ
புதைந்து போகிறாய்
ஓ...இளமையே......
உன்னை நீயே
சுயவிமர்சனம்
செய்து கொள்.
வரையறைகளை வகுத்து
வரம்பு போட்டுக்கொள்.

–தருமலிங்கம் முரளிதரன்,
காரைநகர், வலந்தலை.

## நானும் என் தேசமும்...



எதையும் எழுதக்
கூடாதென
எழுதுகிறேன்.

எதையும் பேசக்
கூடாதென
பேசுகிறேன்.

எதையும் பார்க்கக்
கூடாதென
பார்க்கிறேன்.

எதையும் கேட்கக்
கூடாதென
கேட்கிறேன்.

எதைப் பற்றியும்
கனவு காணக்
கூடாதென்று
கனவு காண்கிறேன்.

எதிலும் நம்பிக்கை
இல்லாதிருந்து
விடலாமென
நம்புகிறேன்.

எந்தவிதமான
ஆசையும் வைக்கக்
கூடாதென
ஆசைப்படுகிறேன்.

எப்போதும் எதைப்பற்றியும்
யோசிக்கக் கூடாதென்றும்
யோசிக்கிறேன்.

சமாதானத்திற்கான
சண்டையை
பேச்சுவார்த்தையால்
முடிக்கும்
பேச்சுவார்த்தைகளாய்
தொடக்கமும் முடிவுமில்லா
என் தேசத்தைபோல்,
நானும்
எதையும் எழுதலாகாதென
இதையும் எழுதுகிறேன்.

–மெய்யன் நட்ராஜ்,
டோஹா– கட்டார்.

# கவிதை எழுதுதலும் வாசித்தலும்

[பயிற்சிக் களம்]

## சிறப்புக் கவிதையும் —கவிஞரும்

வாழ்வு எப்போதும் நாம் நினைப்பது போலில்லாமல் எதிர்விளைவுகளைத் தோற்றி நம்மை ஏளனம் செய்கிறது. இந்த வாழ்க்கையுடன்தான் கவிஞனுக்கு வழக்கு! எந்த நிகழ்வும் அநுபவமாகி, அதைக் கவிஞன் சரியாக இனங்கண்டு, அதன் முழுப் பரிமாணத்தில் புற உலக வாழ்வுடன் இணைக்கும்போது வீச்சுள்ள கவிதை கிடைக்கிறது. வலிமையுடன் ஆழ்ந்த அர்த்தத் தொனிகளைத் தன்னகத்தே கொண்டு கவிதை உருக்கொள்கிறது.

மேலுக்கு, சாதாரண நிகழ்வொன்றைச் சொல்லும் கவிதைக்குள், ஆழமான அர்த்தமொன்றுக்குச் செல்லும் திறப்பைக் கண்டுகொள்கிறபோது, நமக்குள் சின்னதாய் ஒரு அணுவெடிப்பை அது நிகழ்த்துகிறது.

வெவ்வேறு கவிஞர்களின் நான்கு கவிதைகள் :

### சகுனம்

நீண்டதொரு காலம் போய்
மீண்டுமொரு சந்திப்பு
அதற்கென விரைவாய் அடியெடுத்து வைத்தேன்.
கதவு தாண்டி தெருவிலே வந்தேன்.
உற்சாகங் குமிழிட்டு உள்ளத்தை விரித்தது.
நடையினிலே நான் மிதந்தேன்.

பசபசவென்று உடலெடுத்த
பூனையொன்று குறுக்கிட்டது.

'சீ'யென்றேன் 'தூ'வென்றேன்.
காணக் கூசினேன் பூனையை
திரும்பிவிட அடி வைத்தேன்.
துள்ளி விழுந்தது,
துரிதமாய் வந்த காரினடியில்
துடித்துப் புரண்டது பூனை.

மனங்குமுறிக் குமைந்தேன்.
கூசினேன் - என்னைக் காட்டிக் கொள்ள.

–கோ. ராஜாராம்.



### குற்றவாளிகள்

இன்றைக்கு
நண்பர்கள் யாரும்
வரவில்லை.

உணவுப் பொருள்
திருட வந்த
எலிகளிடம்
பேசிக்கொண்டிருந்தேன்.
பண்டங்களை
மூடிவைப்பதால்
உண்டாகும் சிரமம்
குறித்து
புலம்பியது ஒன்று.

பூனைகளின்
துரத்தல்கள் பற்றி
தழுதழுத்தது
இன்னொன்று.

வடையில் பேகான்
ஸ்பிரே
அடித்து வைக்கும்
மனைவியின் செயல்
பழித்து
வெதும்பியது
மற்றொன்று.

நேரம் போனதே
தெரியாமல்
நீண்டு கொண்டிருந்த
எங்கள் பேச்சை
கத்தரித்துச் சிரித்தது
மின்வெட்டு.

மெழுகுவர்த்தி
ஏற்றிப் பார்த்தபோது
செத்துக் கிடந்தன
எலிகள்.

அருகில் பூனை,
வடை
உடன் நான்.

-மு.மாறன்.

### இறக்கை விரித்து...

இறக்கை விரித்து
துடுப்பாய்ச் சமைத்து
காற்றில் நீந்தும்
பறவையைக் கண்டேன்.

இருந்த சுதந்திரம்
பறக்க நினைக்கப்
பறிபோக லாயிற்று.

செயற்கை இறக்கை
சமைத்துக் கொண்டு
பறக்கப் பார்த்தேன்
முடியவில்லை.

இறக்கை துறந்து
பறவையைப் பார்த்தேன்
பறந்து சென்றோம்
பறவையும் நானும்.

–திருச்சித்தன்.

### நினைப்பு

நான்கு கால் பரப்பி
நாக்கைத் தொங்கல்
போட்டு
நிற்கும் நாயை
நினைப்பதில்லை
யாரும்.


நாய் பாட்டுக்கு நாய்
மனிதர் பாட்டுக்கு
மனிதர்.

எந்த வாகனம்
ஏறியதோ.....
உடல்
ஊருக்கு வெளியே.....


நாள் ஒன்றாகி
இரண்டாகி
மூன்றாகி
மெல்லப் பரவியது
நாற்றம்
நாயை
நினைக்காதவர்
யாருமில்லை
இப்பொழுது.

-பொன்.குமார்.


## பேனா நண்பர் பகுதி — பேனா நண்பர் பகுதி — பேனா நண்பர் பகுதி




பெயர் : S. Navin
வயது : 22
முகவரி : P.O. Box No-80416, Doha, Qatar.
பொழுதுபோக்கு: பத்திரிகை, ரி.வி., பேனா நட்பு.



பெயர் : த. மயூரன்
வயது : 21
முகவரி : காளிகோவிலடி, தாவடி தெற்கு, கொக்குவில், யாழ்ப்பாணம்.
பொழுதுபோக்கு : உதைபந்தாட்டம், ரி.வி.



பெயர் :க. செல்வரூபன்
வயது : 20
முகவரி : அராலி கிழக்கு, வட்டுக்கோட்டை.
பொழுதுபோக்கு : வழமையானவை




பெயர் : எம். என். எம். சரன்
வயது : --
முகவரி : இல. 148/A, மெசஞ்சர் வீதி, கொழும்பு- 12.
பொழுதுபோக்கு : ரி.வி., பத்திரிகை.

# லேடிஸ் ஸ்பெஷல்



## படுக்கையை நனைக்கும் பழக்கம் ஏன்?



விரல் சூப்பும் பழக்கத்தைப் போல குழந்தைகளிடம் காணப்படும் மற்றொரு தீய பழக்கம் இரவில் படுக்கையை நனைப்பது.

சாதாரணமாக குழந்தைகளுக்கு மூன்று வயது ஆகும்போது தானாகவே சிறுநீரைக் கட்டுப்படுத்தி வெளியேற்றும் திறன் வந்துவிடும். சில குழந்தைகளுக்கு இந்தத் திறமை ஐந்து வயதில் வரக்கூடும். ஆகையால் ஐந்து வயதிற்கு மேற்பட்ட குழந்தைகளுக்குப் படுக்கையை நனைக்கும் பழக்கம் இருந்தால் அதை ஒரு குறைபாடாக எடுத்துக்கொள்ள வேண்டும்.

அண்மையில் வெளியான ஒரு புள்ளி விவரப்படி 100இல் 5 குழந்தைகளுக்கு இக் கோளாறு உள்ளது. முக்கியமாக 3 இலிருந்து 8 வயதிற்கு உட்பட்ட குழந்தைகள் அதிலும் ஆண் குழந்தைகள் அதிகம் பாதிக்கப் பட்டிருப்பதாக அந்தப் புள்ளிவிவரம் தெரிவிக் கிறது.

அதே சமயம் தினமும் படுக்கையை நனைக்கும் பழக்கம் எல்லாக் குழந்தை களுக்கும் இருப்பதில்லை. ஒரு சில குழந்தைகளே அப்படி. மற்றக் குழந்தைகள் வாரத்தில் ஒன்றிரண்டு நாட்களுக்கு நனைக்கும்; வேறு சிலர் எப்போதாவது ஒரு நாள் மட்டும்.

இப் பழக்கத்திற்கு முக்கிய காரணங்கள் பல. அவற்றை உடலியல் காரணங்கள் என்றும் உளவியல் காரணங்கள் என்றும் இரு வகைப்படுத் துகிறது மருத்துவம்.

சிறுநீர்ப் பாதையில் ஏற்படுகின்ற பிறவிக் கோளாறு, முதுகெலும்பில் உண்டாகின்ற நரம்பு சார்ந்த குறைபாடு, சிறுநீர்ப்பை வீக்கம், சிறுநீர்ப் பாதையில் நோய்த்தொற்று, சிறு வயது சர்க்கரை நோய், குடல்புழுத் தொல்லை போன்றவை உடலியல் காரணங்கள்.

சுமார் 20 சதவீதக் குழந்தைகள் இந்தக் காரணங்களினால் படுக்கையை நனைக் கின்றனர். மிகுதி 80 சதவீதத்தினருக்கு உளவியல் காரணங்களே அடிப்படை.

பொதுவாக, குழந்தையின் மனதைப் பாதிக்கின்ற எந்த ஒரு நிகழ்ச்சியும் இந்தப் பழக்கத்திற்கு மலர்ப்பாதை அமைத்துவிடும். குறிப்பாக பெற்றோரின் பங்கு இதில் அதிகம். பெற்றோரிடம் ஓயாத சண்டை, பெற்றோரிட மிருந்து குழந்தை பிரிந்து இருப்பது, பரிவு - பாசம் குறைவது, புதிதாக இன்னொரு குழந்தை பிறப்பது, நெருக்கமானவர்கள் யாராவது இறந்துபோவது, ஒரு பள்ளியி லிருந்து வேறு பள்ளிக்கு மாறுவது, வீடு மாறுவது போன்ற காரணங்களால் இந்தப் பழக்கம் குழந்தைகளுக்கு ஏற்படுவது வெகு சகஜம். சில குழந்தைகளுக்கு அடி மனதில் எழும்பும் பய உணர்வுகள் முக்கிய காரணமாக அமைகின்றன. குறிப்பாக குழந்தைகளைச் சாப்பிட வைப்பதற்காக அம்மாக்கள் பயங்கரமான கதைகளைச் சொல்லிப் பயமுறுத்தி சாப்பிட வைக்கும்போது இந்தப் பழக்கம் அவர்களுக்குத் தொற்றிக் கொள்கிறது.

இன்னொரு புறம், குழந்தை அழும்போது அதை நிறுத்துவதற்காகப் பெற்றோர் வீட்டில் ஏதாவது ஓரிடத்தைக் காண்பித்து 'அங்கு பேய் உள்ளது; பிசாசு உள்ளது; அங்கே திருடன் ஒளிந்திருக்கிறான்; அதோ பூச்சாண்டி ஓடி வருகிறான்' என்றெல்லாம் கூறுவதுண்டு. இதை நினைத்து குழந்தை மனதுக்குள் பயந்து கொண்டே இருக்கும். விளைவு, இரவில் அது படுக்கையை நனைக்கும்.

இப்படியும் சிலர் இருக்கிறார்கள். குழந்தைகளை மிகுந்த கண்டிப்புடன் வளர்க்க வேண்டும் என்பதற்காக குழந்தைகள் செய்யும் சிறிய குற்றத்திற்குக் கூட மிகப்பெரிய தண்டனையைத் தருகின்ற பெற்றோர்கள்! வேறு சிலர் தங்களுடைய குழந்தைகளின் உணர்வுகளுக்கு மதிப்பே கொடுப்பதில்லை. அவர்கள் ஆசையோடு சொல்வதை, ஆவலோடு கேட்பதைக் காதில் போட்டுக் கொள்வதே இல்லை.... மாறாக இவர்கள் விரும்புவதை மட்டும் குழந்தைகளிடம் திணிப்பதில் மிகுந்த கவனமாக இருப்பார்கள்.

இவையெல்லாம் குழந்தையின் ஆழ் மனதைச் சிறிது சிறிதாகக் காயப்படுத்தும். அந்த ரணத்தின் வடிகாலாகப் படுக்கையில் சிறுநீர் கழிக்கும். இதைப் புரிந்துகொள்ளாத பெற்றோர், குழந்தையின் இந்தக் குறையைப் பல பேர் முன்னிலையில் சுட்டிக்காட்டவும், கேலி செய்யவும், மற்றக் குழந்தைகளோடு ஒப்பிட்டுப் பேசவும் செய்கிறார்கள்.

இது எரிகின்ற தீயில் எண்ணெயை ஊற்றுவது போலாகிவிடும். ஏற்கெனவே பயத்தால் தாக்குண்ட குழந்தை இப்போது குற்ற உணர்வும், கூச்ச சுபாவமும், சுய வெறுப்பும் சேர்ந்துகொள்ள, மனதளவில் தனிமைப்பட்டு, தாழ்வு மனப்பான்மைக்குத் தள்ளப்பட்டுவிடும். இதனால் அந்தக் குழந்தைக்குப் படுக்கையை நனைக்கும் பழக்கம் அதிகமாகுமே தவிர குறையாது.

சரி, இந்தப் பழக்கம் நீங்க என்ன வழி?

குழந்தை படுக்கச் செல்வதற்கு முன்பு சிறுநீர் கழித்துவிட்டுப் படுப்பதை தினசரி வழக்கமாகப் பழக்கப்படுத்த வேண்டும். நடு இரவில் ஒரு முறையும், விடியற்காலையில் ஒருமுறையும் குழந்தையை எழுப்பி, கழிப்பறை போகக் கற்றுத்தர வேண்டும்.

இரவு உணவிற்குப் பிறகு திரவ ஆகாரங்கள் கொடுப்பதை நிறுத்திவிடலாம். அதற்காகத் தண்ணீர் கூடத் தரக் கூடாது என்று தடை போடாதீர்கள்.

படுக்கையை நனைக்கும் குழந்தை களுக்கு அதிகமான அன்பும், ஆதரவும், சிறப்பு கவனிப்பும் வழங்கிப் பாருங்கள். நல்ல பலன் கிடைக்கும். குழந்தை ஒரு இரவில் படுக்கையை நனைக்காமல் இருந்தால் அதைப் பாராட்டி சிறிய பரிசுப் பொருள் கொடுங்கள்.

தொடர்ந்து ஓரிரு நாட்கள் படுக்கையை நனைக்காமல் இருந்தால் பரிசுப் பொருளை அதிகப்படுத்துங்கள். ஊக்கப்படுத்திப் பாராட்டிப் பேசுங்கள். இந்தப் பாராட்டுகளும், பரிசுப் பொருள்களும் குழந்தையை உற்சாகப்படுத்தி இந்தப் பழக்கத்திலிருந்து மீண்டுவரத் தூண்டுகோலாக அமையும்.

வெளிநாடுகளில் இந்தப் பழக்கத்தைப் போக்க ஒரு கருவி வந்துள்ளது. 'Bell and Bed Alarm' என்று பெயர். மின் அலாரம் பொருத்தப்பட்ட மெத்தை இது. இதில் குழந்தை படுத்துக்கொள்ள வேண்டும். குழந்தையின் சிறுநீர் ஒரு சொட்டு இதில் பட்டவுடன் அலாரம் அடிக்கும். குழந்தை விழித்துக்கொள்ளும். பின்னர் கழிப்பறைக்குப் போய் சிறுநீர் கழிக்க வேண்டும்.

இத்தனை வழிகளும் உங்கள் குழந்தைக்கு உதவாவிட்டால் அவசியம் மருத்துவரைப் பாருங்கள். மாத்திரை, மருந்துகள் மூலம் படுக்கையை நனைக்கும் இந்தப் பழக்கத்திற்கு விடை கொடுப்பார்.

## அந்த நேரத்தில் அக்கறை அவசியம்



அவர் பிரபல நிறுவனம் ஒன்றில் மேனேஜர். அவரது மனைவி மிகவும் பணிவானவர். அந்தத் தம்பதியர் மிகவும் அன்னியோன்னியமாகப் பழகுவார்கள். நல்ல தம்பதியான அவர்களின் வாழ்க்கையில் மெனோபாஸ் உருவில் ஒரு வில்லி புகுந்தது.

மெனோபாஸ் காலகட்டத்தில் வரக்கூடிய எரிச்சல், கோபம், அகங்காரம்...அதெல்லாம் அந்த மேனேஜரின் மனைவியையும் விட்டு வைக்கவில்லை. அம்மாவுக்கு என்னமோ ஆயிடுச்சு என்று எல்லோருமே விலகி னார்கள். அதிலும் பாசமான கணவன் என்று புகழப்பட்ட அவரது கணவரும் அவரை அடி பின்னி எடுக்கத் தொடங்கினார்.

பக்கத்து வீட்டுக்காரர்களும் அந்தப் பெண்ணுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது என்றுதான் நினைத்தார்கள். இதற்குக் காரணம் அந்தப் பெண்மணியின் நடவடிக்கைகள் அனைத்தும் பைத்தியக் காரத்தனமாக இருந்தது தான்!

இந்த மாறுபட்ட நடவடிக்கைகள் வெறும் ஆறேழு மாதங்களில் மறைந்துவிட்டது.

மெனோபாஸ் காலகட்டத்தில் இது எதனால் ஏற்படுகிறது?

மனதில் ஏற்படும் மாற்றங்கள் என்பதை விடவும் குழப்பங்கள் என்பதுதான் சரியாக இருக்கும். எவ்வளவு தெளிவான ஆட்களையும் கொஞ்சம் அசைத்துப் பார்த்து விடும் காலகட்டம் அது.

பெரும்பாலான பெண்கள் அந்த நிலையை அடையும் வரை அதனைப் பற்றி தெளிவாக ஏதும் தெரியாமல் உள்ளனர். அதுதான் முதல் பிரச்சினையே. முன்பே தெரிந்திருந்தால் தலைவலி, பல்வலியைப் போல் இந்தக் குழப்பங்களையும் மிகச் சுலபமாகக் கடந்து விடலாம்.

யாரையும் பிடிக்காது, எரிச்சலும் சிடுசிடுப்பும் கோபமும் அளவுக்கு அதிகமாகத் தலைகாட்டும், எப்பொழுதும் படுக்கவேண்டும் போல சோம்பலாக இருக்கும் மனதும் சோர்ந்து போய், சாப்பிட, டி.வி. பார்க்க, அலங்காரம் செய்ய என எந்த விஷயங்களிலும் ஈடுபாடு இருக்காது, அதுவரை வெகு விருப்பமாக செய்து வந்த வேலைகள் மீது கூட வெறுப்பு வரும்.

இதனால் தலைவலி, தலை பாரமாக இருப்பது போன்ற உணர்வுகள் தோன்றும். மறதி அதிகமாகும். தூக்கம் வராது. எடை கூடும். அடிக்கடி மார்பு படபடப்பு வந்து போகும். ஒரு காரணமும் இல்லாமல் வெடித்து அழத் தோன்றும்.

இவை எல்லாவற்றுக்கும் மூலகாரணம் அவர்கள் மனதில் உள்ள பயமும், டென்ஷனும்தான்!

இவற்றைக் கடந்து கணவரின் அனுசரணை இருந்தாலே மெனோபாஸைச் சுலபமாக எதிர்கொள்ளலாம்.

நல்ல கணவர் அமையப் பெறாதவர்கள், கணவனை இழந்த, திருமணமாகாத விவாகரத்தான பெண்கள், தாமதமாகக் குழந்தை பெற்றதால் டீன்-ஏஜ் பிள்ளைகளைக் கொண்ட அம்மாக்கள் ஆகியோர் இது போன்ற மன உளைச்சலுக்கு அதிக அளவில் ஆளாகின்றனர் என்கிறது சமீபத்திய ஆய்வு ஒன்று.

மெனோபாஸ் காலகட்டத்தில் உள்ள பெண்கள் தினமும் 600 மி.லி.தயிர் சாப்பிட வேண்டும். இதோடு சீஸ், பனீர், பால்கோவா, நெல்லிக்காய் போன்றவையும் சாப்பிடலாம். உணவில் எள், பழம், பச்சைக் காய்கறிகளும் நிறைய சேர்க்கலாம்.

பூசணி, வெள்ளரி, தர்ப்பூசணி விதைகள் போன்றவற்றை உணவில் சேர்க்கலாம். தினமும் ஒரு தடவையாவது வாக்கிங் போவது அவசியம்!

மெனோபாஸ் தொல்லை இனி இல்லை!


## நலமாக வாழ்வோம்

### வீரியஸ்தம்பன் ஆசனம்

'சிராங்குஸ்தாசனா' என்றும் கூறுவர். தலை பாதம் தொட்டு இருக்கும் நிலை. உடலுக்குத் தேவையான வீரிய சக்தியை அளிக்கும் ஆசனம்.

பலன்கள் :

1. ஆரம்ப நிலை சர்க்கரை வியாதி முழுவதும் குணமாகும். தொடர்ந்து இவ்வாசனத்தைச் செய்து வந்தால் அதிக சர்க்கரையின் அளவை சமநிலைக்குக் கொண்டு வர உதவும்.



2. விந்து கோளாறுகளைச் சரிசெய்வதில் இவ்வாசனம் சிறந்து விளங்குகிறது. ஆண்மையின்மை, விந்துவே சுரக்காத தன்மை, விந்து நீர்த்துப்போதல், துரிதஸ்கலிதம் எனும் உறவு, கொள்ளும்போது உடன் விந்து வெளிப்படல் போன்ற கோளாறுகள் அனைத்தையும் இவ்வாசனம் சரி செய்கிறது.

3. குடலிறக்கம், விரைவீக்கம், மூலநோய் ஆகியவற்றைச் சரிசெய்கிறது.

4. இரத்த சோகை, தூக்கமின்மை, வயிற்றுப் பொருமல், வயிற்றுவலி ஆகியவை குணமாக உதவும்.

5. சிற்றின்பத்தில் அளவுக்கு மிஞ்சி ஈடுபட்டு அதனால் உடல் நலிவு ஏற்பட்டவர்களுக்கு புத்துயிர் கொடுத்துக் காப்பாற்றும்.

6. அதிக காம இச்சையைக் குறைத்து (அளவுடன் வைத்து) உடலிலும், உள்ளத்திலும் அமைதியை ஏற்படுத்தும்.

7. மணமாகாதவர்கள் இந்த ஆசனத்தைத் தொடர்ந்து செய்து வந்தால், கலை, இலக்கியம், பொதுநலத்தொண்டு ஆகிய துறைகளில் ஆக்கரீதியான ஊக்கம் ஏற்படும்.

8. உடம்பு முழுவதற்குமே ஒரு டானிக் போன்று புத்துணர்ச்சியை அளிக்கிறது.

9. பெண்களுக்கு மாதவிடாய் கோளாறுகள், மலடு ஆகிய கோளாறுகளை சரி செய்கிறது.

10. பெண்களுக்குக் கருப்பை இறங்காமல் காப்பாற்றும்.

செய்முறை :

1. பார்சுவகோணாசனம் செய்து முடித்ததும் அதே நிலையில் நின்று வலது கையை முன்புறமாகத் தொடையின்கீழ் கொண்டுவந்து பாதத்திற்கு வெளியே ஒட்டியவாறு உள்ளங்கையை ஊன்றி வைக்கவும்.

2. முன்னால் குனிந்து இடது கையை வலது பாதத்திற்கு அருகே சிறிது இடைவெளி விட்டு விரிப்பின் மீது வைக்கவும்.

3. இடது காலை வளைக்காமல் கைகளை ஊன்றி முன்னால் குனிந்து நெற்றி பொட்டை வலதுகால் கட்டை விரலின் மீது வைக்க வேண்டும். சாதாரண மூச்சில் 30 எண்ணிக்கை இருக்கவும்.

4. தலையை நிமிர்த்தி எழுந்து கைகளைப் பிரித்து நிமிர்த்தி, கைகளைத் தரையின் மீது ஊன்றி நிமிர்ந்து எழுந்து நிற்க வேண்டும். பாதத்தைச் சரிசெய்ய வேண்டும்.

5. மாற்று ஆசனமாக இடதுகால் பாதத்தைப் பக்கவாட்டில் திருப்பி, இடது கையை இடது தொடையின் கீழ் கொடுத்து வெளியே கொண்டுவந்து பூமியின் மீது வைத்து, வலது கையை இடது பாதத்திற்கு அருகில் வைத்து வலது புறம் செய்தது போல் 30 எண்ணிக்கை இருந்து முடிக்க வேண்டும்.

6. இரண்டு முறை செய்தால் போதும்.

குறிப்புகள்:

1. முடிந்தளவு முயற்சிக்கவும். கால்கட்டை விரலை தலையால் தொட முடியவில்லை என்று கவலைப்பட வேண்டாம். தொடர்ந்து பழகி வந்தால் எளிதாக வரும்.

2. மூச்சை அடக்கிச் செய்யக் கூடாது.

3. மடிக்கும் கால் முட்டி வயிற்றுக்குச் சிறிது வெளியே சாய்ந்தாற்போல் இருக்கும். தவறு இல்லை.

4. 2 மாதப் பயிற்சிக்குப் பிறகு கைகளை பூமியின் மீது ஊன்றாமல் முதுகுக்குப் பின், வலது கை மணிக்கட்டு பாகத்தை இடது கையால் பற்றி, முன்னால் குனிந்து கால் கட்டை விரலை நெற்றியால் தொட்டுப் பழகலாம். அதுவே பூர்ண வீரியஸ்தம்பன் ஆசனமாகும்.

## சமைப்போம் சுவைப்போம்

*தொகுத்துத் தருவது -ஷோபா-*

### பலாப்பழ இட்லி

*தேவையான பொருட்கள் :-*

ரவை - 1 கிலோ
பலாப்பழம் - 1 கிலோ
சீனி - தேவைக்கு
தேங்காய் - 1
ஏலக்காய் - 10
சீரகம் - 1 தேக்கரண்டி

*செய்முறை :-*

ரவையை வறுக்கவும். தேங்காயைத் துருவவும். பலாப்பழத்தின் விதைகளை நீக்கிவிட்டு, பழத்துடன் தேங்காயைச் சேர்த்து மிக்சியில் போட்டு அரைக்கவும். குழம்பு பருவத்தில் ஆக்குங்கள். அத்துடன் ஏலக்காய், சீரகத்தை தூளாக்கிச் சேருங்கள். அத்தோடு ரவையைக் கொட்டிப் பிசையவும். இதில் தண்ணீர் அதிகப்பட்டுவிடக் கூடாது. மாவை இட்லி சட்டியில் விட்டு அவித்து எடுக்கவும். இட்லியை அலங்கரிக்க செரி பழத்தை பயன்படுத்தலாம்.



# துரோகம் ரத்துகிறது!

அங்கம் 16

எழுதுவது
புஷ்பா தங்கதுரை

வெறுமைச் சந்து! இரண்டு தெருக்களில் புழைக்கடை.

குருவின் எல்லா அவயவங்களும் ஃபுல் ஸ்பீட்! மூர்க்கத்தனமான வேகத்தில் பாய்ந்தான். சூரியகுமாரின் கையைப் பிடித்துவிட்டான்.

"பாபி! என் வாழ்க்கையை சூனியம் ஆக்கினியே! உன்னை விடுவேனா! எல்லோரும் வாங்கோ! வாங்கோ! சூரியகுமார் அகப்பட்டுக்கிட்டான்."

தொண்டை கிழியக் கத்தி, குமாரைத் தன்து கைகளுள் இடுக்கப் பார்க்க,

அவன் விருட்டென்று ஒரு கத்தியை உருவினான்.

சரமாரியாக அவன் குத்த, குரு எல்லாவற்றையும் கைகளில் ஏற்றுக் கொண்டான்.

உடலில் தீ பாய குமார் ரப்பர் தாவலில் சந்தைக் கடந்து மறைந்துவிட்டான்.

கையில் ரத்தம். உடம்பில் சோர்வு! மனசில் சூன்யம். அவன் தேகத்திலிருந்து பலம் கீழே வழிந்து ஓடியது.

ஒரு வேகம்! போலீசில் உடனே தெரிவித்தால் என்ன?

பரபரப்பை ஏற்படுத்திக்கொண்டு நடந்தான்.

சந்து முனை வந்தும் ஒரு யோசனை. போலீசில் சொல்லி...... அவன் கிடைக்கவில்லையென்றால்----- நம்மையே பிடித்துக் கொண்டால்..... நாம் ஒரு நாடகமாடுகிறோம் என்று குற்றம் சாட்டினால்....

ஒரு கணத்தில் சுறுசுறுப்பெல்லாம் வடிந்தது. பெரிய தப்பிதம் செய்ய இருந்தோம் என்று நினைத்தான்.

இது நேரம் வரை கைகளைப் பார்க்கவில்லை. இப்போது பார்த்தால் ரத்தம் அபிஷேகமாகிக் கள்ளிச் சொட்டுக்களாக விழுந்துகொண்டிருந்தது.

ஒவ்வொரு கைக்கும் மும்மூன்று காயங்கள்! பள்ளமானவை! ஒவ்வொன்றும் ஒவ்வொரு சுருதியில் எரிந்தன.

ஓடிய ஓட்டத்தில் துணிப் பையை விட்டுவிட்டான். கையில் துணி இல்லை. கர்ச்சீப் மட்டும் இருந்தது. துடைத்தான் பிழிந்தான். துடைத்தான்.

இப்போது இன்னொரு திடீர் நினைவு.

சூரியகுமார் தந்திரக்காரன்! போலீசுடன் போன் மூலமாகத் தொடர்புகொண்டு - நீங்கள் தேடுகிற சூரியகுமார் இதே ஊரில் கையில் வெட்டுக்காயங்களுடன் இருக்கிறான். பிடியுங்கள், என்று சொல்லி விட்டால்.......

அல்லது அவனே திரும்பி வந்து பலவீன நிலையில் என்னைக் கொன்று வீட்டால்.......

அல்லது மற்ற ஆட்களை ஏவி என்னைப் பிடித்து போலீசில் கொடுக்க வந்தால்.......

ஆபத்து எந்த வழியிலும் வாயைத் திறந்து காத்துக்கொண்டிருந்தது.

சீக்கிரம் ஊரைக் காலி செய்ய வேண்டும். எழுந்தான்.

ஓர் இரவு நேர பாசஞ்சர் வண்டியின் சௌக்கியம் எங்கே வரும்?

ஒரு ஸ்டேஷனில் குரு ஏறி உட்கார்ந்தவன்தான்!

காலையிலிருந்து சாப்பிடவில்லை. யாராவது கவனித்துவிடுவார்கள் என்று பயம்.

இப்போதும் உபாதைதான்! படுத்து முனகினால் சுகமாக இருக்கும். முடியாது.

வண்டி எங்கேயோ இருட்டைத் துருவிக் கொண்டிருந்தது.

பசி வயிற்றைக் கிள்ளியது. ரத்த ஒழுகலால் உடம்பு க்ஷீணித்துவிட்டது. கண் திறந்திருக்கும்போதே பிரமை வருகிறது.


ஒரு மாதிரி தூக்கத்தில் மேலாக மிதந்த பிறகு, திடுக்கிட்டது போல் கண் விழித்தான்.

வண்டி எங்கேயோ போய்க் கொண்டிருந்தது.

நேரம் காலை ஜாமமாக இருக்க வேண்டும்.

ஓர் அவுட்டரில் நின்றபோது இறங்கினான். வண்டி போனதும் மழை பிடித்துக் கொண்டது.

ஒரு கணம் கடவுள் மேலேயே



கோபம்! ஒருத்தனுக்குக் கஷ்டம் வந்தால் மேலும் மேலும் வளர்த்துக்கொண்டே போவதா?

வாழ வைப்பதற்கு ஒரு நம்பிக்கை கொடுக்க வேண்டாமா?

அவன் நொந்துகொண்டதைக் கடவுள் அறிந்துகொண்டாரோ தெரியாது. பலத்த மழையை அனுப்பி வைத்தார்.

வானும் பூமியும் ஒன்றாக இணைந்தன. கால் மணியில் வெள்ளக் காடுகளாக நீர் ஓடிற்று. தெப்பலாக நனைந்துகொண்டு ஊர்ந்து போனான்.

முதல்நாள் சாப்பிடாத பசி! காயங்களில் ஓயாத எரிச்சல்! போதாதற்கு மழை!

நடந்தான்.

ஒரு பர்லாங்கில் ரயில் நிலையத்தை அடுத்துப் பல் கட்டடங்கள் இருந்தன. அவற்றை அணுகுவதற்குத் தகுதி இல்லாதவன் போல் தூரத்திலிருந்து ஏக்கமாகப் பார்த்தான். மனித சஞ்சாரமுள்ள இடங்களும் மனித வாசஸ்தலங்ளும் அவனுக்கு வேப்பங்காய்களாகக் கசந்தன.

மனித் நாகரிகமே அவனுக்குப் பெரிய விரோதி போல் தோன்றியது.

அவன் வேட்டையாடப்பட்டவன் என்று மனித வாழ்கைக்கு அப்பால் ஒரு மிருக வாழ்க்கையை வாழ்வதற்குத்தான் அவன் தகுதி உள்ளவன் என்று நினைத்தான்.

அவன் மத்திலேயே அவன் மனித தரத்திலிருந்து கீழே இறங்கிவிட்டது தெரிந்தது.

கட்டடங்கள் - நெருக்கியிருந்த அந்த ரயில் வட்டாரத்தை விடுத்துக் கொட்டும் மழையில் ஒரு விரக்தியோடு நடந்து போனான்.

பொழுது விடிந்தது. மழை நிற்கவில்லை. வாங்கிக்கொண்டிருந்தது.

மரத்தடியில் அந்தக் குடிசைப் பக்கம் போனபோது தேகம் வெட வெடத்துக் கொண்டிருந்தது.

பற்கள் கிடுக்கிக்கொண்டிருந்தன. கண்கள் குளிரில் விறைத்தன. வாய் அவனை அறியாமல் "அம்மா" என்று தீனமாய் அழைத்தது. "அம்மா!"

குடிசை வாசலில் நின்றான். உடல், உள்ளம், உயிர் மூன்றுமே அடைக்கலத்தைக் கேட்டன. "அம்மா!"

அந்த நேரத்தில் அந்தக் குடிசை வாசல் கூட ஓர் ஆதரவின் வரவேற்பு போல் காட்சி கொடுத்தது.

பாதி நினைவுடன் உள்ளே போனான். மண் தரையில் நீராகக் கொட்டினான். பிறகு தள்ளாமை அவன் நினைவையும் அழித்து, கண்களையும் மறைக்கத் தடால் என்று கீழே விழுந்தான்.

கண் விழித்தபோது கணப்பு இருந்தது. ஆடை இல்லை.

உள்ளே இருட்டாக இருந்தது.

ஒரு பெண்மணி உட்கார்ந்திருந்தாள். முகமும் உடம்பும் கும்பியிருந்தன. பல் எடுப்பாக இருந்தது. முப்பத்தைந்து இருக்கும். கண்ணை மூடியே இருந்தாள். ஏழ்மை அவளது வயசான துணியிலும், மார்பின் வெறுமையிலும் தெரிந்தது. குருடோ?

"அம்மா" என்றான் தீனமாக.

"முழிச்சுட்டீங்களா?"

"ரொம்ப நாழி மயங்கி இருந்தேனா?"

"காலையில் வந்துட்டீங்க! இப்போ பொழுது சாயப் போவுது!"

ஆச்சரியமாக இருந்தது.

வெளியே தூறல் சத்தம் இன்னும் கேட்டது. மனசு அங்கு வந்த நிலையையும் அங்கு இருக்கும் நிலையையும் கணக்கெடுத்தது. அவனது மத்திய தர வாழ்க்கைக்கு இப்போது அவன் எருக் கிடங்கில் இருப்பது போன்ற உணர்வு. இதை நிராகரிக்க மனதிற்கு வலு இல்லை. ஒரு பெரிய சக்தி அவனை வதைப்பது போலவும், அவன் அதை ஏற்றுக்கொள்வது போலவும் எண்ணினான்.

"எப்படி சூடு வருது?" மருண்டவாறு கேட்டான்.


"உங்க பக்கத்திலே தீச்சட்டி வச்சிருக்கேன். விரைச்சுப் போய்ட்டீங்களே."

எண்ணெய் விளக்கில் அவன் ஆடைகள் மூங்கில் கொம்பிலும் அவளது சீலை, அவன் மேலும் தெரிந்தது.

சோகை பிடித்து நெடியோடு கிடந்த சீலை. அருவருப்பாக இருந்தது. ஆனால் நிராகரிக்க விருப்பமில்லை. வருவதை ஏற்றுக்கொள்ளத்தான்.....

(துரோகம் துரத்தும்......)

## நட்பு- காதல் பற்றி பிரபலங்களின் கருத்து



சாலட் யோர்க்:-

ஒவ்வொருவரின் வாழ்க்கையிலும் நட்பு, காதல் என்பன தவிர்க்க முடியாத ஒன்றாகி விட்டன. இங்கு நட்பு, காதல் பற்றி சில பிரபல்யங்களிடம் 'பேமீலா' சஞ்சிகையானது கருத்துக் கேட்டபோது,

***1. கரீ பீஸ்ஸர்:-***


மனதில் ஒரு தன்னம்பிக்கையை உருவாக்கும் ஒவ்வொரு பெண்ணின் மனதிலும் ஒவ்வொரு குறைகள் உண்டு. இதனைப் பகிர்ந்து கொள்வதற்கு ஒரு நண்பன், நண்பி அவசியம். ஆனால், காதல் வயப்பட்டால் ஒரு ஆணின் ஆதிக்கத்துக்குக் கீழ் அவள் சென்று விடுவாள். தன்னைச் சுதந்திரமாக்க அவள் மிகவும் போராட வேண்டும். என்று கூறும் இவர் ஒரு பிரபல ர்ழடடலறழழன நடிகை ஆவார்.



மிரிண்டா ஹெப்ஸ்

***2. சாலட் யோர்க்:-***

நண்பரில்லாமல் ஒருவன் பல காலம் வாழ்வானரகில் அவன் மனோரீதியாக பாதிக்கப்படுவான் என்று கூறும் இவர் 'divine lovers' எனும் ஆங்கிலப் படத்தின் மூலம் பலரின் தூக்கத்தைக் கெடுத்தவர். எனினும் காதலானது உறுதியானது, தன்னை அர்ப்பணிக்கக் கூடியது. ஒவ்வொரு பெண்ணின் எதிர்பார்ப்புக்களையும் பூர்த்தி செய்யக் கூடியது.



சமந்தா ஜோண்ஸ்


***3. மிரிண்டா ஹெப்ஸ்:-***

நேர்மையான காதலானது ஒரு பெண்ணுக்கான கடவுளின் வரம். அதில் நேர்மைத்தன்மை உள்ளவரை அது அவளை நேர்மையாகவே நடத்தும் என்று கூறும் இவர், அமெரிக்காவின் தலை சிறந்த சட்டத்தரணியாகும்.

***சமந்தா ஜோண்ஸ்:-***

இவர் Hollywoodஇன் பிரபல செக்ஸ் நடிகையாவார். அவர் காதலைப் பற்றியே மிகவும் உயர்வான கருத்துக்களைக் கொண்டுள்ளார். "எனக்கு வித்தியாசமான உறவுகளே ரொம்பப் பிடிக்கும். எனவே, வித்தியாசமான காதலர்களையே நான் எதிர்பார்க்கிறேன்". என்கிறார் இவர்.

வாசக நெஞ்சங்களே! உங்களுக்குள் தோன்றும் நட்பு, காதல் பற்றிய கருத்துக்களை எமக்கு எழுதி அனுப்புங்கள்.




கரீ பீஸ்ஸர்

**வாசகர்களின்**

**தவிர்க்க முடியாத காரணத்தினால் பணிப்பெண்களின் அவலங்கள் அடுத்தவாரம் பிரசுரமாகும்**

# 23 ஒரு பெண்ணின் வாழும் வரலாறு



## ஹிலாரி கிளிண்டன் எழுதுகிறார்



அந்தவேளையில் எனது நல்ல நம்பகமான ஆசான்கள் இருவரிடமும் நான் கூறியது என்னவென்றால்; "East" கல்லூரிக்கு போவதுபற்றி எனக்குத் தெரியாது என்று நான் கூறினேன்; இருந்தபோதிலும் அவர்கள் என்னிடம் வற்புறுத்தி, மிகவும் வினயமாக வேண்டிக்கொண்டது என்னவெனில்; நான் விண்ணப்பிக்கும் கல்லூரி எது என்பது பற்றி எனது பெற்றோர்களிடம் கட்டாயம் ஆரோக்கியமான ஆலோசனைகள் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று அவர்கள் என்னிடம் மிக வினயமாக வேண்டிக்கொண்டார்கள். அந்த வேண்டுகோளை ஏற்றுக்கொண்ட நான் எனது பெற்றோர்களிடம் இதுபற்றி மனம் விட்டுப் பேசி முடிவெடுப்பதற்கு தீர்மானித்தேன்.



ஆனால் எனது தாயாரைப் பொறுத்தவரை நான் வரும்பிய ஏதாவது ஒரு பல்கலைக்கழகத்துக்கு செல்வதற்கு பூரணமான சுதந்திரத்தை வழங்கினாள். அவள் எதுவித ஆட்சேபனைகளையும் தெரிவிக்கவில்லை; அத்துடன் எனது தந்தையும் கூட இதுவிடயத்தில் பூரண சுதந்திரத்தை வழங்கியது மட்டுமல்லாமல் ஆரோக்கியமான ஆலோசனைகளையும் கூறினார். அதாவது எனது தந்தையோ **Mississippi** அல்லது **Rad cliffe** பல்கலைக்கழகங்கள் பற்றித்தான் எப்போதும் பேசிக்கொண்டிருப்பார். **Smith** மற்றும் **Wellesley** பல்கலைக்கழகங்கள் பற்றி அவருக்கு மிகத் தெளிவான விளக்கங்கள் இல்லை என்பதுதான் எனது தனிப்பட்ட கருத்தாகும். மேலும் எனது தந்தையார் அந்தப்பல்கலைக்கழகங்களுக்கு அதாவது **Redcliffe** மற்றும் **Missis-sippi** பல்கலைக்கழகங்களுக்கு சென்று தரிசித்து வந்திருக்கிறார். ஆனால் அந்த இரண்டுக்குமே நான் போகவில்லை என்பதுவும் இங்கு குறிப்பிட்டுக் கூறக்கூடியதாகும்; ஆனால் நான் ஏற்கனவே **smith Wellesley** ஆகிய பல்கலைக்கழகங்களுக்கு சென்றிருந்த போது அப்பல்கலைக்கழகங்களின் கட்டிடங்கள் மிகவும் அழகாக தோற்றம்அளித்ததுடன்! அப் பல்கலைக்கழகங்களிற்கு அருகில் காணப்பட்ட **WABAW, WINOLA** போன்ற நீர்தேக்கங்கள் இரம்மியமாக காட்சியளித்ததோடு: அவைகள் மனங்கொள்ளாக் காட்சியாகவே இருந்தது. அவைகளை நான் எப்போதும் இரசித்து ரசித்து அகமகிழ்வேன்.

மேலும், உண்மையிலேயே எனது நண்பர்களில் பலபேர் **Wellesley** - "வெலஷ்லி" பல்கலைக்கழகத்துக்கு போவதற்கு முடிவு எடுத்திருந்த விடயம் பற்றி எனக்கு பின்புதான் அறியக் கிடைத்தது, அவ்வாறு அதிக நண்பர்கள் முடிவு எடுத்தது பற்றி நான் மிக்க மகிழ்ச்சியுடனிருந்தேன். அதன் பின்பு எது எப்படி இருந்தபோதிலும். நானும் "வெலஷ்லி" பல்கலைக்கழகத்துக்குள் நுழைவது பற்றித்தான் உறுதியான முடிவினை எடுத்தேன். நாங்கள் வசித்து வந்த இடத்திலிருந்து இந்தப் பல்கலைக்கழகம் வெகு தூரமான ஒரு இடத்திலிருந்தது. இது பற்றி எனது பெற்றோர்கள் தங்களிடையே ஒருவரிடையே ஒருவர் பேசிக் கொண்டாலும், இது விடயத்தில் அவர்கள் பின்பு ஒருபோதுமே எதுவித எதிர்ப்பும் தெரிவிக்கவில்லை என்பதையும் இங்கு குறிப்பிட்டுக் கூறத்தான் வேண்டும்;



உண்மையில் எது எப்படி இருந்த போதிலும் நான் அப்போது மிக தூரமான ஒரு இடத்தில் அமைந்திருந்த ஒரு பல்கலைக்கழகத்தில் கல்விகற்ற இந்த விடயம் அப்பொழுது எனக்கும், எனது குடும்பத்துக்கும் வெகுவான தூரத்தில் இருக்கின்றது என்கின்ற மனப்பிரமையைக் கொடுத்தது. என்றாலும், தற்பொழுது எனது மகள் கூட எங்கள் வீட்டிலிருந்து மிகத் தூரமான இடத்தில் இருக்கின்ற ஒரு பல்கலைக்கழகத்தில் உயர்கல்வி கற்கின்றதை பார்க்கின்றபொழுது, இவைகளெல்லாம் எனக்கு ரொம்பவுமே மிகச்சின்ன விடயங்களாகவே தென்படுகிறது.

(இன்னும் வரும்...)


***இருபதாம் நூற்றாண்டின் வரலாறு நமது கண்முன் உள்ளது. ஆனால் கடந்த பல நூற்றாண்டுகளின் வரலாற்றை நாம் காண முடியாதுள்ளது.***

***ஆனாலும், நம்மைக் கடந்து சென்ற 19ம் நூற்றாண்டு வரலாறு கண்ணீர் சிந்த வைப்பதும், அழகியதும், அரியதுமான படங்களினூடாக உங்கள் முன் பதிவு செய்யப்பட்டுள்ளது.***

***ஒவ்வொரு படமும் ஒவ்வொரு கதையைக் கூறுவன. 19ம் நூற்றாண்டின் வரலாறானது முன்னெப்போதுமில்லாத வகையில் அதிக மாற்றங்களை சந்தித்தது. எல்லா மாற்றங்களும் இயல்பாக ஏற்பட்டதுமல்ல, அவற்றுள் சில யுத்தங்கள், எதிர்ப்புகளைத்தாண்டி நடந்துள்ளன. பல சாம்ராஜ்யங்கள் சிதைந்து, புதிய நாடுகள் உருவாகி யுள்ளன. விஞ்ஞான, அறிவியல் மாற்றங்கள் ஏற்படுகின்றன. உலகம் மாறிக்கொண்டே வந்திருக்கிறது.***

***19ம் நூற்றாண்டு தொடக்கத்தில் உலகின் முழு நிலப்பரப்பில் ஐந்தில் ஒரு பகுதி பிரித்தானிய சாம்ராஜ்யத்தின் கீழிருந்தது. இப்போது? இப்படியான பல கதைகள்... இவைகளை நமது வாசகர்கள் தரிசிக்க ஒரு வாய்ப்பை தினமுரசு ஏற்படுத்துகிறது.***


## Messina வை அழித்த பூகம்பம்



ஐரோப்பாவில் ஏற்பட்ட மிகப் பெரிய பூகம்பம் சிசிலியின் பெரிய நகரமான மெசினா (Messina)வில் 28-12-1908ல் ஏற்பட்டது. அந்த பூகம்பத்தின் அழிவுக்காட்சியையே பக்கத்தில் உள்ள படத்தில் காண்கிறீர்கள். இந்த பூகம்பத்தில் மிகப்பரிதாபமாக கொல்லப்பட்டவர்களின் தொகை 150.000 ஆகும். அந்த நகரின் முழுப்பகுதியுமே அப்படியே அழிந்துபோயின. அத்துடன். ஒரு சில மனிதர்களும்: ஓரிரு கட்டடங்களுமே எஞ்சியிருந்தன.

## இலண்டனில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியின் ஆரம்பப் பெருவிழா

இலண்டனில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியின் ஆரம்பப்பெருவிழா 1908ம் ஆண்டு ஜுலை மாதம் மிகக் கோலாகலமாக ஆரம்பமானது. அந்தக் காட்சியையே இப் படத்தில் காண்கிறீர்கள். இலண்டனில் நடைபெற்ற இந்த ஒலிம்பிக் பெருவிழாவின் ஆரம்ப நிகழ்வினை (The Prince of wales) வேல்ஸின் இளவரசர் ஆரம்பித்து வைத்தார்: அத்துடன் இந்த ஒலிம்பிக் பெருவிழா நடந்த இடத்திற்கு பக்கத்தில் கட்டப்பட்ட (Anglo - French Exhibition) கண்காட்சி மண்டபமும் இதற்கு முதல்



(14-05-1908ம்) திகதி வேல்ஸின் இளவரசனால் திறந்துவைக்கப்பட்டது.

# முட் பாதையில் மரித்த மிதவாதம்

**இரு எழுத்தாளர்கள் சேர்ந்து எழுதும் இலங்கைத் தமிழ் அரசியல் தொடர் இது.**

## 74 தேனீர் கோப்பைக்குள் இரத்தம்!

### புலிகளின் ஜனநாயக மறுப்புப் போக்கு

யாழ்ப்பாணக் குடாநாட்டின் பல்வேறு வங்கிகளிலும் திரட்டப்பட்ட பணத்தை நீர்வேலியில் வைத்துக் கொள்ளையிட்ட சம்பவம் தொடர்பாகக் கைதாகி வெலிக்கடை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்களில் குட்டிமணி எனப்படும் செல்வராசா யோகசந்திரன் முக்கியமானவர். வட்டுக்கோட்டைத் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.திருநாவுக்கரசு காலமாகியதால் ஏற்பட்ட வெற்றிடத்திற்கு குட்டிமணியை நியமிக்கத் தமிழர் விடுதலைக் கூட்டணி தீர்மானித்தது 21.03.1979இல் பொலிஸ் கான்ஸ்டபிளான சிவநேசன் என்பவர் சுட்டுக் கொல்லப்பட்டமை தொடர்பான வழக்கில் குட்டிமணியைக் குற்றவாளியாக நீதிமன்றம் ஆகஸ்ட் 13, 1982இல் தீர்ப்பு வழங்கியிருந்தமையும் இங்கு குறிப்பிடத் தக்கது.

நீர்வேலியில் இடம்பெற்ற வங்கிப் பணக் கொள்ளை தொடர்பாகக் குட்டிமணியுடன், ரெலோ இயக்க நிறுவுனர்களில் ஒருவரான தங்கத்துரை மற்றும் ஜெகன், நடேசன் போன்ற பலர் முக்கியஸ்தர்கள் கைதாகி இருந்தனர். இவர்கள் அனைவரும் யாழ்ப்பாணம் நாகர்கோவிலுக்கு அப்பாலுள்ள மணற்காட்டுப் பகுதியிலிருந்து இந்தியாவை நோக்கிச் செல்ல ஆயத்தமாகிக் கொண்டிருந்த போதே கைது செய்யப்பட்டனர். இவ்வாறு இவர்கள் கைது செய்யப்படுவதற்குத் தேவையான தகவல்கள் பொலிஸாருக்கு எப்படி கிடைத்தது என்பது மர்மமாகவே உள்ளது. எனினும், அச் சமயத்தில் தங்கத்துரையை விசாரணைக்கு உட்படுத்தியவர்களில் ஒருவரான மேஜர் ஜெனரல் சரத் முனசிங்க தனது 'ஒரு போர் வீரனின் டயரி' என்ற நூலில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:

''தங்கத்துரையின் கூற்றுப்படி பிரபாகரனை அவர் ஒருபோதும் நம்பவில்லை. பனாகொடை இராணுவ முகாமில் தங்கத்துரை தடுத்துவைக்கப்பட்டிருந்த வேளையில், எனக்கு முன்பாக தங்கத்துரை கூறினார். பிரபாகரன் என்பவர் ஆதிக்கம் பெறுவதற்கு ஒருவரும், ஒருபோதும் அனுமதிக்கக் கூடாது. அவர் ஆதிக்கம் பெறுவாரேயானால் அவர் முழு நாட்டையும், தமிழ் இனத்தையும் முற்றாக அழித்துவிடுவார். இதனை நான் உங்களுக்கு உறுதியாகக் கூறி வைக்கிறேன்'' என்றார். 'நாங்கள் ஆயுதங்களின்மேல் காதல் கொண்ட மனநோயாளிகள் அல்ல'' என்று தங்கத்துரை இலங்கை நீதிமன்றத்தில் பகிரங்கமாகத் தெரிவித்திருந்தவர் என்பதும் குறிப்பிடத் தக்கது.

தங்கத்துரையின் சகாவும், கைதியாக இருந்தவருமான குட்டிமணியை பாராளுமன்ற உறுப்பினராக்க கூட்டணியினர் ஏன் முயன்றனர் என்பது குறித்து அமிர்தலிங்கம் பாராளுமன்றத்தில் விளக்கம் அளித்தார்.

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் விசாரிக்கப்படுவது குறித்து பொதுமக்கள் மத்தியில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தவும், பொலிஸார் முன்னிலையில் பெறப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சியமாக ஏற்றுக்கொள்வதன் அனர்த்தம் குறித்து விளக்கவும்தான் இந்தத் தெரிவு மேற்கொள்ளப்பட்டது என்றார்.

**இணைந்து எழுதுவது**
**த.சபாரத்தினம்**
**+**
**அம்பி மகன்**

குட்டிமணியின் நியமனத்தை தேர்தல் ஆணையாளர் ஏற்றுக்கொண்டார். இதனையடுத்து சிறைச்சாலைகள் திணைக்கள ஆணையாளருக்கு எழுத்து மூல விண்ணப்பம் ஒன்றைக் குட்டிமணி செய்தார். பாராளுமன்றம் சென்று உறுப்பினராகப் பதவிப் பிரமாணம் செய்துகொள்ள அனுமதிக்கும்படி குட்டிமணி வேண்டுகோள் விடுத்தார். ஆனால், நீதிமன்றத்தில் சிறைச்சாலைகள் திணைக்கள ஆணையாளருக்காக ஆஜரான சட்டமா அதிபர் ஆட்சேபனைகளைக் கிளப்பினார். அவரது ஆட்சேபனைகளை ஏற்றுக்கொண்ட நீதிமன்றம் குட்டிமணி சத்தியப்பிரமாணம் செய்துகொள்வதற்கு அனுமதி வழங்க மறுத்தது.

குட்டிமணியின் நியமனத்திற்கு எதிராக சிங்கள மக்கள் மத்தியில் உணர்ச்சிகள் தூண்டிவிடப்பட்டன. இதனால் குட்டிமணி பாராளுமன்ற உறுப்பினராகப் பதவிப் பிரமாணம் செய்துகொள்வது மென்மேலும் காலதாமதம் ஆகியது. பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் நியமனம் பெற்று முதல் அல்லது தெரிவுசெய்யப்பட்டு முதல் மூன்று மாதங்களுக்கு இடையில் பதவிப் பிரமாணம் செய்துகொள்ள வேண்டியது அவசியமாகும். ஆனால், நியமனம் பெற்றது முதல் ஏற்பட்ட காலதாமதம் காரணமாக குட்டிமணி பதவி ஏற்க முடியாமல் போனது. இதனையடுத்து ஜனவரி 24, 1982இல் குட்டிமணி தனது ஏற்காத பதவியை இராஜினாமா செய்தார்.

இந்த வெற்றிடத்திற்கு டாக்டர் நீலன் திருச்செல்வம் நியமனம் பெற்றார். இவர் மார்ச் 8, 1982இல் பதவிப் பிரமாணம் செய்துகொண்டார்.

இந்த நிலையில் தமிழர் விடுதலைக் கூட்டணி மற்றுமொரு சங்கடத்தை எதிர்நோக்கியது. வடக்கு – கிழக்கு மாகாணத்தில் உள்ளூராட்சிமன்றங்களுக்கான பிரதிநிதிகளைத் தெரிவுசெய்வதற்கான தேர்தலை மே 18, 1982இல் நடத்துவதென அரசாங்கம் அறிவித்தது. இந்தத் தேர்தலில் வேட்பாளர்களை நிறுத் துவதற்கான முயற்சிகளைக் கூட்டணியினர் மேற்கொண்டனர். ஆனால், ஈழத்தின் விடுதலை என்பதைச் சில அரசியல் கட்சிகள், வாக்குகளைப் பெறும் தந்திரோபாயமாகப் பயன்படுத்துவதாகக் குற்றம் சுமத்திய புலிகள், இந்தத் தேர்தல்களைத் தமிழ் மக்கள் புறக்கணிக்க வேண்டுமென வற்புறுத்தினர். இது தொடர்பில் துண்டுப் பிரசுரங்களை அச்சிட்டு விநியோகித்தனர்.

ஆனால், புலிகளின் இந்தச் சவாலை எதிர்த்து முறியடிக்க வேண்டுமென கூட்டணியின் செயற்குழு தீர்மானித்தது. செயற்குழுக் கூட்டத்திலிருந்து வெளியேறிவர்களைச் சந்தித்த இளைஞர்கள், தேர்தலில் போட்டியிட முன்வர வேண்டாமென வற்புறுத்தினர். அவ்வாறு தேர்தலில் போட்டியிட முன்வராதவிடத்து ஐக்கிய தேசியக் கட்சியும் அதன் ஆதரவாளர்களுமே பலன் பெறுவார்கள் என்று கூட்டணியினர் சுட்டிக் காட்டினார்கள்.

இருந்தபோதும் இளைஞர்களின் எதிர்ப்புத் தீவிரமாகியது. தேர்தல் பிரசாரக் கூட்டங்கள் திட்டமிட்ட வகையில் குழப்பப்பட்டன. இவ்வாறு குழப்பப்பட்ட கூட்டங்களில் ஒன்று யாழ்ப்பாணம் ஓட்டுமடம் பகுதியில் நடத்தப்பட்டதாகும். இங்கு உரையாற்ற வந்த அமிர்தலிங்கம் காரில் இருந்து இறங்கியதும், உடனடியாகவே கூடி இருந்தவர்களால் சூழப்பட்டு உரையாற்ற அனுமதிக்கப்படாமல் திருப்பி அனுப்பப்பட்டார். மக்கள் மத்தியில் பெரும் குழப்பம் ஏற்பட்டது.

இவை ஒருபுறமிருக்க, ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர்கள் திட்டமிட்டு இலக்கு வைத்துக் கொல்லப்பட்டனர். இவ்வாறு கொல்லப்பட்டவர்களில் பருத்தித்துறை நகர சபைக்கான வேட்பாளரான கே.வி.இரத்தினசிங்கம் சாவகச்சேரி நகர சபைக்கான வேட்பாளரான எஸ்.ஜே.முத்தையா, வேட்பாளர் ஒருவரின் மெய்க்காப்பாளரான வி.இராஜரத்தினம் ஆகியோரும் அடங்குவர். புலிகளின் இக்

> **"பிரபாகரன் என்பவர் ஆதிக்கம் பெறுவதற்கு ஒருவரும், ஒருபோதும் அனுமதிக்கக் கூடாது. அவர் ஆதிக்கம் பெறுவாரேயானால் அவர் முழு நாட்டையும், தமிழ் இனத்தையும் முற்றாக அழித்துவிடுவார். இதனை நான் உங்களுக்கு உறுதியாகக் கூறி வைக்கிறேன்" என்றார் தங்கத்துரை**

கொடூரமான கொலைகளைக் கண்டதும் தமிழ்க் காங்கிரஸ் கட்சி வேட்பாளர்கள் போட்டியிலிருந்து ஒதுங்கிக் கொண்டனர். தீவிரப் பிரசாரங்கள் மேற்கொள்வதைப் புத்திசாதுரியமாகத் தவிர்த்துக்கொண்டனர்.

கூட்டணித் தலைமை புலிகளின் போக்கிற்கு விட்டுக்கொடுக்க விடாப்பிடியாக மறுத்தது. இதனால் தனிப்பட்ட வேட்பாளர்களை ஒவ்வொருவராக அணுகி போட்டியிலிருந்து புலிகள் பின்வாங்க வைத்தனர். யாழ்.மாநகர முதல்வர் பதவிக்காகப் போட்டியிட்ட நாகராசா முதல் சுமார் 35 வேட்பாளர்களும் போட்டியிலிருந்து விலகுவதாகப் பிரகடனம் செய்தனர். தேர்தல் வாக்குப் பதிவுத் தினத்தன்று புலிகள் யாழ்ப்பாணம், சாவகச்சேரி, பருத்தித்துறைப் பகுதிகளில் கைக்குண்டுகளை வெடிக்க வைத்தனர். படையினர் மீது தாக்குதல்களை நடத்தினர். பொலிஸாரைச் சுட்டுக் கொன்றனர். இவற்றையடுத்து படையினரும் பதில் தாக்குதல்களைத் தொடுத்தனர். பொதுமக்கள் வெகுவாகப் பாதிக்கப்பட்டனர். வாக்குப் பதிவு மிக மிக மோசமாகக் குறைவடைந்து இருந்தது.

வடக்கு – கிழக்கு மாகாணம் உட்பட தேர்தல் நடைபெற்ற பதினொரு மாநகர சபைகள் 36 நகர சபைகள் என்பன உத்தியோகபூர்வமாக ஜூன் 16 1982இல் கூடுமென அரசாங்கம் அறிவித்தது. ஆனால், இப் பதவியேற்புக்கு எவரும் செல்லக்கூடாதென புலிகள் உத்தரவு பிறப்பித்தனர்.

(தொடர்ந்து வடியும்....)




வணக்கம்! வணக்கம்!! வணக்கம்!!!

போனவாரத்தில பல புதினங்கள் நடத்திருக்கு. பல விஷயங்களை எடுக்க முடியேல்லை. எண்டாலும் சில முக்கியமான விஷயங்களை இவ்வாரம் பாப்போம். படுகொலைகள் மலிஞ்சிட்டு தெண்டதுதான் மிகக் கவலையாயிருக்கு. சமாதானம் நிலவுற காலமெண்டு சொல்லிக்கொண்டே உள்ளுக்குள்ளால யுத்தம் செய்யினம். இனிக் கேள்வியளுக்கு வருவம்.

***சின் :–*** *பெற்றோலியக் கூட்டுத்தாபன ஊழியர்கள் திடீரெண்டு பணி நிறுத்தம் செய்து நாட்டில எரிபொருளுக்குப் பெரும் தட்டுப்பாட்டை ஏற்படுத்திவிட்டனரே.*

**மன் :–** தனியார் நிறுவனத்துக்கு பெற்றோலியத்தை விற்கக் கூடாதெண்டு போராட்டம் செய்திருக்கினம். இந்திய நிறுவனமொண்டு பல கோடிகளைக் கொட்டிடச்சுக் காலத்து எண்ணை நிரப்பு நிலையங்களை அழகுபடுத்திற வேலையைச் செய்திருக்கு. திடீரெண்டு இந்த ஒப்பந்தத்தை தடுத்து நிறுத்துங்கோவெண்டால் என்ன நியாயம்? முந்தைய அரசு காலத்தில நாட்டின் பல சொத்துகள் தனியாருக்கு வழங்கப்பட்டிருக்கு. சிக்கலான இந்தப் பிரச்சினைக்கு சுமுகமாகன தீர்வு கண்டால் நல்லது.

***சின் :–*** *எங்கட நாட்டில எந்தப் பிரச்சினைக்கு சுமுகத் தீர்வு கண்டிருக்கிறாங்கள்... அம்பாறையில எங்கட புலிகளுக்கும் அரச படைகளுக்குமிடையில சந்திப்பொண்டு நடந்திருக்கே. இது நல்ல சகுனம்தானே......*

**மன் :–** ஏமாத்திப்போட்டீரே சின்னவரே.... சந்திக்க ஒருத்தருக்கும் விருப்பமில்லை. தம்பிமார் ரோட்டால போகேக்க படைகள் கடுமையாச் சோதிக்கினம் எண்டதுதான் பிரச்சினை. தம்பிமார் துவக்குகளையும் கொண்டு திரிகினம் எண்டு படைகள் சந்தேகிக்கினம். இனந்தெரியாமல் சுடுகிற கலையை தம்பிமார் கரெக்டாச் செய்யேக்க யாரால தடுக்க ஏலும்?

அவையள் ஒண்டும் செய்யமாட்டினமெண்டு சொல்லேலாது. ஆடின பாதமும், பாடின வாயும் சும்மா இருக்குமோ?

***சின் :–*** *தம்பிமார் பிழை விடுகினம் எண்டதைச் சொல்லேக்கையும் உங்கட வீராப்புக்கு குறைவில்லை. கிறீஸில ஆரம்பிச்சிருக்கிற ஒலிம்பிக் போட்டிகள் பற்றி ஏதாவது தகவல் இருக்குதோ?*

**மன் :–** தகவல்கள் குவியலாய் கிடக்கிற இடமே ஏதென்ஸ்தானே! அத்தனையையும் நான் சொல்லத் தேவையில்லை. அது முரசுக்காறர் எழுதியிருக்கினம். குறிப்பிடக் கூடிய விஷயம் என்னவெண்டால் இதுவரை நடைபெற்ற போட்டிகளின்படி ஆசிய நாடுகள் தான் பதக்கப் பட்டியலில முன்னணி வகித்துக்கொண்டிருக்கு இதைக் கேக்கிற இந்த நேரத்தில சீனா 4 தங்கமும், 2 வெள்ளியும், 1 வெண்கலமும் வென்று முதலிடத்தில இருக்கு.

***சின் :–*** *ஹெல உறுமய மற்றும் ஜே.வி.பி.யினரை சந்திக்க அழைப்பு விடுத்திருக்கிறார் தமிழ்ச்செல்வன். என்னவா இருக்கும்?*

**மன் :–** சாட்சிக்காறன் காலில விழுறதை விடவும் சண்டைக்காரன் காலில விழுறதே மேல் எண்டுவினம். அப்பிடித்தான் இதுவும். உந்த இரண்டு கட்சிக்காறரும் தமிழ் மக்களுக்கு எதிரானவையெண்டு சனங்களுக்குச் சொல்லியாச்சு. இப்ப அவையளோட பேசவும் அழைச்சாச்சு. இதென்ன பிரமாதம்? "புலிகள் கூப்பிட்டால் போவம். இடையில சந்திரசேகரன் தேவையில்லை" எண்டு காலில போடுறதால அடிச்ச மாதிரித் தெரிவிச்சதுதான் அடி.....

***சின் :–*** *உப்பிடியான அடிகளெண்டால் உங்களுக்கு நக்கல்தான். களுத்துறைச் சிறைச்சாலையில 10 வருஷத்துக்கும் மேலாகத் தடுத்து வைக்கப்பட்டிருக்கிற தமிழ் அரசியல் கைதிகள் கண்ணிவெடி அகற்றுகிற பணியில ஈடுபட விருப்பமெண்டும், அதற்கு உரிய நடவடிக்கையை எடுங்கோவெண்டும் கேட்டிருக்கினமே!*

**மன் :–** அந்தப் புதினமும் கேள்விப்பட்டனான்தான். தங்களின்ர விடுதலையைப் பற்றி ஒரு தரப்பாரும் கவனமெடுக்கினமில்லை. விடுதலை செய்யுங்கோவெண்டு இனிமேலும் உண்ணாவிரதமிருக்க உடம்பில சக்தியுமில்லை. சிறையுக்குள்ள முடக்கப்பட்டிருக்கிறம் எண்டு தெரிவிச்சிருக்கிற கருத்துக்கள் மனதை உருக்கிப்போட்டிச்சுது. தம்பிமாரின்ர விரக்தி பல பேரினுடைய மனச்சுளை இன்னும் தட்டி எழுப்பவில்லை .யெண்டது துரதிஷ்டந்தான். மக்களின்ர பேரில செய்யப்படுகிற அநியாயங்களால அப்பாவிகள் பாதிக்கப்படுகிறது கவலைதான். பெடியளின்ர இந்த வேண்டுகோளுக்குச் சாதகமான பதில் வருமோ எண்டு பொறுத்திருந்து பாப்பம்.

***சின் :–*** *கைதிகளின்ர விடுதலையில உண்மையா அக்கறைப்பட்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைத் தாக்கின கைதி விடுவிக்கப்பட்டிட்டார். ம்...இதெல்லாம் தேசிய விளையாட்டுத்தான். தம்பிமாரிட்ட ரணில் சரணாகதியடைஞ்ச மாதிரி சந்திரிகா அம்மையாரும் சரணாகதியடைவா எண்டு மு.கா.தலைவர் சொல்லியிருக்கிறாரே?*

**மன் :–** மு.கா.வின்ர அரசியல் எதிர்காலம் எப்பிடிப் போகப் போகுதெண்டு அவருக்குத் தெரியாமலிருக்கலாம். ஆனா அதிகாரத்தில இருக்கிறவையள் எப்படியாகப்போகினம் எண்டதைச் சரியாத் தெரிஞ்சு வச்சிருக்கிறார். ஆள் கெட்டிக்காறர்தான். ரணில் மாத்தையா சமாதானமெண்ட போர்வையில சரணாகதிதான் அடைஞ்சவர் எண்டதை இப்பவெண்டாலும் ஏற்றுக்கொண்டாரே! அதுவரைக்கும் ஓகேதான்.

***சின் :–*** *மன்னவரே ஹக்கீம் நானாவை ரணில் மாத்தையாவிட்ட போட்டுக் குடுக்கிறியளே. பாவம் மனிசன். பல குழப்பங்களில நிற்குது. ஆசிய நாடுகளிலயே மனித உரிமை மீறல், வன்முறைகள் எண்டதில இலங்கை முன்னிலை வகிக்கிறதா ஒரு செய்தி உலாவுதே.*

**மன் :–** இதையேன் கவலையாச் சொல்றீர்? எங்கட நாடு நல்ல விஷயங்களில முன்னிலை வகிக்க முடியாட்டியும் இப்பிடியெண்டாலும் முன்னிலையில இருக்கிறது பெருமைதானே!

இந்த அறிக்கையை வெளியிட்ட அமைப்பு சர்வதேச சமூகத்துக்கும் தெரிவிச்சிருக்கும்தானே. நீர் ஏன் கவலைப்படுகிறீர்?

***சின் :–*** *இதச் செய்யிறவையளே கவலைப்படயில்லை. நான் ஏன் கவலைப்பட வேணும். காலத்தைக் கடத்தாமல் அரசு பேச்சுக்களை ஆரம்பிக்க வேணுமெண்டும் உங்கட தம்பிமார் எச்சரிக்கிற மாதிரி தெரிவிச்சிருக்கினமே.....?*

**மன் :–** சின்னவர் கில்லாடிதான். எச்சரிக்கினம் எண்டதைப் புரிஞ்சுகொண்டீங்களே....

## மன்னவரும் – சின்னவரும்

இன்னொண்டை யோசிச்சீங்களோ? தம்பிமார் வச்ச இடைக்கால நிர்வாக யோசினையை அரசு ஏற்றுக்கொண்டு பேச வேணும். அரசு முன்வைக்கிற எந்த யோசினையைப் பற்றியும் பேச ஏலாதெண்டு மெல்லே சொல்லியிருக்கினம். யோசினைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டாப் பேச என்ன இருக்குது? பிரச்சினை எண்டதே பேசித் தீர்க்கத்தானே! இப்ப தெரியுதே சமாதானத்தில எத்தினை விருப்பமெண்டு....

***சின் :–*** *உங்கட தம்பிமாருக்குத்தானே நல்லாச் சொல்லுங்கோ. அமைச்சர் டக்ளஸை ஜேர்மனி, கனடா, பிரிட்டிஷ் பிரதிநிதிகள் சந்திச்சிருக்கினமே.....*

**மன் :–** சமாதான முயற்சிகள் பின்னடைவை அடைய அடைய சர்வதேச சமூகம் தம்பிமார் மீது நம்பிக்கை இழந்துதான் மாற்றுக் கருத்துக் கொண்டவர்களை சந்திக்கினமெண்டு நினைச்சன். ஆனால், தம்பிமாரையும் சர்வதேசப் பிரதிநிதிகள் சந்திக்கினமே எண்டதுதான் குழப்பமாக் கிடக்கு. ஒரு நாணயத்துக்கு இரண்டு பக்கம் இருக்குமாப் போலப் பார்க்கினமாக்கும்.

இரகசியம் காத்தல் அவசியம் என்பதால் பெயர்கள், இடங்கள் யாவும் கற்பனையில்

# நெஞ்சினில் என்ன காயமோ...? 70

## பிறழ் நம்பிக்கை நோய்

### பிறழ் நம்பிக்கை நோய் என்றால் என்ன?

இந்த நோயால் பாதிக்கப்பட்டவர்களின் பிரதானமான அம்சம் பிறழ் நம்பிக்கையாகும். இப் பிறழ் நம்பிக்கைகள் ஒன்றாகவோ, பலவாகவோ இருக்கலாம். ஒரு சிலரில் பிறழ் நம்பிக்கைளைத் தொடர்ந்து மாயப் புலனுணர்வுகளும் தோன்றலாம். இந்தப் பிறழ் நம்பிக்கைகள் சார்ந்த செய்கைகள் அல்லது செயற்பாடுகள் மனப்பாங்குகளைத் தவிர, நோயாளியின் மற்றைய நடவடிக்கைகள் (பேச்சு, மனோபாவம்) சாதாரணமாகக் காணப்படும்.

### பிறழ் நம்பிக்கை நோய் எப்போது தோன்றுகிறது?

பிறழ் நம்பிக்கை நோய் பொதுவாக நடுத்தர வயதினிலேயே தோன்றுகிறது.

## உள மருத்துவம்

எனினும் ஒரு சிலரில் இளம் வயதிலும் இது தோன்றலாம். இளவயதில் பொதுவாக அவர்களின் உடல் மாற்றம் தொடர்பான நம்பிக்கைகள் தோற்றம் பெறுகின்றன.

### பிறழ் நம்பிக்கை தோன்றுவதற்கான காரணம் யாது?

பிறழ் நம்பிக்கையின் தோற்றம் பெரும்பாலும் அந் நபரின் வாழ்க்கை நிகழ்வை மையமாகக் கொண்டே அமைகிறது. சிறுபான்மை மக்கள் கூட்டத்தில் சந்தேகத்துடன் தொடர்பான பிறழ் நம்பிக்கைகள் தோன்றுவதாகக் கருதப்படுகிறது.

உடல் நோய்களால் பாதிக்கப்பட்டவர்களை விட உள நோயினால் பாதிக்கப்பட்டவர்களே அதிகமாக காணப்படும் இன்றைய காலகட்டத்தில், உள நலம், உளப் பாதிப்புகள், உள நோய்கள் பற்றி அறிந்துகொள்வதும் இவற்றுக்கான வைத்திய முறைகளை அறிமுகப்படுத்துவதும் அவசியமாகிறது. எனவே மேற்படி உள மருத்துவத்துறையில் அநுபவம் பெற்றவர்களும் நிபுணர்களுமான வைத்திய கலாநிதி திரு. த. கடம்பநாதன் (எம்.பி.பி.எஸ். எம்.டி உள மருத்துவம்) அவர்களும் உளவியலாளர் திரு. தி. சுவீந்திரன் பி.ஏ (உளவியல்) எம்.பில். உள மருத்துவம்) அவர்களும் இணைந்து தமது அநுபவங்களை பகிர்வர் என்பதை மகிழ்ச்சியுடன் தெரியப்படுத்திக் கொள்கின்றோம்.

### பிறழ் நம்பிக்கை நோயின் வகைகள் யாவை?

பல்வேறுபட்ட பிறழ் நம்பிக்கை இந் நோயின் அடிப்படையாக அமைகிறது. அவற்றின் வகைகளாவன:

1. தீங்கு இழைக்கப்படும் என்ற சந்தேகம்
2. துணைவர் மீதான சந்தேகம்
3. தாங்கள் மற்றோரால் காதலிக்கப்படுகிறோம் என்ற எண்ணம்.
4. உடல் மாற்றம் சம்பந்தமான எண்ணம்.

இவற்றைவிட ஒரு சில நோயாளிகள் எவ்விதமான அடிப்படைக் காரணங்களும் இல்லாமலே அதிகாரத்தில் உள்ளவர்களுக்கு எதிராகவோ அல்லது மற்றவர்களுக்கு எதிராகவோ தொடர்ந்தும் குறைகளைக் கூறிக்கொண்டும், வழக்குகளை உருவாக்கிக்கொண்டும் இருப்பர். பல்வேறுபட்ட வழக்குகளுக்கு சமுகம் அளித்துக்கொண்டும் இருப்பர். சில்வேளைகளில் நீதிபதிக்கு எதிராகவோ அல்லது தங்கள் எதிராளிக்கு எதிராகவோ பயமுறுத்தல்களை ஏற்படுத்தவும் முனைவார்கள்.

இன்னும் ஒரு சிலர் சமயம், சமயம் சார்ந்த தத்துவரீதியான, அரசியல் தொடர்புடைய பிறழ் நம்பிக்கைகளைக் கொண்டு இருப்பார்கள். இப் பிறழ் நம்பிக்கையின் அடிப்படையில் தொடர்ந்தும் சமூகத்தை விமர்சித்துக் கொண்டு இருக்கும் இவர்கள் ஒரு சிலவேளைகளில் சமூகத்துக்குப் பிரயோசனமற்ற நடவடிக்கைகளிலும் ஈடுபடுவார்கள். சில அரசியல் கொலையாளிகளையும் இந்த வரையறைக்குள் அடக்கலாம்.

உதாரணம்:- 1

35 வயதுடைய நரேன் ஹோட்டல் முகாமையாளர். அவன் திருமணம் முடித்து ஒரு வருடம் ஆகின்றது. இரு வருட காதலின் பின்னர் திருமணம் கைகூடி இருந்தது. இவர்களின் குடும்ப வைத்தியர், நரேனினது மனைவியின் தலைவலி தொடர்ந்தும் இருந்த காரணத்தால் அவளை உளவளத்துறைக்கு அனுப்பிய பின் தான் நரேனுக்கு இருந்த பிரச்சினை வெளிவரத் துவங்கியது.

நட்புகொண்ட காலம் முதலே நரேனுக்கு அவன் மனைவி மீது சந்தேகம் இருந்தது தெரியவந்தது.

(தொடரும்)

# உண்மையில் அழகு எது?

(சென்ற வாரத் தொடர்ச்சி)

தங்கைப் பெண் தயங்கினாள். மூதாட்டி தானே அவளுடைய கையைப் பிடித்துத் திறந்து பார்த்தாள்.

கரடுமுரடான கை, தொட்டுப் பார்த்தபோது, ஒரே சொர சொரப்பு. அந்தப் பெண்ணுக்குத் துக்கம் தாளவில்லை. மூதாட்டி மீது சாய்ந்து அழ ஆரம்பித்து விட்டாள்.

மூதாட்டி அவளைச் சமாதானப்படுத்தினாள். அதன்பின், அழுத்தமான குரலில் பேசினாள்:

"உங்கள் கைகள் வெல்வெட் போல மிருதுவானது, மிக அழகான கைகள் என்று நீங்கள் மூன்று பேரும் கர்வப்பட்டுக்கொண்டு, உங்கள் தங்கையைக் கேலி செய்கிறீர்கள். ஆனால், என்னைப் பொறுத்தவரை, அவளுடைய கைகள்தான் உங்கள் கைகளை விட மிக அழகான கைகள்" என்றாள்.

"இந்தக் கரடுமுரடான கைக்கா அழகான கை என்று சர்டிபிகேட் கொடுக்கிறீர்கள்?" என்று கிண்டல் தொனிக்க மூத்த சகோதரிகள் கேட்டனர். அதற்கு அந்த மூதாட்டி, "உழைக்கும் கைகள்தான் இந்த உலகிலேயே அழகான கைகள். ஒரு கை, எவ்வளவுக்கெவ்வளவு உழைக்கிறதோ, அவ்வளவுக்கவ்வளவு, அது மிருதுத் தன்மையை இழந்துவிடும். உங்கள் வீட்டில், உங்களுடைய விதவைத் தாய்க்கு இவள் மட்டும்தான் மிகவும் உதவியாக இருக்கிறாள். இவளது கடுமையான உழைப்புதான், இவளது கைகளைக் கரடுமுரடாக்கியுள்ளது. ஆக, உழைக்கும் கரங்கள்தான், உண்மையில் அழகான கைகள்! இனிய இல்லங்களை உருவாக்குவது, இத்தகைய (உழைக்கும்) அழகான கரங்கள்!" என்றாள்.

இதைக் கேட்ட மூத்த சகோதரிகள் தம் தவறை உணர்ந்தனர். தங்கள் கடைக்குட்டித் தங்கையைக் கேலி செய்ததற்காக வருத்தம் தெரிவித்தது மட்டுமல்லாமல். அவளைப் போலவே தம் தாய்க்கு உதவியாக இருக்கவும் ஆரம்பித்தனர்.

உழைக்க வேண்டும்; உழைப்புத்தான் உண்மையான அழகு என்று வெறுமனே அட்வைஸ் செய்வதை விட இந்தக் குட்டிக் கதை மூலம் அதைச் சொன்னால், ஆழமாக மனதில் பதிகிறது இல்லையா? இதைத்தான் நீங்கள் செய்ய வேண்டும் என்கிறேன்.

குழந்தைகளுக்குச் சின்ன வயதில், நிறையக் கதை சொல்லுங்கள். இதுபோல பல விதமான நீதிகளை, உண்மைகளை, நல்ல விஷயங்களைக் கொண்ட கதைகளைக் குழந்தைகளுக்குச் சொல்லி நற்குணம் கொண்டவர்களாக வளர விதை ஊன்றுங்கள்.

குழந்தைகள் மனதில் (நீதி போதனைக்) கதைகளை விதைத்தால், அவர்களின் வாழ்க்கைச் செடி அர்த்தமுள்ளதாக, செழிப்பானதாக இருக்கும்.

நன்றி: "மனமே ரிலாக்ஸ்"

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

**வாசக நெஞ்சங்களே! உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள் அடங்கிய இப் போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.**

குறுக்கெழுத்துப் போட்டி இல.81க்கான சரியான விடைகளை அனுப்பி 250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.

எம். ஐ. எம். ரினோஸ், 55, மட்டக்களப்பு வீதி, கிண்ணியா-01

## பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.

- உ. சசி சுதாஜினி, 297, மத்திய வீதி, திருகோணமலை.
- சலுஜா முருகையா, "கலையகம்", பெரிய கல்லாறு-02.
- க. கபிலன், இல 23, குருந்த வத்த வீதி, பதுளை.
- வ. மன்னர் அன்ரனி, சென்ஜேம்ஸ் மேற்கு வீதி, குருநகர், யாழ்ப்பாணம்
- எம். ஏ. நாதிர், 63/7, சாகிட் மரிக்கார் வீதி, பெரியமுல்லை, நீர்கொழும்பு.
- எம். சாந்திகுமார், கால் நடை மருத்துவ நிலையம், மஸ்கெலியா.
- சி. கணபதிப்பிள்ளை, 84/10, பாரதி வீதி, திருகோணமலை.
- ஏ.எம். அல்- அப்ஸர், கேக்கே பழக்கடை, ஏறாவூர்.
- நியோமி பர்ணாந்து, மருதானை வீதி, ஹெந்தளை, வத்தளை.
- வி. சிவா, 483/5, புளுமெண்டால் வீதி, கொழும்பு -13.

## குறுக்கெழுத்துப் போட்டி 83

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | ■ |
| 5 | ■ | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 | ■ |
| 13 | 14 | ■ | 15 | 16 |
| 17 | 18 | 19 | ■ | 20 |
| ■ | ■ | 21 | 22 | 23 |

### இடமிருந்து வலம்

1) கோயிலுக்கு கொடுக்கும் நன்கொடை.
6) பண்டைக் காலத்திலிருந்து மரங்களை பிளக்க பயன்படுவது (குழம்பியுள்ளது).
9) அசையாநிலையை இப்படிக் கூறலாம்.
13) வடிவம் (திரும்பியுள்ளது)
15) ஆசை
17) அரண்மனை (திரும்பியுள்ளது)
21) ஒரு மரம் இதன் விதையை தற்கொலை செய்து கொள்ள பயன்படுத்துவதும் உண்டு (திரும்பியுள்ளது)

### மேலிருந்து கீழ்

1) மிதிவண்டி, துவிச்சக்ரவண்டி, பைசிக்கிள் இவற்றின் தமிழ்ப் பெயர்.
3) சுங்கவரி (குழம்பியுள்ளது)
4) மொட்டு (குழம்பியுள்ளது)
10) மகிழ்ச்சி (குழம்பியுள்ளது)
16) தமிழ்ப் நாட்டிலுள்ள திருநெல்வேலி இதற்குப் பெயர் போனது (தலைகீழாக உள்ளது)
19) மழை காலத்தை இப்படி கூறுவர்.

## குறுக்கெழுத்துப் போட்டி 81 விடைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| 1 கி | 2 ரே | 3 க் | 4 க | 5 ம் |
| 6 ன் | ■ | 7 ர் | 8 தி | 9 வு |
| 10 ன | 11 த | 12 ம் | 13 ரா | 14 ஆ |
| 15 ல் | ■ | 16 க | 17 ளி | 18 று |
| ■ | 19 ளி | 20 மு | ■ | 21 மு |
| ■ | 22 பா | ■ | 23 கு | ■ |

## போட்டி விதிகள்:

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி, அஞ்சலட்டையில் ஒட்டி 25.08.2004க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள். அனுப்ப வேண்டிய முகவரி:

குறுக்கெழுத்துப் போட்டி இல-83
தினமுரசு வாரமலர்,
த.பெ. இல - 1772,
கொழும்பு.

தங்கள் சரியான முகவரியையும், காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.

சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250 ரூபா பரிசுண்டு. அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

# ராதா ரெக்ஸ்ரைல்ஸின் வண்ணச் சேலை பரிசுப் போட்டி

எல்லாவிதமான,ஆண்கள்,பெண்கள்,குழந்தைகள் என எல்லோருக்கும் பிடித்தமான ஆடை அணிகளின் அட்சயபாத்திரம். எல்லாத் தெரிவுகளும் ஒரே கூரையின் கீழ்.

**RATHAA TEXTILE**
377,379A,Galle Road,Wellawatta,Colombo-06.
(Opposite of Delmon Hospital) Tel:2364792

Branch:
No,33,37th Lane,
Colombo-06.
☎: 2364727

மகளிர் மட்டும் மகளிர் மட்டும்

57

பெயர்:- ..........................
முகவரி:- ..........................
..........................................
தொழில்:- ..........................
கையொப்பம்:- ....................



- ஒவ்வொரு வாரமும் ஒரு அதிர்ஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே வண்ணச் சேலை பரிசு வழங்கப்படும்.
- மேலேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது. (பதிவுத் தபால்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா)
- ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 25-08-2004

அனுப்ப வேண்டிய முகவரி:-
'ராதாவின் வாரம் ஒரு வண்ணச்சேலை'
தினமுரசு வாரமலர்,த.பெ.இல-1772,
கொழும்பு.

# இந்த வாரம் யாருக்கு சேலை? பெரியபோரதீவு வாசகிக்கு அதிர்ஷ்டம்! 56


இவ்வாரம் சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்

ஜெயமதி கருணாநிதி
பிள்ளையார் கோயிலடி,
பெரியபோரதீவு.

பரிசு பெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம். அடுத்த வாரம் யாருக்கு? ஒரு வாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா. இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசுபெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்ற பின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

# இவ்வாரச் சிறு கதைகள்

## தேடி வந்தது



அந்த அறையே அதிருமாப் போல சத்தம். மேசையில் வைக்கப்பட்டிருந்த சிறிய பூச்சாடி சரிந்து விழ, அதனுள் நிரப்பப்பட்டிருந்த மணல் மேசையெங்கும் சிதறியிருந்தது. எனக்கு நன்றாகவே விளங்கிப் போச்சு, இது மிக அருகில் தான் நடந்துள்ளதென்று. நீண்ட காலத்தின் பின்னர் மீண்டும் சனியன் தலை தூக்கியுள்ளது.

என்னைப் போன்றே வீட்டில் மனைவி பிள்ளைகளும் நல்லாகவே பதறிப் போயினர். அவசரமாக வெளி வாசலுக்கு வந்து வானத்தை அவதானித்தேன். தூரத்தில் பள்ளிவாசலுக்கும் கோயிலுக்கும் இடைப்பட்ட பகுதியில் மேலே வானத்தில் காகங்கள் வட்டமிட்டன.

"நம்மட இடத்திலதான் நடந்திருக்கு. யாருக்கு என்னபாடோ தெரியல....!"

சொல்லிக்கொண்டே அவசரமாகச் சட்டையை எடுத்து மாட்டிக்கொண்டு வெளியே புறப்படத் தயாரானபோது,

"என்ன உங்கபாட்டுக்கு விட்டுப் போட்டுப் போறியள்....? நாங்க இங்க தனியா... பயமா இருக்கு....?"

"விசர்க் கதை கதைக்காதே. அக்கம் பக்கத்துல எத்தனை சனம் இருக்கு. அங்க யாருக்கு என்ன நாசமோ! ஒருக்காப் பார்த்திட்டு வாறன். முன் வாசல் கதவை பூட்டி வைச்சுக்கோ."

வெளிக் கதவைத் திறந்து வீதிக்கு வரும்போது ஒருவன் ஓடி வருவதும் மிகத் தூரத்தில் சிலர் விரட்டிக்கொண்டு வருவதும் தெரிந்தது... பின்பக்கமாக அடிக்கடி திரும்பிப் பார்த்துக்கொண்டு ஓடி வந்தவன், எதிர்பாராது என்மீது மோதுண்டு வீதியின் ஓரமாகக் கட்டு மாணப் பணிக்காகப் போடப்பட்டிருந்த சல்லிக் கற்கள் மீது பலமாகவே வீழ்ந்தான். வீழ்ந்த வேகத்தில் அவனால் உடன் எழுந்திருக்க முடியவில்லை. கையைக் கொடுத்து அவனைத் தூக்கி நிமிர்த்தவும் பின்னால் ஓடி வந்தவர்கள் அவனைப் பலமாகவே கட்டிப் பிடித்துக்கொள்வதற்கும் நேரம் சரியாக இருந்தது. மிகக் கொடுமையான குற்றவாளியைத் தண்டிப்பது போன்று வந்தவர்கள் பலரும் அவனுக்கு அடித்து அருகிலிருந்த மின்கம்பத்தில் இறுக்கமாகக் கட்டிவைத்தனர். குண்டு எறிந்தவன் அவனாம். பிந்திய செய்தி அது. தொடர்ந்து வந்த பொலிஸ் ஜீப்பிலிருந்து மளமளவெனக் குதித்தவர்கள் கூட்டத்தினரைச் சூழ்ந்துகொண்டனர். மின்கம்பத்தில் கட்டப்பட்டிருந்தவனை மீட்டெடுக்கப் பொலிஸ் அதிகாரி முற்பட்டதும் அங்கு முறுகல் நிலை தோன்றியது. பலத்த வாய்த் தர்க்கம் கைகலப்பை ஏற்படுத்தக்கூடிய சூழ்நிலையைத் தோற்றுவிக்கவே பொலிஸார் உசாராயினர். வான்நோக்கி ஏகப்பட்ட துப்பாக்கி வெடிகள். எல்லாமே திட்டமிட்டவாறு நடந்து முடிந்துவிட்டது.

கைக்குண்டை வீசியவன் இவன்தான் என்று விரட்டி வந்தவர்களின் வாதம். சுமத்தப்படும் குற்றச் சாட்டை நிராகரித்திட முடியாத நிலைமையில் பொலிஸார். அவனை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்ல வேண்டிய நிலைமை வேறு. தனது அதிகாரத்துடன் செயற்பட்ட பொலிஸ் அதிகாரி பலவந்தமாகவே அவன் கட்டுக்களை அவிழ்த்து, தமது வாகனத்தில் ஏற்றி பின்னர் கூட்டத்தினரைப் பார்த்து, "யாராவது இரண்டு சாட்சிகள் எம்முடன் வர வேண்டும்" எனப் பணித்ததும், யாருமே போவதாக இல்லை. சுமார் 15 பேருக்கும் மேலாக விரட்டி வந்தும் சாட்சி சொல்ல யாருமே முன்வராதது எனக்கும் ஆச்சரியமாயிருந்தது. ஆத்திரமடைந்த பொலிஸ் அதிகாரி மிகக் கடுமையாக ஏசி பின்னர் என்னைப் பார்த்து, "வாய் மறுமொழி எடுக்க வேண்டும். பொலிஸ் நிலையம் வாங்க" என்று கூறி விபரங்களைப் பெற்றுக்கொண்டு மிக வேகமாகவே விரைந்தார்.

தாக்குதல் பலமாக இருந்தாலும் தற்செயலாக யாருக்குமே எந்த விதமான காயங்களுமில்லை. அருகே நிறுத்தப்பட்டிருந்த இரு ஆட்டோக்களில் ஒன்றின் ரெக்ஸின் முற்றாகவே எரிந்து நாசமாகியிருந்தது. குறிப்பிட்ட சில நிமிடத்திற்குள்ளாக வீதியோரத்தின் கடைகள் யாவும் பூட்டப்பட்டு சந்திக்குச் சந்தி இராணுவ வீரர்கள் காவலில் ஈடுபடுத்தப்பட்டனர். வீதி நடமாட்டங்கள் முற்றாகவே தடுக்கப்பட்டது. வேறு பாதைகளினூடாக வழக்கமாக அந்தப் பகுதிக்குள் வருபவர்களும் தடுத்து நிறுத்தப்பட்டு வேறு பாதை வழியாகத் திருப்பி அனுப்பிவைக்கப்பட்டனர். எங்கும் அச்ச நிலை. சற்று நேரத்திற்குள்ளாகவே அப் பிரதேசம் வெறிச்சோடிப்போனது, ஒரு யுத்த பிரதேசம் எப்படியிருக்கும் என்பதை அறிந்துகொள்ள வாய்ப்பாக.

"இவ்வளவு பேர் விரட்டி வந்தீர்களே! யாராவது ரெண்டு பேர் சாட்சி சொன்னால் என்ன....?" எனக்குள் ஏற்பட்ட ஆதங்கம் வார்த்தைகளாக வெளிப்பட்டது.

"...................................."

கூட்டத்தில் காணப்பட்ட மிகவும் வேண்டப்பட்டவரை நோக்கி,

"சாட்சி சொல்லத் தயக்கமென்றால் ஏன் விரட்டிப் பிடிக்க வந்தீங்க....?"

"நான் எதையும் பார்க்கவில்லை. இவன்தான் ஆள் பிடிக்க என்று ஓடி வந்தாங்க நானும் கூடவே....."

"அப்போ சம்பவத்தைப் பார்த்தவர்களை யாவது சொல்லலாமே....?"

"எனக்கேன் வம்பு. ஆளைப் பிடித்துக் கொடுத்தவர் நீங்கதான். கண்டவர்கள் யார் என்று தைரியமா கேட்க வேண்டியது தானே....?"

"ஆளைப் பிடித்துக் கொடுத்தவரா?"

பளிச்சென்ற அந்த வார்த்தை எனக்குள் கலக்கத்தை ஏற்படுத்தியது. மேலதிக வார்த்தைப் பிரயோகங்கள் சிக்கல் நிலைமைகளைத் தோற்றுவிக்கலாம் என்ற எண்ணத்தின் அடிப்படையில் அப்போது வீணே மௌனமாகிப்போனேன்.

ஊர் முக்கியஸ்தர்களென்று சொல்லக் கூடியவர்களுடன் பல தடவைகளாக வந்து பொலிஸார் விசாரித்துப் போனதும், பலர் வீடு தேடி வந்து என்னைத் தைரியப்படுத்தியதும் உள்ளுக்குள் அச்சத்தை ஏற்படுத்திக் கொண்டிருந்தது.

"ஓடி வந்தவன் வேறு ஆயுதங்களும் வைத்திருந்தானாமே....?"

"உங்களையும் கொல்வேன் என்று சத்தமிட்டானாமே....?"

"உங்கட துணிச்சல் வேறு யாருக்குமே வராது பாருங்க.....!"

உலாவந்த வதந்திகள் என் முன்னே கொட்டிக் குவிக்கப்பட்டன. ஏற்பட்ட தடுமாற்றத்தையும் பரபரப்பையும் உடன் வெளிக்காட்டத் தயங்கினேன். இருந்தும் நான் தெரிந்துகொண்ட விசயங்கள் எதுவோ அதை மாத்திரமே தேவைப்பட்டவர்களுக்கு தகவலாகக் கொடுத்துக்கொண்டிருந்தேன். நேரம் செல்லச் செல்லக் குண்டு வெடிப்பின் நேரடி முக்கியஸ்தராக உயர்ந்து கொண்டேன். இடையில் வீட்டுக்குள்ளும் சிக்கல் நிலைமைகள் தோன்றி பாரியளவு மனத் தாக்கத்தை ஏற்படுத்திக்கொண்டிருந்தது.

உங்களுக்குத் தெரியும் அந்தக் குண்டு வெடிப்புத் தொடர்பாக எனக்கு எதுவுமே தெரியாது என்று. அந்த இடத்தைக் கூட இன்னும் நான் பார்க்கவில்லை. எனக்கு ஏற்பட்டுள்ள கதியைப் பார்த்தீர்களா.....?

**தி. இளையவன், திருகோணமலை.**

இதனால் யாருக்கும் எதுவுமில்லை என்ற திருப்தி ஏற்பட்டாலும் மனதிற்குள் சஞ்சலம் தவிர்க்க முடியாமலிருந்தது. இரண்டொரு நாளில் எல்லாமே சகஜமாகி வழக்கமான நிலை தோன்றிவிடும் என்று எண்ணியபடி கண்ணயரும்போது தொலைபேசி அலறியது.

"நான்தான் சொல்லுங்க....."

"டேய்! நீ பிடிச்சுக்கொடுத்துட்டே. இனி நிம்மதியா இருந்திடலாமென்று நினைக்காதே....."

"அப்படியில்லை....அவர் வந்து......"

"மூடுடா வாயை (.......) சமூகத் துரோகி. ரெண்டு நாளைக்குள்ளாக அவன் வெளியே வரல நீ இல்லை." தொலைபேசி துண்டிக்கப்பட்டது. எனக்குத் தலை சுற்றத் தொடங்கியது.

## கிராமத்து வெள்ளி

"எடியேய் மீனாட்சி! குத்து விளக்கு எங்கேயடி? கையும் ஓடேலே காலும் ஓடேலே. இன்னும் மூன்று நாள் கிடக்குது பொங்கலுக்கு! வீடு கூடக் கழுவலயே! எப்படித்தான் வேலை முடியப் போகுதோ! செக்குமாடு உதைக் கொண்டு வாறத்துக்கு இவ்வளவு நேரம் செல்லுதே. வீடு வாசல் கழுவ வேணும். அதற்கு முதலில போய் பாத்ரூமையும் ரொயிலட்டையும் கழுவு" என்று தன்னுடைய அதிகாரத் தொனியை அள்ளி வீசினாள் கமலம். மீனாட்சியும் சரியென்று தலையாட்டியபடி அவ்விடத்தை விட்டு நகர்ந்தாள். இந்த வார்த்தைகளை அடிக்கடி கேட்டுப் பழக்கப்பட்டுவிட்டாள்.

மீனாட்சிக்குப் பதினாலு வயது. கறுப்பன்குடி கிராமத்தில் பிறந்து வளர்ந்தவள். இவளுக்குப் பிறகு நாலு சகோதரர்கள் ஊரில் இருக்கிறார்கள். ஒருமுறை கறுப்பன்குடி கிராமத்திற்குப் பட்டணத்தில் இருந்து வந்திருந்த கிருஸ்ண பிள்ளையையும் கமலத்தையும் கண்ட முத்து தன் குடும்ப கஷ்ட நிலையை எடுத்துக் கூறினான். அவர்கள் அவன் நிலையைக் கண்டு அவனுடைய மகள் மீனாட்சியைப் பட்டணத்திற்குக் கூட்டி வந்தார்கள். கிராமத்தில் இருந்து பட்டணம் 50 கல் தொலைவில் இருக்கிறது. மீனாட்சியும் பட்டணத்திற்குச் செல்லும் மகிழ்ச்சியில் அவர்களுடன் செல்லச் சம்மதித்தாள். ஓரளவு ஊரில் படித்திருக்கின்றபடியால் கிராமத்தில் இருந்து ஊருக்கு வரும்போது இடங்களை பெயர்ப் பலகையில் வாசித்து அறிந்தாள். நாட்கள் செல்லச் செல்ல, கிராமத்தில் ஓடியாடித் திரிந்தவளுக்கு கமலம் கால் கட்டுப்போட்டு வேலைகளை அதிகமாக வாங்கினாள். ஆரம்பத்தில் கமலத்தின் சுய உருவத்தைக் கண்டு பயந்தவள், இப்பொழுது பழக்கப்பட்டு விட்டாள். கிருஸ்ணபிள்ளை, மீனாட்சிக்கு மகள் போல் அன்பு காட்டினார். இருந்தும் கமலத்தின் தொந்தரவு பொறுக்க முடியாத இவள் கிருஸ்ணபிள்ளைக்குக் கதைகள் கொடுத்து அவரிடம் இருந்து பேனாவும் கடதாசியும் வாங்கினாள். தந்தை முத்துவுக்கு கடிதம் ஒன்றை எழுதினாள்.

அன்புள்ள அம்மா, அப்பா, தம்பி, தங்கைகளுக்கு மீனாட்சி எழுதுவது, நீங்கள் எல்லோரும் நலமுடன் வாழ கறுப்பன்குடி ஆலமரப் பிள்ளையாரை வேண்டுகிறேன். அப்பா நான் இங்கு வந்து ஒரு வருடம் ஆகிவிட்டது. நீங்கள் மூன்று தடவை ஆரம்பத்தில் வந்து என்னைப் பார்த்துவிட்டுச் சென்றீர்கள். நீண்ட நாட்களாக ஏன் என்னைப் பார்க்க வருவதில்லை. கடிதம் கூடப் போடுவதில்லை. அப்பா எனக்குப் பட்டணத்து வாழ்க்கை பிடிக்கவில்லை. கிராமத்துக்கு வரப்போறன். அம்மாவுக்கு உதவியாகவும், உங்களுக்கு சாணி தப்பிக் காய வைக்க உதவியாயும் இருக்கிறேனப்பா. நான் விளையாட்டுப் பிள்ளையாய் இருக்கமாட்டேன். என்னை வந்து கூட்டிக்கொண்டு போங்கோ. இஞ்ச எப்ப பார்த்தாலும் வேலைதானப்பா. இரவு நித்திரைக்குப் போக 12 மணியாகும். காலையில நான்கு மணிக்கு எழும்ப வேண்டும். எழும்பினால் மீண்டும் நித்திரைக்குப் போகும் வரை வேலைதான். எஜமானி இடைக்கிடை அடிப்பாள். எந்த நாளும் பேசுவாள். விரைவில் வந்து கூட்டிக்கொண்டு போங்கோ உங்கள் பதிலை எதிர்பார்த்திருக்கும் உங்கள் ஆசைமகள், அக்கா-மீனாட்சி.



கடிதத்தை மடித்து கிருஸ்ணபிள்ளையிடம் கெஞ்சிக் கூத்தாடிக் கொடுத்தாள். அவரும் அவளுக்கு இரங்கி கமலத்திற்குத் தெரியாமல் கடிதத்தை தபாலில் சேர்த்துவிட்டார். கடிதம் கண்டவுடன் முத்து மகளுக்குக் கடிதம் எழுதினார், தைப்பொங்கலுக்கு வந்து கூட்டிக்கொண்டு போவதாய்.

நல்ல காலம், நேற்று கடிதம் இவளின் கைகளுக்கு வந்ததால் வாசித்து எல்லையில்லாத சந்தோசம் அடைந்தாள். கமலத்திற்கு வாசிக்கவோ, எழுதவோ தெரியாததால் கடிதத்தின் பதிலை அறிய முடியவில்லை. மீனாட்சிதான் கடிதத்தினை வாசிக்கும்போது தந்தை வருவதை மட்டும் கூறினாள். வேறு ஒரு புதினமும் இல்லை என்று கூறி மழுப்பிவிட்டாள். தன்னுடைய கடிதத்தின் பதில் கடிதம் என்று தெரிந்திருந்தால் தன்னை நாராய்க் கிழித்திருப்பாள் கமலம் என்று தெரியும் அவளுக்கு. காலையில் கிருஸ்ணபிள்ளை எடுக்கும் பத்திரிகையைக் கூட கமலத்திற்கு வாசித்துக் காட்டுவது மீனாட்சிதான்.

பாத்ரூம் கழுவி முடித்த பிறகு மீண்டும் கடிதத்தை வாசித்துப் பார்த்தாள். கமலத்தின் குரல் மீண்டும் கேட்டது. கடிதத்தை மீனாட்சி மறைத்தபடி அடுத்த வேலை செய்ய ஆயத்தமானாள்.

"ஏன்டி பொங்கலுக்குப் போகப் போறேன் எண்டு அடம்பிடிக்கிறாய்? உனக்கு என்ன குறைதான் விட்டம்" என்றாள் கமலம்.

"சரி அவள் சின்னப் பிள்ளைதானே! ஊருக்குப் போய்விட்டு வரட்டுமேன். எதுக்கு தடுக்கிறாய்" என்று கிருஸ்ணபிள்ளை பரிந்து பேசினார்.

"நீங்க என்ன அலட்டுறியள். அடுத்த மாதம் மகனும் வெளிநாட்டால் வாறான். எனக்கும் இடுப்புவலி. இவள் போனால் யார்தான் வீட்டு வேலைகளைப் பார்க்கிறது." மீனாட்சி பதில் எதுவும் கூறாமல் தலையைக் குனிந்தபடி நின்றாள்.

"என்னடி நிக்கிறாய். போய் காய் கறிகளை வெட்டு. போ" எனக் கூறினாள் கமலம். அன்று அவள் படுக்கைக்குப் போக நடுச்சாமம் ஒரு மணியாகிவிட்டது.

"என்னப்பா! இந்தமுறை மீனாட்சிக்குப் புதுச் சட்டை வாங்க வேணும். ஏனெண்டால் முத்து பொங்கலுக்கு வாறதாலதான் சொல்லுறன். எடுத்துக் கொண்டு வாங்கோ; நாளைக்குப் பொங்கலுக்குப் போட்டுக்கொண்டு நிக்கட்டும். சட்டை வாங்கிக் கொண்டு வரேக்கேயாப் பாத்து முத்துவைக் கவனிக்க வெளிநாட்டுச் சாராயமும் ஒண்டு எடுத்துக்கொண்டு வாங்கோ. அதை வைச்சு மீனாட்சியை மறிச்சுக் காட்டுறன்."

"பாவம் சின்னன். அதுக்கும் எங்களைப் போல ஆசைகள், உணர்வுகள் இருக்குக் கண்டியோ."

"நீங்கள் அவளுக்காக வக்காலத்து வாங்காமல் போங்க. போய் வாங்கிட்டு வாங்கோ"

"என்ர சொல்லை எப்பதான் கேட்டிருக்கிறாய். உன்னைத் திருத்தவே முடியாது" என்று திட்டியபடி கிருஷ்ணபிள்ளை வீதியில் இறங்கி நடக்கத் தொடங்கினார்.

மீனாட்சி அதிகாலை எழுந்தவுடன் குளித்துவிட்டு கமலம் கொடுத்த சட்டையை அணிந்தாள். பொங்கலுக்கான ஆயத்தம் செய்யும்போது அடிக்கடி வீதியைப் பார்த்தாள். முற்றத்தில் பொங்கல் செய்வதில் கிருஸ்ணபிள்ளையும் கமலமும் மும்முரமாய் ஈடுபட்டுக்கொண்டிருந்தார்கள்.

பத்து மணியாகியும் தந்தை வராததை நினைத்து மீனாட்சி கவலை கொள்ளவில்லை எப்படியும் மாலைக்குள் வந்துவிடுவார் என்ற நம்பிக்கை. கறுப்பன்குடியில் இருந்து 2 மைல் நடந்து வந்துதான் பட்டணத்திற்கு பஸ் பிடிக்க வேண்டும். எப்படியும் பட்டணம் வந்து சேர ஆறு மணத்தியாலம் வேண்டும். ஆதலால் தந்தை மாலைதான் வருவார் என்று எண்ணியபடி இருந்தவளுக்கு இரவு எட்டு மணியாகியும் தந்தை வராதது ஏமாற்றம்தான். படுக்கைக்குச் செல்லும்போது என்றுமில்லாதவாறு அழுதுவிட்டாள்.

அதிகாலை எழுந்து முற்றம் கூட்டும்போது "என்னடி முகம் வீங்கியிருக்கு" என்று கமலம் கேட்டாள்.

"ஒன்றுமில்லையம்மா நல்லாத்தான் இருக்கிறன் என்று ஒருவாறு சமாளித்து பொய்ச் சிரிப்பை உதிரவிட்டாள். அப்பொழுதுதான் தான் இரவு முழுவதும் அழுது முகம் வீங்கியிருப்பதை உணர்ந்துகொண்டாள். அன்று இரவு படுக்கைக்குப் போகுமுன் தன்நிலையை நினைத்து அழுதாள். அப்பொழுது அவளுக்கு ஒரு யோசனை தோன்றியது. அதை நினைத்து ஒரு கணம் மகிழ்ந்தாள்.

**-சுண்டுக்குளி கஜோல்.**

அப்பொழுது சேவல் கூவும் சத்தம் கேட்டது.

"என்னங்க, இரவு முழுக்க மூட்டைப் பூச்சிக் கடி. மீனாட்சியிட்ட சொல்லி இண்டைக்கே மருந்து தெளிக்க வேண்டும்" என்று கூறிக்கொண்டு எழுந்தாள் கமலம். யாரோ கூப்பிடும் சத்தம் கேட்டது. கிருஸ்ணபிள்ளை எழுந்து பார்த்தார்.

"அட முத்துவா. வாடாப்பா. ஏன் பொங்கலண்டு வரேல."

"அதுய்யா ஊரில ஒரு பஸ்தான் இருக்கு. பழுதுபட்டதால இரண்டு நாள் ஓடேல. நேற்று சாயந்தரம்தான் புறப்பட முடிஞ்சிச்சு" என்று முத்து தன் கதையை நீட்டி முழங்கினான்.

"அட வெளிய நிண்டு கதைக்காமல் உள்ள வாப்பா." என்றபடி-

"கமலம்! நம்ம முத்து வந்திருக்கிறான். மீனாட்சியை வந்து பார்க்கச் சொல்லு" என்றார் கிஷ்ணபிள்ளை.

"மீனாட்சி! யார் வந்திருக்கிறாங்கள் எண்டு வந்து பாரேன்" என்றபடி குசினிக்குள் சென்றாள் கமலம். அவளின் காலில தட்டுப்பட்டுப் போத்தல் ஒண்டு காலைப் பதம் பார்த்தது.

"ஐயோ! போத்தல் வெட்டிப் போட்டு. ஓடியாங்களேன்" என்று கத்தியபடி குனிந்து பார்த்தாள். மூட்டைப்பூச்சி மருந்திருந்த அந்தப் போத்தல் வெற்றுப் போத்தலாய் இருப்பதைக் கண்டாள். அதன் அருகே மீனாட்சி சிரிப்புடன் நிம்மதியாய்த் தூங்கியபடி இருந்தாள்.

**படித்துச் சுவைத்தவற்றில் சிலவற்றை உங்கள் சிந்தனைக்காக முன்வைக்கிறோம். உங்கள் அநுபவத்தையும் எம்முடன் பகிர்ந்துகொள்ளுங்கள்.**

# சிந்தித்துப் பார்க்க...

## அனைவரிடமும் அன்பாயிருங்கள்

யாராவது உங்களோடு கோபத்துடன் பேசினால் அன்பெனும் தண்ணீரை அந்த நெருப்பில் ஊற்றுங்கள்.

வாழ்க்கையின் ஒவ்வொரு நெருக்கடி நிலைக்கும் முகங்கொடுக்க வேண்டும். அப்படியாயின் ஏன் அன்புடன் முகங்கொடுக்கக் கூடாது?

எப்போதும் பணிவு என்னும் ஆடையை அணிந்திருங்கள். அதனால் நீங்கள் மற்றவர்களின் அன்பையும் ஒத்துழைப்பையும் பெறுவீர்கள்.

அன்பு நிறைந்தும் நியாயமாகவும் என்னால் இருக்க முடியாதெனில் நிச்சயமாக என்னில் ஏதோ சக்தி குறைகிறது. உங்களையே பரிசோதித்து அதை நிரப்பிக் கொள்ளுங்கள்.

பொறாமையான அல்லது வெறுப்பான சிந்தனைகள் வந்து சேரும்போது மகிழ்ச்சியை இழந்துவிடுகின்றோம். அன்பும் நல்லாசிகளும் நிறைந்த சிந்தனைகள் துக்கத்தை தீர்த்து வைக்கின்றன.

மரியாதையைப் பெறும் ஒரே வழி அதனை முதலில் கொடுப்பதாகும்.

உங்கள் சொந்த இயல்பைத் தவிர வேறு எவரும் உங்களைச் சித்திரவதை செய்வதில்லை. ஆகவே, உங்கள் இயல்பை இனிமையாகவும் அன்பாகவும் ஆக்கி எல்லோரது அன்பையும் வெல்லுங்கள்.

உங்களது சொந்த வெற்றியினைப் போன்றே மற்றவர்களது வெற்றியிலும் ஆர்வமாக இருங்கள்.

அன்பாகவும், உண்மையாகவும், இனிமையாகவும் பேசுவதற்கு ஒரு சதம் கூடச் செலவழிக்க வேண்டியதில்லை.

**"இன்றைய நாளுக்கான நல்ல எண்ணங்கள்" என்ற நூலிலிருந்து....**

# இலக்கிய நயம்

## மல்லிகை போல் மெல்லியளின் பூவிதழ் அமுதத்தின் ஊற்று

தருவது முழடில்யன்

"எனக்குக் கால் வலிக்கிறது. இனி என்னால் நடக்க முடியாது" என்றாள் காத்யா.

"இன்னும் கொஞ்சத் தூரம்தான். தாண்டி விட்டால் ஊர் வந்துவிடும்" என்று திரும்பிப் பார்த்துச் சொன்னான் முகுந்தன்.

அவளைப் பார்த்த கண்களில் பரபரப்பு உருவானது. எப்போதும் இப்படித்தான். பார்க்குந்தோறும் புதிது புதிதாய்ப் பதற்றத்தை ஏற்படுத்தும் அவள் அழகு.

நூறு பெண்களுக்காகச் சேர்த்து வைத்த அழகை இவளுக்குக் கொட்டிவிட்டு, பிரமன் மீதி நேரத்திற்கு ஓய்வெடுத்துக்கொண்டிருக்க வேண்டும். அவளும் அதை உணர்ந்திருந்ததை தளர் நடையிலும் சிணுங்கலிலும் செல்லச் சுழிப்பிலும் உணர்த்தினாள்.

முகுந்துக்கு வேறு வழியிருக்கவில்லை. "சரி வா. எங்காவது சற்று அமர்ந்திருந்துவிட்டுப் போகலாம்!"

ஒரு பெரிய மரத்தை நோக்கி நடந்தான்.

உற்சாகமாகி அவள் பின்தொடர்ந்து நடந்து வந்த அசைவிலேயே அழகும் மகிழ்ச்சியும் ததும்புவதை முகுந்தன் கண்டான். வசந்தகாலப் பூங்கொடி ஒன்று அசைந்து வருவது போல இருந்தது. கொலுசணிந்த பாதங்களை புற் பரப்பின் மீது பட்டும் படாதது போல பாவ விட்டபடி வந்துகொண்டிருந்தாள்.

பாதையை மாலைச் செவ்வொளி நனைத்திருந்தது.

மரங்கள் இருளைத் தழுவப் போகும் பரபரப்பிலிருந்தன.

கால்களை விரித்து அமர்ந்திருக்கும் இராட்சசத் தாய் போல காணப்பட்ட இரண்டு வேர்ப் புடைப்புகளில் போய் அமர்ந்துகொண்டனர். தரையெங்கும் மெத்தெனப் படர்ந்து கிடந்த பழுப்பு இலைகள் மனதைக் கிளர வைப்பனவாயிருந்தன.

பறவைக் கூட்டமொன்று எழுந்து சிறகுகளைக் காற்றில் துழாவிக்கொண்டு கலகலவென்று பேசியபடி காட்டுக்குள் சென்று மறைந்தன. பல வித பறவைகள் சேர்ந்து எழுப்பிய இரைச்சல் மழை போலப் பொழிந்து கொண்டிருந்தது.

ஆனாலும் அத்தனை ஒலிகளாலும் கலந்து உருவாக்கப்பட்ட இரைச்சல் ஒரு மௌனம் போல சூழ்ந்திருந்தது.

காத்யா அமர்ந்தவுடன் கைகளைப் பின்னே கொண்டுபோய் கூந்தலை விடுவித்து, அப்படியும் இப்படியுமாகத் தலையை அசைத்துப் படர விட்டுக்கொண்டாள்.

முகுந்தன் பார்வை, அப்போது அசைந்த வேறு பகுதிகளில் சென்றது. ஆரோக்கியத்தை விளம்பரப்படுத்திய அங்கங்கள் அவனைப் பாடாய்ப் படுத்தின.

காத்யா போன்ற அழகியை முதன்முறையாகப் பார்ப்பவன் போல விசித்திரம் தெறிக்கப் பார்த்தான் முகுந்தன்.

இரண்டு தோள்களின் பின்னாலும் சென்று மறைந்த கருங்கூந்தலும், வளைந்த புருவங்களின் மத்தியில் மூன்றாவது கண்ணென இருந்த குங்குமமும், மார்கழி மாதத்துக் காலைப் பூ போன்ற குளிர்ச்சியுடன் அசைந்த கண்களும், காதருகே சுருண்ட கூந்தல் சுருள்களினால் மேலும் பிரகாசம் வீசிய கன்னமும் கண்டவன், மறுமுறை கழுத்துக்குக் கீழே பார்வையைக் கொண்டுசெல்லவே பயந்தான்.

தாவிக் கீழிறங்கிய பார்வை, பாரங்கள் சுமந்து வேதனைப் பட்டுத் துவண்ட சிறு இடையில் தங்கி அவனுக்கும் வேதனை தந்தது.

மீண்டும் மேலே பார்க்கக் கூசி, கண்களை நிலத்தில் பதித்தான். மனது மாத்திரம் மேலெழுந்தது குதியாடியது.

காற்றில் புதர்கள் சலசலத்தன. காற்று புதர் வழியாகச் செல்லும் தடயம் தெளிவாகத் தெரிந்தது.

"இன்னும் நிறையத் தூரம் போக வேண்டுமா?" அலுப்புடன் வந்த அவள் அழகிய விழிகள், அவன் விழிகளைச் சந்தித்தன. பயமும் நாணமும் கலந்த பார்வை அதில் படர்ந்திருந்தது.

கீழே தெரிந்த சிவந்த தாமரைச் சிறு இதழ்கள் இரண்டும் துடிப்பதை முகுந்தன் பார்த்தான்.

குனிந்து தன் உதடுகளால் அந்த இதழ்களைக் கவ்வினான். அந்த நிலையிலும் தாமரை இதழ்களைப் பழிக்கும் அவள் மெல்லிதழ்கள் ஏதேதோ இன்ப வார்த்தைகளை முணுமுணுத்தன அவளது பிரத்தியேக வார்த்தைகளிலும் இசை இருந்தது.

அவளுக்குப் பதில் சொல்லாமல், அவள் கரமொன்றைத் தன் கையிலெடுத்து, நடுக்கத்தை மறைக்க மறுகையாலும் அவள் விரல்களைத் தொட்டான். ஆராய்ச்சி சிறிது



நேரம் நீடித்தது.

அவள் மிகுந்த வெட்கத்துடன் "என்ன இது?" என்று சிணுங்கினாள்.

"இதுவா? ம்.....ஏதோ பூவின் இதழ்கள் போலிருக்கிறது......

இங்கு எப்படி வந்தது என்று தெரியவில்லை....அதுதான் பார்க்கிறேன்....."

"ஊஹ்கும்...." என்று அவனைப் பழித்தவள், கரத்தை இழுத்து விடுவித்துக் கொள்ள முயன்றாள்.

அவன் பிடியை அழுத்தவே நிலை குலைந்து அவன் மீது விழுந்தாள். நெஞ்சில் மோதிக்கொண்டாள். அந்த மெத்தில் அவனுக்குள் ஆயிரம் வயலின்கள் பாடின.

"விடுங்கள்" என்றாள், அதன் பொருளுக்குச் சம்பந்தமில்லாத தொனியில்.

அவனோ அவள் குரலில் சொட்டிய அமுதத்தில் திளைத்தான்.

அவள் சுந்தர உடலின் மென்மையையும் திண்மைகளையும் ஒருசேர உணர்ந்தான்.

காத்யாவின் செவ்விதழ்கள் வெட்கப் புன்முறுவலால் இலேசாக மடிந்திருந்தன. அப்படி மடிந்திருந்ததால் கன்னத்தில் இலேசான குழிகள் விழுந்து வதனத்தின் அழகை ஆயிரம் மடங்கு அதிகப்படுத்தின.

ஆவல் மிதமிஞ்சிப் பிரவாகித்த அந்த வாசனை அவனைக் கிறக்கியது. தேனூறும் அவள் உதடுகள் ஊட்டிவிட்ட இன்பப் போதையில் தள்ளாடிய முகுந்தன் மனம் மெல்ல மேலே மிதந்து பறக்கலாயிற்று.

வானில் நீந்தியபடி அவன் மனம் களிப்புடன் நினைத்தது.

காணக் காண ஆவலூட்டும் அழகுள்ளவளாக இருக்கிறாள். அதுமட்டுமல்ல, குளிர்ச்சியும் நறுமணமுமாக வேறு மயக்குகிறாள். சடப்பொருள்களுக்கும் உயிரூட்டிவிடக் கூடிய அம்சங்கள் இவளிடமிருப்பவை! அதிகம் பேசாமல், இன்பத் தேனையும் வெல்லும் இவள் சொற்கள்!

அணைத்தால் மல்லிகையைத் தொடுவது போல..... என் உடல் அடையும் இன்பத்தை வார்த்தைகளில் எப்படிச் சொல்ல முடியும்? மலர் மேனி அணைப்பில் நான் மயங்கினாலும் திரும்ப உயிர் பெற்றுவிட அவள் இதழ்களில் அமுதம் ஊறியபடி இருக்கிறது. ஐந்து புலன்களுக்கும் இன்பம் தரும் அதிசயம் இவ்வுலகில் இவள் ஒருத்திதான்.

***ஒடுங்கு ஈரோதி ஒண்ணுதல் குறுமகள்***
***நறும் தண்ணீரள் ஆரணங்கினளே***
***இனையள் என்று அவள் புனை அளவு***
***அறியேன் சில மெல்லியவே கிளவி***
***அணை மெல்லியள்***
***யான் முயங்குங் காலே.***

***(குறுந்தொகை : 70)***

---

யாருடைய பிரிவிலாவது கண் கலங்கியிருக்கிறீர்களா?**

ஜெ. பிரபாகரன், கண்ணகிபுரம்.

நேரத்தைப் பற்றிய பிரக்ஞையே இல்லாமல் அறு அறு என்று அறுத்து ஒரு வழி பண்ணிவிட்டுப் பிரிகிறவர்களை... மறுபடியும் எங்காவது சந்திக்க நேருமோ என்று நினைக்கையில் எனக்குக் கண்கள் கலங்குவதுண்டு.

**ஒலிம்பிக் ஆரம்பநாள் கொண்டாட்டம் எப்படி?**

ரா.தினேஷ்னி, வத்தளை.

உலகில் மிகக் தொன்மையான ஒரு நாகரிகச் சமூகம் என்பதைக் காண்பித்துக் கொள்ளக் கிடைத்த வாய்ப்பை நன்கு பயன்படுத்தியிருக்கிறார்கள். சிலை போல அழகு என்று கேட்டிருக்கிறோம். அழகுகளே சிலையாகிப் பவனி வந்த அற்புதமும், விளையாட்டின் சரித்திரமும், தெய்வங்களின் கடாட்சமும் சாமம் கடந்த இரண்டு மணிக்கும் தூங்க விடாமல் இருத்தியது.

**உலகை இனிமைப்படுத்துபவர்கள் குழந்தைகள்தான்! நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?**

முஹமட் மஜிஸ், மீராவோடை-04.

நான் என்ன சொல்வது... ஜவஹர்லால் நேரு சொன்னார்: குழந்தைகள் அருமையானவர்கள். அவர்கள் வளர்ந்துவிடுகிறார்கள். அதுதான் சிக்கல்.

**சிறந்த நடிகைக்கான விருது பெற்றிருக்கும் மீரா ஜாஸ்மின் பற்றி என்ன சொல்கிறீர்கள்?**

எம்.எப்.எம். மிஹ்லால், குருநாகல்.

குறும்பு துடிக்கும் அந்த முகம் இன்னும் சரிவரப் பயன்படுத்தப்படவில்லை.

**கிழக்கிலும் கொழும்பிலும் தமிழர்களைத் தமிழர்களே சுட்டுச் சுட்டுத் தெருவில் எறிந்துகொண்டிருக்கிறார்கள். செத்துக்கொண்டிருக்கும் தமிழர்களை விடுதலைக்கான தடைகள் என்றும், அவர்களை அழித்து அகற்றிச் சமூகத்தைச் சுத்தப்படுத்த வேண்டியது அவசியம்தான் என்றும், அதேசமயம், சுட்டுக்கொண்டிருக்கும் தமிழர்களை வீரர்கள் என்று புகழ்ந்தும், சமூகம் அவர்களைப் பலப்படுத்த வேண்டுமென்றும் கூறும் தமிழ்க் கட்டுரையாளர்கள், இராணுவ ஆய்வாளர்களுடன் சேர்ந்து பேராசிரியர் ஒருவரும் தமிழ்க் கொலைகளை இரசிக்கிறாரே! கவனித்தீர்களா?**

ஏ. சுகுமார், கொழும்பு-06.

மனோதத்துவ மருத்துவர் ஒருவர் காரில் போய்க்கொண்டிருந்தார். தெருவில் ஒருவன் சுருண்டு கிடப்பது அவர் கண்ணில் பட்டது. அவர் காரை நிறுத்திவிட்டு, இறங்கிப் போய்ப் பார்த்தார்.

யாரோ அந்த ஆளை அடித்துக் குற்றுயிரும் குறையுயிருமாகப் போட்டுவிட்டுப் போயிருக்கிறார்கள் என்பது தெரிந்தது.

"யாரப்பா உன்னை இப்படிச் செய்தது? சொல். யாரென்று சீக்கிரம் சொல். அந்த ஆளுக்கு என் உதவி தேவைப்படுகிறது!" என்றார் மருத்துவர்.

அந்த மருத்துவர் போல பேராசிரியரும் உதவத் துடிக்கிறாராக இருக்கும்! விடுங்கள்.

**சுள்ளான்?**

கே. மேகநாதன், திருக்கோவில்-02.

மற்றுமொரு ஆண்டவன் அனுப்பிய தூதன்!.

## சிந்தியா பதில்கள்

**வாழ்க்கையில் தவிர்க்க முடியாதது எது?**

பெ. கோகிலன், மேபீல்ட்.

அதன் முடிவு.

**கொடுப்பதுதான் எடுப்பது; எடுப்பதுதான் கொடுப்பது, அது என்ன?**

எம். எம். அஸ்ராஜ், பொன்பரப்பி.

"கொடுப்பதிலும் எடுப்பதிலும் நாம் இனிச் சரிபாதி" என்றாரே கண்ணதாசன் அதுதான். முத்தம்!

**நம் எதிர்காலச் சந்ததிக்காக நாம் என்ன புதிதாகக் கண்டுபிடித்துத் தந்திருக்கிறோம்?**

மனோகோபாலன், ஹப்புத்தளை.

கால்களைச் சங்கிரிகளால் பிணைத்துத் தெருத் தெருவாகக் கொன்று போட்டாலும் ஏன் என்று கேட்க யாருமில்லாத ஸ்பாட்டகஸ் காலத்தையே மறுபடி கண்டுபிடித்துத் தந்திருக்கிறோமே... போதாதா!

**பத்திரிகையாளர்களில் மனிதாபிமானிகளே இல்லையா? சுயநல வாதிகள்தானா?**

வி. மாலினிப்ரியா, கொழும்பு-13

ஒரு பத்திரிகையாளர் சுடப்பட்டவுடன் ஊரையே கொந்தளிக்க வைத்து, பத்துப் பன்னிரண்டு பேர் வெளிநாட்டு அசைலமும் எடுத்துக்கொண்டு, மற்றவர்கள் ஊரில் நடப்புடன் திரிய உத்தரவாதங்களும் எடுத்துக்கொண்டுவிட்டார்கள். அவர்களுக்குப் பிடிக்காத தமிழ்ப் பொடியளைச் சுட்டு நாள்தோறும் தெருவில் வீசியெறிந்து கொண்டிருப்பதை நிறுத்தும்படி சொல்ல சிறு முக்கல் கூடச் செய்யாத மனிதாபிமானிகளாக மிளிர்கிறார்கள்.

**இராமாயணத்தில் இராமன் சீதையைத் தீக்குளிக்கச் சொன்னது சரியா? தவறா? சிந்தியா என்ன நினைக்கிறீர்கள்?**

ஸ்ரீகரன், கொழும்பு- 12




கனிமொழியின் கவிதை சொல்வது சரியென்று நினைக்கிறேன்.

"அக்கினிப் பிரவேசம்
என் சத்தியத்தை நிரூபிக்கவல்ல
நீ தொட்ட கறைகளைக் கழுவ."

**முன்னாள் இந்து கலாசார அமைச்சரும் கொழும்பில் அநேக தமிழர்களால் தெரிவு செய்யப்பட்டவருமான திருவாளர் மகேஸ்வரனார் இப்போது எங்கே?**

நா. பிரியா, மொறகொல்லை.

மண்ணை, மரத்தை, எண்ணெயைப் பணமாக்கும் திருவிளையாடல் முற்றும் இரண்டெழுத்தார் ஆதரவு இருப்பதாக நம்பச் செய்து மக்களின் அமோக ஆதரவைப் பெற்றாடிய மொள்ளைமாறித்தனமும் சம்பந்தப்பட்டவர்களின் சினத்தைக் கிளறிவிட்டதால், இன்னொரு ஆட்டத்திற்கு வருவதாக இருந்தால் இருக்கும் சொத்துக்கள் அனைத்தையும் கப்பமாக கொடுத்துவிட்டு மீண்டும் 'அ' விலிருந்து ஆரம்பிக்க வேண்டியிருக்கும்! மக்கள் அதையும் தாங்குவார்கள்.... தமிழுணர்வா! கொக்கா!

**இரண்டாவது டெஸ்டில் வாஸின் பந்துவீச்சு?**

. தர்சன், நீர்கொழும்பு.

அவரைச் சட்டை செய்யாமலே அத்தப்பத்துவுக்குப் பிறகு யார் என்று தலைக்விழ்ந்து தேடிக்கொண்டிருப்பவர்களுக்கான பதில் வீச்சு அது!.

**தமிழ் மக்கள் மத்தியில் ஜனநாயகம் இல்லை என்றா சொல்கிறீர்கள்?**

ஜே. எம். ஸ்ரீபன், கல்சிசை.

யார் சொன்னது? தமிழ்ப் பெருமிதத்தில் மனம் பொங்காதவர்தான் அத்தகைய சில்லறை விஷயங்களைச் சொல்லித் திரிவார்கள்.

ஒரு நாட்டில் இராணுவ ஆட்சி நடந்தது. தலைவர் மீது எல்லாரும் குற்றம் சாட்டினார்களாம்... "உங்கள் ஆட்சியில் ஜனநாயகமே இல்லை" என்று வெளிநாட்டுக்காரர்களும் இது இதுபற்றி முணுமுணுக்க ஆரம்பித்தபோது, தலைவர் ஒரு தேர்தலை நடத்தினார்.

வாக்கு எண்ணிக்கை நடைபெற்றது.

எல்லா வாக்குகளும் தலைவருக்கே விழுந்துகொண்டிருந்தன!

இடையில் ஒரே ஒரு வாக்கு மட்டும் எதிர்க்கட்சிக்கு விழுந்தது. உடனே தலைவர் மகிழ்வோடு பத்திரிகையாளர்களைப் பார்த்தார்: "பார்த்தீர்களா? என்னுடைய பிரதேசத்தில் ஜனநாயகம் இல்லை என்றீர்களே... பாருங்கள்... எதிர்க்கட்சிகளுக்கும் ஓட்டு விழுந்திருக்கிறது!" என்றார்.

வாக்கு எண்ணிக்கை தொடர்ந்தது.

கொஞ்ச நேரத்தில் மீண்டும் ஒரு வாக்கு எதிர்க்கட்சிகளுக்கு விழுந்திருந்தது. தலைவர் தமக்குள் முணுமுணுத்தார்.

திருட்டு ராஸ்கல்! அவனே இரண்டு வாக்குகளையும் போட்டிருக்கிறான்!




# கிரிக்கெட்டின் வரலாறு – 9

உலகின் முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின்போது சீ.ஏ.ரீட், ஆர்.பீ.டெரி ஆகியோர் நடுவர்களாகக் கடமையாற்றி யுள்ளனர்.

இதில், இங்கிலாந்து அணியைப் பிரதி நிதித்துவப்படுத்தும் வகையில் யோக்ஷயர் மாநில அணியைச் சேர்ந்த தோமஸ் ஆர்மி டேஜ், தோமஸ் சிமெட், என்ட்ரூ கிரீன்வுட், எலன் ஹில், ஜோர்ஜ் உல்யெட் ஆகியோரும் சசெக்ஸ் மாநில அணியைச் சேர்ந்த எச்.ஆர்., ஜே.சார்ள்வுட், ஜேம்ஸ் லில்லிவைட் ஆகியோ ரும் சரே மாநில அணியைச் சேர்ந்த ஹென்றி ஜப், ஜேம்ஸ் சவுத்தர்டன் ஆகியோரும் நொடின்ஹம்ஷயர் மாநில அணியைச் சேர்ந்த ஜோஸ் ஷெல்பி, எல்பிரட் ஷோ ஆகியோரும் பங்குபற்றியுள்ளனர்.

அவுஸ்திரேலிய அணியைப் பிரதிபலிக்கும் வகையில் நியூ சவுத் வேல்ஸ் மாநில அணி யைச் சேர்ந்த சார்ள்ஸ் பெனர்மன் தோமஸ் வில்லியம் கெரட், டேவிட் வில்லியம் கிரஹரி, எட்வர்ட் ஜேம்ஸ் கிரஹரி, என். தொம்சன் ஆகியோரும் விக்டோரியா மாநில அணியைச் சேர்ந்த ஜோன் மெக்கார்த்தி ப்ளெக்கம், பியுடேம்ப் பிரான்ஸ்பி கூபர், ஜோன் ஹென்றி ஹொடீகஸ், தோம்ஸ் பெற்றிக் ஹோரான், தோமஸ் கெண்டல், வில்லியம் இவன்ஸ் மிட்வின்டர் ஆகியோரும் பங்கு பற்றியுள்ளனர்.

உலகின் முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி நடந்த மெல்போர்ன் விளையாட்டு மைதானம் அவுஸ்திரேலிய மெல்போர்ன் நகரில் அமைந்துள்ளது. முதலாவது டெஸ்ட் போட்டி மட்டுமல்லாது உலகின் முதலாவது உத்தி யோகபூர்வ ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியும் இதே மைதானத்தில்தான் நடந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

1853இல் கட்டப்பட்டுள்ள மெல்போர்ன் விளையாட்டு மைதானத்தில் முதல் தர கிரிக்கெட் போட்டி ஒன்று 1856இல்தான் முதன்முதலில் விளையாடப்பட்டது. இது 1856 மார்ச் மாதம் 26ஆம், 27ஆம் திகதிகளில் விக்டோரியா மற்றும் நியூ சவுத் வேல்ஸ் ஆகிய மாநில அணிகளுக் கிடையில் நடைபெற்றுள்ளது.

மேலும் 1956இல் மெல்போர்ன் ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளும் மேற்படி மைதானத் தில்தான் நடாத்தப்பட்டுள்ளன. மெல்போர்ன் மைதானத்தில் டெஸ்ட் கிரிக்கெட் போட்டி யொன்றின்போது இதுவரை ஆகக் கூடுதலான ஓட்ட எண்ணிக்கையாக 307 ஓட்டங்களைப் பெற்றவர் என்ற பெருமை அவுஸ்திரேலிய அணியைச் சேர்ந்த ஆர்.எம்.கவ்பர் என்பவரைச் சாருகின்றது. 1965–66இல் இவர் இங்கிலாந்து அணிக்கு எதிராக இந்த ஓட்டங்களைப் பெற்றுள்ளார்.

உலகின் முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி நடந்து முடிந்து 5 வருடங்கள் கழிந்த நிலையில் 1882 ஆகஸ்ட் மாதம் 28ஆம், 29ஆம் திகதிகளில் இரண்டாவது டெஸ்ட் போட்டி இங்கிலாந்தில், லண்டனிலுள்ள ஓவல் மைதா னத்தில் நடந்துள்ளது.

இந்தப் போட்டியிலும் அவுஸ்திரேலிய அணியே வெற்றியை ஈட்டிக்கொண்டது. அவுஸ்திரேலிய அணியைச் சேர்ந்த எம்.ஆர்.ஸ்பொபர்த் என்பவரின் திறமையான பந்து வீச்சு இதற்குக் காரணம் எனக் கூற முடியும். இரண்டு இன்னிங்ஸிலுமாக இவர் 90 ஓட்டங் களைக் கொடுத்து 14 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார். இதனால் அவுஸ்திரேலியா, இங்கிலாந்தை 7 விக்கெட்டுகளால் வென்றது.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் தலைசிறந்த வீரராகக் கணிக்கப்படும் டபிள்யூ.ஜீ.கிறேஸ் இப் போட்டியின்போது இங்கிலாந்து அணி சார்பாக விளையாடியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி தனது முதலாவதாக இன்னிங்ஸில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 63 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

இதற்குப் பதிலளித்து ஆடிய இங்கிலாந்து அணி தனது முதலாவது இன்னிங்ஸில் 101 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது. ஸ்பொபர்த் 46 ஓட்டங்களைக் கொடுத்து 7 விக்கெட்டு களைக் கைப்பற்றினார். இவர் வீசிய பந்து நேரே விக்கெட்டில் பட்டதனால் டபிள்யூ.ஜி.கிறேஸ் நான்கு ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டமிழந்தார். இங்கிலாந்து அணி சார்பில் ஜி.உல்யெட் 26 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார்.

தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த அவுஸ்திரேலியா 122 ஓட்டங் களைப் பெற்றுக்கொண்டது. எச்.எம்.மெசீ இதன்போது 55 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார். இவர் சார்ள்ஸ் பெனர்மனுடன் இணைந்து முதலாவது விக்கெட்டுக்காக 66 ஓட்டங்களுக்கான தொடர்பை ஏற்படுத்திக் கொண்டார்.

இங்கிலாந்து அணி தனது இரண்டாவது இன்னிங்ஸில் 77 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது. டபிள்யூ.ஜி.கிறேஸ் 32 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டார். 44 ஓட்டங்களைக் கொடுத்த ஸ்பொபர்த் 7 விக்கெட்டுகளைக் கைப்பற்றிக்கொண்டார்.

இந்தப் போட்டிக்குப் பின்னர் உலகின் அதி சிறந்த பந்துவீச்சாளராக ஸ்பொபர்த் கணிக்கப்பட்டதுடன் இவரைப் 'பேய்' என்றே கிரிக்கெட் துறையினர் அழைக்க ஆரம் பித்தனர். இங்கிலாந்து அணி சார்பில் சிறந்த பந்துவீச்சாளர் ஈபியெட், முதல் இன்னிங்ஸில் 31 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும் இரண்டாவது இன்னிங்ஸில் 40 ஓட்டங் களுக்கு 4 விக்கெட்டுக்களையும் பெற்றுக் கொண்டுள்ளார்.

இப் போட்டியில் எல்.கிறீன்வுட், ஆர்.தோமஸ் ஆகியோர் நடுவர்களாகப் பணியாற்றியுள்ளமை குறிப்பிடத் தக்கது.

-மைந்தன்

## ஒலிம்பிக்

இம்மாதம் 13ஆம் திகதி ஆரம்பமாகி இருக்கும் 28ஆவது ஒலிம்பிக்போட்டி அதன் பிறப்பிடமான கிரீஸ் நாட்டில் நடைபெறுகிறது. ஏறக்குறைய 2700 வருடங்களுக்கு முன் அறிமுகப்படுத்தப்பட்ட ஒலிம்பிக் போட்டி 1986ஆம் ஆண்டு முதல் நவீனமயப்படுத்தப்பட்டு இன்று உலக நாடுகளில் நடைபெற்று வருகின்றது.

தற்போது உலகநாடுகளில் இடம்பெறும் பயங்கரவாதத் தாக்குதல்கள் காரணமாக இப்போட்டிக்கு ஒலிம்பிக் வரலாற்றிலேயே முதல் முதலாகப் பாதுகாப்பு மிகவும் பலப்படுத்தப்பட்டு 70 ஆயிரம் கிரேக்க நாட்டுப் படையினர் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருக்கிறார்கள். 1,640 பாதுகாப்புக் கமெராக்கள் வீதிகளில் பொருத்தப்பட்டிருக்கின்றன. ஆகஸ்ட் 13முதல் 29ஆம் திகதி வரை நடைபெற இருக்கும் இப்போட்டியில் கலந்து கொள்ளவிருக்கும் விளையாட்டு வீரர்கள், அவர்களது குடும்பங்கள், அரசியல்வாதிகள் ஆகியோருக்கு விளையாட்டு மைதானங்கள், வீதிகள், துறைமுகம், விமானநிலையம் என பல தரப்பட்ட இடங்களிலும் பாதுகாப்புக் கொடுக்கப்பட இருக்கின்றது. கிரேக்க நாட்டு இராணுவம் 1974ஆம் ஆண்டு இராணுவ சர்வாதிகார ஆட்சிக்குப் பிறகு இப்போதுதான் வீதிகளில் பாதுகாப்புக்கு இறக்கப்பட்டிருக்கிறது. வீதிகளில் பொருத்தப்பட்டுள்ள பாதுகாப்புக் கமெராக்களுக்கு மட்டும் 355 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவாகியிருக்கிறது.

விளையாட்டுக்கள் இடம் பெறும் நகரங்களின்மேல் விமானங்கள் பறப்பதை தடைசெய்திருக்கிறார்கள். காரணம், விமானங்களைக் கடத்தி தற்கொலைத் தாக்குதல் நடத்தலாம் என்ற முன்னெச்சரிக் கையுடன் சகல விளையாட்டு மைதானங்களிலும் விமான எதிர்ப்பு பீரங்கிகள் பொருத்தப்பட்டி ருக்கின்றன. இம்முறை நேட்டோ நாட்டுப் படைகளும் பாதுகாப்பு வழங்க முன்வந்துள்ளன. கிரேக்க நாட்டிற்கு வெளியே உள்ள கடற்பிரதேசங்கள் பாதுகாப்பான நிலையில் வைக்கப்பட்டுள்ளன. கிரேக்க துறைமுகத்தில் 08 உல்லாசப் பயணிகளின் கப்பல்கள் நிறுத்தப்பட்டுள்ளன. குயின்மேரி -2 உல்லாசப் பிரயாணிகள் கப்பலும் இதில் அடங்கும். 8,000திற்கு மேற்பட்ட விசேட விருந்தினர்களாக அழைக்கப்பட்டவர்கள், இக்கப்பல்களில் தங்கவைக்கப்படுவர் 10,500 விளையாட்டு வீரர்களும், படப்பிடிப்பாளர்கள், பத்திரிகையாளர்கள், வானொலி, தொலைக்காட்சிகளைச் சேர்ந்தோர் என 21,500 பேரும், உல்லாச விடுதிகளில் தங்கவைக்கப்படுவர். எல்லாவற்றுக்குமான பாதுகாப்புச் செலவினம் எவ்வளவு தெரியுமா? 1.6 பில்லியன். இது 2000ஆம் ஆண்டு அவுஸ்திரேலிய சிட்னியில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிக்குச் செலவான செலவழித்தப் பாதுகாப்பு பணத்தைவிட 5 மடங்கு கூடுதலாக கிரீஸ் நாடு பாதுகாப்புக்குச் செலவிடுகிறது.



இதைவிட கடந்த 108 வருட ஒலிம்பிக் சரித்திரத்தில் விளையாட்டு வீரர்களுக்கான காப்புறுதி 170 மில்லியன் அமெரிக்க டொலராகும். இதை பிரிட்டனில் உள்ள காப்புறுதி நிறுவனம் பொறுப்பேற்றுள்ளது. அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், ஜேர்மனி, ஸ்பெயின், இஸ்ரேல் போன்ற நாடுகளிடம் பாதுகாப்பு உதவி கோரப்பட்டுள்ளது.

1972ஆம் ஆண்டு ஜேர்மன் மூனிச் நகரில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் பாலஸ்தீனிய தீவிரவாதிகள் இஸ்ரேலிய விளையாட்டு வீரர்களைப் பணயக் கைதிகளாகப் பிடித்து வைத்திருந்தனர். பின்பு மீட்பு நடவடிக்கையில் ஈடுபட்டபோது 17 பேர் கொல்லப்பட்டனர். இதில் 11பேர் இஸ்ரேலிய விளையாட்டு வீரர்கள் ஆவார்கள். இவ்வருடம் மே மாதம் ஏதன்ஸ் பொலிஸ் நிலையத்திற்கு முன்னால் 3 குண்டுகளை வெடிக்க வைத்தனர் உள்நாட்டு மார்க்சிஸ்ட் தீவிரவாதிகள். இதில் பொலிஸார் காயமடைந்ததுடன் வாகனத் தரிப்பில் நின்ற வாகனங்களும் சேதமடைந்தன. இக் குண்டுவெடிப்புச் சம்பவத்தால் சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி (I.O.C) இப்போட்டிக்கு அதிகபட்ச பாதுகாப்பையும், வீரர்களுக்கான காப்புறுதியையும் உறுதி செய்து ஒலிம்பிக் போட்டி 100வீத பாதுகாப்புள்ளது என உத்தரவாதமளித்துள்ளது.

### ஒலிம்பிக் தீபம்

ஒவ்வொரு ஒலிம்பிக் போட்டிகளின் தொடக்க விழாவிலும் ஒலிம்பிக் தீபம் ஏற்றப்படும். அதற்கு முன்னர் ஒலிம்பிக் போட்டி நடைபெற்ற 27 நாடுகளுக்கும் ஒலிம்பிக் தீபம் மார்ச் மாதம் 25ஆம் திகதி எடுத்துச் செல்லப்பட்டு, யூலை 9ஆ[illegible].ம் திகதி கிறீஸ் நாட்டைச் சென்றடைந்திருக்கிறது. இம்முறை மெக்ஸிக்கோ நகரில் இருந்து வீராங்கனையான 93 வயது மூதாட்டி ஒலிம்பிக் தீபத்தை எடுத்துச் சென்றார். றெ சாரியோ லிலீசியா என்ற இம் மூதாட்டி ஒலிம்பிக் போட்டியில் 200, 400 மீற்றர்களில் முதலாவது இடத்தைப்பெற்று தங்கத்தை வென்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. அடுத்த ஒலிம்பிக் போட்டி 2008ஆம் ஆண்டு சீனாவில் நடைபெற இருக்கிறது.

## எந்தக் கிழமையில் பிறந்தீர்கள்? என்ன அதிர்ஷ்டம் பெறுவீர்கள்?

**மின்சார உலகின் வேகத்திற்கு ஏற்ப மனிதனுடைய பிறப்பு,இறப்பு பற்றிய விரிவான விளக்கங்களைப் பெற்றுக் கொள்ளவேண்டிய அவசியமற்ற இவ்வுலகில் மானிடத் தேவைக்கு ஏற்ப விரைவாக அவர்களது பிறப்பு எண்ணையும் (திகதி) பிறந்த கிழமையினையும் (திங்கள் - ஞாயிறு) கொண்டு தீர்க்கமாக என் அருள் ஞான ஜோதிட சித்தத்தில் கணிக்கப்பட்ட சுருக்கமான உங்கள் பலாபலன்களாகும்.**

**சொல்பவர் :**
**ஜோதிட அறிஞர், பேராசிரியர்,**
**டாக்டர் பீ.கே. சாமி J.D.G.A.N.,**
**(J.P.சமாதான நீதிபதி, கொழும்பு - இலங்கை)**

### ஆதிக்கம் 4: பிறந்த கிழமை வியாழக்கிழமை

எண் நான்கு என்பது பல வல்லமைகளையும் சக்தியினையும் கொண்டது. வியாழக்கிழமை பல சிறப்புகளைக் கொண்டு விளங்கும் தினமாகும். இப்படியான சிறப்புகள் உடைய ஆதிக்கத்திலும் கிழமையிலும் பிறந்துள்ள நீங்கள் நன்மைகள் செய்வதில் அதிக நாட்டம் கொண்டவராகத் திகழ்வீர்கள். பல காரியங்களை விட்டும் நீங்கிக் காணப்படுவீர்கள். அந்தளவிற்குக் கண்ணியம் நிரம்பியவராக இருப்பீர்கள்.

தனிமையை மிகவும் நேசிப்பீர்கள். பிறரால் ஏற்படும் தொல்லைகளையும் கஷ்டங்களையும் வெறுப்பீர்கள். இதனால் தனிமையாகத்தான் வாழ முயற்சிப்பீர்கள். பிறருடன் சேர விரும்பமாட்டீர்கள். தேவையில்லாத சகவாசம், வீணான நட்பு போன்றவை உங்களுக்கு இருக்காது. எந்தக் காரியத்திலும் பிறரை அணுகவும் மாட்டீர்கள். பிறர் உங்களை நெருங்குவதையும் விரும்பமாட்டீர்கள்.

அன்பு, இரக்கம், கருணை என்பன உங்கள் தனித்தன்மைகள். நீங்கள் அன்பு செலுத்துவீர்கள். ஆனால், அதற்குப் பிரதி உபகாரம் எதிர்பார்க்க மாட்டீர்கள். இந்த உலக ஆடம்பர வாழ்க்கையினை விரும்பாத – அழகாகவும் அதே நேரம் எளிமையாகவும் வாழ விருப்பம் உள்ளவர் நீங்கள். பிறருடன் பேசும்போது ஒரு தனித்தன்மையோடு பேசுவீர்கள். அன்பு கலந்த வார்த்தைகளைப் பிரயோகிப்பீர்கள். மரியாதைத் தன்மை உங்கள் நடத்தையில் காட்சி தரும். திமிர், ஆணவம், தலைக்கனம் என்பதே என்னவென்று தெரியாத நீங்கள் பிறருடன் பணிவாகப் பழகுவீர்கள். தொடர்ந்து கல்வி கற்கக்கூடிய வாய்ப்பு உங்களுக்கு இருக்காது. ஆனால் வாழ்க்கைக்குத் தேவையான அறிவு உங்களிடம் நிறையவே இருக்கும். சக்தியை விரயமாக்கிக் கடின முயற்சியுடன் கூடிய தொழில் செய்யமாட்டீர்கள். உடையில் வியர்வையோ, அழுக்கோ படாத வேலைதான் செய்வீர்கள். அதாவது இலகுவான தொழில் செய்து நிறையச் சம்பாதிப்பீர்கள்.

அரசாங்கத் தொழிலில் நீங்கள் இருக்கக் கூடிய வாய்ப்பு இல்லை. தனியார் நடத்தும் நிறுவனங்கள் அல்லது தொழிற்சாலைகளில்தான் வேலை செய்வீர்கள். ஒரே ஒரு தொழில் செய்து காலத்தைக் கடத்த மாட்டீர்கள். பல தொழில்கள் செய்வீர்கள். அந்தளவிற்கு நிறைய அனுபவங்கள் உங்களுக்குண்டு.

பொறியியல் நிபுணராக இருக்கக்கூடிய வாய்ப்பும், சமையல் வல்லுனர்களாகத் திகழக்கூடிய சந்தர்ப்பமும், தச்சுத்தொழில் புரிபவர்களாகத் திகழக்கூடிய வாய்ப்புக்களும் அதிகம் உண்டு. மேற்கூறிய தொழில்களில் மிகவும் தேர்ச்சியும் நிபுணத்துவமும் உடையவர்களாக இருப்பீர்கள். 30 வயதுக்குப் பின்னர்தான் தொழிலில் வருமானமும் முன்னேற்றமும் ஏற்படும். 39 வயதுவரை வருமானம் அதிகரிக்கும்.

40 வயதில் தொழில் மாறும். வேறொரு தொழில் முறை ஆரம்பமாகும். இந்தக் காலத்தில் வருமானம் மிகுதியாகக் கிடைக்கும். வீண் பணச் செலவுகள் அவ்வப்போது ஏற்படும். ஒரே ஒரு தடவைதான் உங்களுக்கு கண்டம் ஏற்படும். அது 41ஆவது வயதில் ஏற்படும். உயிருக்குத் தீங்கு ஏற்படாது. 42 வயதில் குடலோடு தொடர்புடைய நோய் ஏற்படும். 44 வயதில் கொஞ்சம் துன்பம் ஏற்படும். குடல் சம்பந்தமான நோயைத் தடுக்கும் உணவு வகைகளைச் சாப்பிடுங்கள். அவை பசு நெய், முள்ளங்கிக் கிழங்கு, மணத்தக்காளிக் கீரை.


நீங்கள் எண் 4 இல் பிறந்திருந்தாலும் அதிர்ஷ்ட எண் ஒன்று. 1, 10, 19, 28 திகதிகளில் நல்லவற்றைச் செய்யுங்கள். இந்தத் திகதிகள் வியாழக்கிழமைகளில் அமையுமானால் உங்களின் அதிர்ஷ்டமும் மகிழ்ச்சியும் இரட்டிப்பாகும். நீங்கள் ஆடை விடயத்திலும் கவனம் செலுத்த வேண்டும். சந்தன நிறத்தில் சர்ட் அணியுங்கள். வெள்ளைநிற ஆடையினை இடுப்புக்குகீழ் அணிவது இன்னும் சிறப்பினை உங்களுக்கு ஏற்படுத்தும். மஞ்சள் நிறத்தில் இமிடேசன் கல் அல்லது கோமேதகம் பதித்த தங்க மோதிரம் நீங்கள் அணிந்தால் அதிர்ஷ்டமாகும்.

ஆகவே பிறப்பெண் 4ஐயும், வியாழக்கிழமையினைப் பிறந்த நாளாகவும் உடைய நீங்கள் வாழ்வில் சகல சுகங்களும் பெற்று வாழ என் ஆசீர்வாதங்கள்.

வியாழனில் பிறந்து மலர்ந்தீர்! தூய நான்கில் ஆதிக்கமானீர்! ஓயாத செல்வம் வந்திடும்; தேயாத புகழ்ச்சி ஓங்கிடும்.!

*(அடுத்து ஆதிக்கம் 4 வெள்ளிக்கிழமை பிறந்த வர்களைப் பற்றி பார்ப்போம்)*

“மாஜிக் தந்திரங்கள்” குறித்த பயிற்சியும் அதனோடு ஒட்டிய சுவைமிகு தகவல்களும் தொடர்ந்து வெளிவரும். மாஜிக் பிரியமுடைய நீங்களும் மாஜிக் நிபுணராகத் திகழ எமது வாழ்த்துக்கள்.



# மாஜிக் தந்திரங்கள்


சுமார் 1 செ.மீ. கனமுள்ள வெண்ணிறமான உறுதியான நூல் கயிறு 15 மீற்றர் வாங்கி வைத்துக்கொள்ள வேண்டும். காட்சி ஆரம்பித்தவுடன் உதவியாளரை அழைத்து அவரை சபையோருக்கு வணக்கம் கூறும்படி சொல்லி வணக்கம் கூறியவுடன் அவரைத் தூணின் பக்கமாக வரவழைத்து, தூணுக்கு நேராக நிற்க வைத்து, அவரைத் தூணோடு சேர்த்து நெஞ்சு முதல் குதிக்கால் வரை இந்த நூல் கயிற்றைக் கொண்டு சுற்றிச் சுற்றி நன்றாகக் கட்டி மூன்று முடிச்சுப் போட்டுவிட வேண்டும். இந்தச் சமயம் உதவியாள் சற்று முன்பக்கமாகச் சாய்ந்த நிலையில் இருக்க வேண்டும். கயிற்றைக் கட்டும் காட்சியாளரும் சற்று முன்பக்கம் சாய்ந்து இருந்தாலும் இறுக்கிக் கட்டுவது போல நடிக்க வேண்டும். “இந்த வேலை முடிந்தபின் இந்த ஆளை அடுத்த தூணில் கட்ட வேண்டும். கட்டிய கட்டை அவிழ்த்துவிட்டுத்தான் கட்ட வேண்டும்” என்று சொல்லி மந்திரக்கோலை ஆட்டி மின்சார விளக்குகளை டக்கென்று அணைத்துவிட வேண்டும். இந்தச் சமயம் மூங்கிலில் கட்டியிருக்கும் உதவியாள் சற்று இடுப்பை இறுக்கினால் கயிறு தளரும். கயிறு மூங்கிலிலிருந்து சற்றுக் கீழே இறங்கும். இந்த நிலையில் இரண்டு கைகளையும் முன்பக்கமாக நீட்டி, உடலும் மூங்கிலும் இறுகிப் பிடிக்கும்படி செய்து கீழே துளையிலுள்ள மூங்கிலை மேலே தூக்கி அதை விட்டு எடுத்து, மேலே சொருகப்பட்ட தலைப்பையும் கழற்றிக்கொண்டு அடுத்த தூணின் பக்கம் கொண்டுவந்து, தான் முதலில் நின்ற இடத்திலுள்ள துளையில் சேர்த்துவிட்டு, இரண்டாவது தூண் இருந்த இடத்திலுள்ள துளையில் தான் கட்டப்பட்டிருக்கும் தூணைச் சொருகி நிறுத்தி ஒன்றும் தெரியாதவர் போல் நிற்க வேண்டும்.

காட்சியாளர் உடனே விளக்கை எரியவிட வேண்டும். இந்த வேலை ஒரு விநாடியில் நடைபெற வேண்டும். உதவியாள் இந்த வேலையைச் செய்ய நல்ல பயிற்சி பெற்றிருக்க வேண்டும்.

இடம் மாறி இருப்பதை வெளிச்சத்தில் காணும் சபையோர், கட்டிய ஆளை அவிழ்த்து அடுத்த தூணில் இவ்வளவு சீக்கிரம் கட்ட முடியுமா? இது மந்திரவேலை என்று நினைத்து ஆச்சரியப்படுவார்கள். உடனே மேடையின் முன்திரையை விட்டு மேடையை மூடிவிட வேண்டும்.

## இந்தக் காட்சியை வேறு முறையிலும் நடத்தலாம்

எப்படி என்றால், தயாரிக்கப்பட்ட இரண்டு மூங்கில்களின் மேல் தலைப்பை பரணுக்குக் கீழ் சுமார் 15 செ.மீ. குறைவாக இருக்கும்படி குறைத்துவிட வேண்டும். அடிப் பகுதியை குறுக்குச் சட்டம் அடித்த நிலையில் வைத்துக் கொள்ளலாம். ஆனால், ஆள் கட்டப்படாத தூண் மேடைத் துளையில் சாய்ந்து விடாத நிலையில் நிற்க வேண்டும். இதற்கு ஒரு காரியம் செய்யலாம். மூங்கில் கீழே இறங்கி விடாதபடி ஒரு குறுக்குச் சட்டம் அடித்துவிட்டு இதை குழி அல்லது, துளையில் இறக்கினால் அந்தத் தூண்



சாயாமல் நட்டது போல் நிற்கும்.

இந்த விதமான இரண்டு மூங்கில் களைத் தயாரித்து அவற்றிற்குப் பச்சை வர்ணம் அடித்துவிட வேண்டும். இந்த இரண்டு மூங்கிலும் எவ்வாறு நிற்கின்றன என்பதை சபையோர் அறியாதிருக்க பச்சைக் காகிதத்தை மெல்லியதாகப் புல் போல வெட்டி, அடிப்பாகத்தில் நெருக்கமாக சுற்றிலும் கட்டிவிட வேண்டும்.

காட்சி ஆரம்பிக்குமுன் மேடையில் இரண்டு மூங்கில்களையும் நாட்டி வைத்துவிட வேண்டும். காட்சியாளர் உதவியாளரையும் அழைத்துக்கொண்டு மேடைக்கு வந்து முதல் மூங்கிலுக்கு முன்பாக நிற்கச் சொல்லி, அவரை மூங்கிலோடு இணைத்துக் கட்ட வேண்டும். முதலில் கைகளைக் கட்டிவிட்டு, பிறகு நெஞ்சிலிருந்து இடுப்பு வரை கயிற்றைச் சுற்றிச் சுற்றிக் கட்டிவிட்டு, இரண்டு தலைப்புகளையும் முடிந்துவிட வேண்டும்.

பிறகு, மேடைக்கு முன்னே வந்து, “இந்த ஆளை மூங்கிலோடு இணைத் துக் கட்டி விட்டேன். இப்போது அவரை அடுத்த மூங்கிலில் கட்ட வேண்டும். எப்படிக் கட்டுவது? கட்டை அவிழ்த்துத் தான் கட்ட வேண்டும். கட்டை அவிழ்க்காமல் நான் கட்டுகிறேன் பாருங்கள்” என்று சொல்லி, மேடையின் மின்சார விளக்கை அணைத்து விட்டு காட்சியாளர் வேகமாகச் சென்று இரண்டாவது மூங்கிலைப் பிடுங்கி எடுத்துக் கொண்டு வேகமாக வந்து முதல் மூங்கில் இருந்த இடத்தில் நாட்டிவிட வேண்டும். அதே நேரத்தில், முதல் மூங்கிலில் கட்டப்பட்டவர் அந்த இடத்திலிருந்து மூங்கிலைக் கழற்றிக் கொண்டு வேகமாகச் சென்று இரண்டாவது மூங்கில் இருந்த இடத்திற்கு வந்து நின்றுவிட வேண்டும். இந்த வேலை வெகு வேகமாக சில நொடிகளில் நடைபெற வேண்டும். இந்த வேலை முடிந்தவுடன் உடனே மின்சார விளக்கை எரியவிட வேண்டும். இதைக் கண்ட சபையோர், “முதல் மூங்கிலில் கட்டப்பட்டவன் எப்படி இரண்டாவது மூங்கிலுக்கு வந்தான்” என்று ஆச்சரியப்படுவார்கள்.

*குறிப்பு :-* இந்த வேலையை இருட்டில் செய்ய வேண்டியிருப்பதால் கவனித்து விலகிச் செல்ல வேண்டும். ஒருவருக் கொருவர் மோதிக்கொள்ளக் கூடாது.

## ஒருவரை மேடையில் படுக்க வைத்து ஈரல் குலையை எடுத்துக் காண்பித்தல்

இந்தக் காட்சியை நடத்த ஆட்டின் ஈரல்குலை ஒன்றை வாங்கி வந்து, அதை ஒரு பாலிதீன் பையில் போட்டு ஈரம் வெளியே கசியாத அளவிற்கு நன்றாகச் சுருட்டி வைத்துக் கொள்ள வேண்டும். காட்சி ஆரம்பிக்குமுன் இதை உதவியாளரின் வயிற்றின் மேல்வைத்து சபையோர் சந்தேகப்படாத அளவிற்கு மட்டமாகக் கட்டிவிட வேண்டும்.

காட்சி ஆரம்பமாகும்பொழுது மேடையின் மேல் ஓர் அகலமான வாங்கைப் போட்டு, அதன் மேல் ஒரு படுக்கை விரிப்பை சபையோருக்கு முன் உதறிக் காண்பித்துவிட்டு நான்காக மடித்து வாங்கின் மேல் போட்டு, ஒரு தலையணை போட்டு, அந்த வாங்கின் மேல் உதவியாளரைப் படுக்க வைக்க வேண்டும்.

(தொடர்ந்து வரும்..........)

# காதிலை பூ கந்தசாமி

## நோட்டீஸ் பலகை



நான் சொல்வ தெல்லாம் பொய்.
பொய்யைத் தவிர
வேறொன்றுமில்லை.
*-காதில பூ கந்தசாமி-*

“நல்லதோர் வீணை செய்தே......”

என்ன பாரதி பாட்டோட வெளிக்கிடுகிற னெண்டு பாக்கிறியளோ! அது பாரதி அப்ப பாடினது. இப்ப இந்தக் காலத்துக்குத் தக்கதாகப் பொருத்தமா ஒரு பாட்டை நான் பாடுறன் கேளுங்கோ.

“நல்லதோர் வீணை செய்தே....
அதை நலங்கெட புழுதியில் எறிவ துண்டோ?
சொல்லடீ சிவசக்தி
கொத்தி விறகாக்கி அடுப்பினில் போட்டுவிடு!”

எப்பிடி? வீணைய ஏன் வீசுவான்? விறகாக்கிப் போட்டால் ரெண்டு நாள் சமையல் செலவு மிச்சமோ, இல்லையோ? ‘பிறக்டிக்கலாத் திங்’ பண்ண அந்தக் காலத்தில ஆக்களிருக்கேல்லைப் போல. அதுதான் நாங்கள் அப்பிடியே இருக்கிறம். நீராவியக் கண்டுபிடிச்ச எங்கட செம் மணச்செல்விக்கு அதைப் பயன்படுத்திச் சிவபெருமானுக்குப் புட்டு அவிச்சுக் குடுக்கத்தான் தெரிஞ்சுது. அவன் வெள்ளைக்காறன் அதே நீராவியப் பயன்படுத்தி ஸ்ரீம் எஞ்சின் செய்து ஓட விட நாங்கள் வாய் பாத்துக்கொண்டு இருந்ததுதானே மிச்சம்.

அது போகட்டும், அப்ப அவங்கட காலம்! இப்ப எங்கட காலத்திலயெண்டாலும் ‘பிறக்டிக்கல் திங்கிங்’ யாருக்கு இருக்குது? ஏதோ நான் ஒரு காதில பூவெண்டு உங்களுக்கு வாச்சிருக்கிறபடியால நாலு பத்து ஐடியாக்களைத் தரக் கூடியதாயி ருக்குது. அதுவுமில்லையெண்டால் எங்கட செல்வா சொன்ன மாதிரி “உங்கள அந்தக் கடவுள்தான் காப்பாத்த வேணும்.” இப்ப இந்த எரிபொருளின்ர விலை அதிகரிக்கிறதா நியூஸ் சொல்லுறாங்களே, அதுக்கு என்ன செய்யலாமெண்டு யோசினை சொல்லுறன் கேளுங்கோ.

முதலில, நியூஸ் டைமில ரேடியோ, டீ.விகள ஓப் பண்ணி வைச்சிடுறது அட் வைஸ்ஸபல். அதையும் மீறி எரிபொருள் விலை அதிகரிச்சால் இருக்கவே இருக்கு எங்க மாட்டுவண்டி. ஏறி இருந்து, கோல் ரோட்டால உல்லாசமாக சலோச் சலோ எண்டு சவாரி போக வேண்டியதுதான்.

சமையலுக்கு ‘காஸ்’ தேவை யெண்டிறியளோ! அடுப்புக்கு மாறுங்கோ யோசிக்காமல். இப்ப ∴பை ஸ்டார் ஹொட்டேல்களிலயும் சட்டியில சமைக்கிற கறியெண்டு தனி விலை சொல்லி விக்கிறாங்கள். ‘நத்திங் ரோங்!’ இல்லாட்டால் சமைக்காமல் பச்சையாவே சாப்பிடப் பழகுங்கோ. ஆதிவாசியல் அப்பிடித்தானே வாழ்ந்தவை.

அடுத்ததாப் பாருங்கோ, அமைச்சராயி ருந்தவையெல்லாம் ஊழல் கேஸ்*களில மாட்டுப்பட்டுக் கைதாகி வாறதால எங்கட முன்னாள் அமைச்சர்மாருக்கு ஒரு அட்வைஸ்! நீங்கள் சம்பா அரிசிய வாங்கினதாச் சொல்லிப்போட்டு பச்சை அரி சியக் குடுத்ததாலதானே மாட்டுப்படுறியள். அரிசியே குடுக்காமல் விட்டிருந்தாள் தப்பியிருப்பிய ளெல்லோ. அதுக்குத்தான் அப்பவே என்னட்ட ஐடியாக் கேட்டிருக்க வேணும். சரி தப்புச் செய்திட்டியள்.

எல்லாரையும் விடுங்கோ, எங்கட அறப் பழுத்த சம்பந்தரையாவுக்கே அறிவு மழுங்கிப் போச்சு. அமெரிக்காவுக்குப் போனவர் ரொக்காவை ஏன் சந்திக்கேல்லையெண்டு தனியார் ரீவிக்காறன் விரல் காட்டி விரட்டிறான். “ரொக்கா என்ன உன்ர கொக் காவோ” எண்டு திருப்பிக் கேக்கலாம்தான். ஓப்பின் ரீவியாய் போச்சுது. அதுதான் ஐயாவுக்குப் படிச்சுப் படிச்சுப் சொல்லுறனான், எதையும் தனிச்சுச் செய்யச் சொல்லி. அமெரிக்கா போனவர் ஏன் காங்கிரஸ்காறக் கஜேந்திரகுமாரோட கொழுக்கி மாட்டிக் கொண்டு கூடப் போக வேணும்? தனியப் போயிருந்தா ரொக்கா என்ன, ஆனானப்பட்ட அமெரிக்க ஜனாதிபதியிட்டயே தமிழற்ர பிரச்சினைகளைப் பற்றி மணிக் கணக்கில பேசிபோட்டு வந்ததாப் பிளந்து தள்ளியிருக் கலாம். இனிமேலெண்டாலும் பிடி குடுக்காமல் நடந்துகொள்ளுங்கோ, பிளீஸ்!

அதெல்லாம் சரி, இப்ப ஏதோ தேர்தல்களுக்கு ஐடென்ரிக் கார்ட்டக் காட்ட வேணுமெண்டு சட்டம் கொண்டரப் போறாங் களாமே. தமிழ்க் கூட்டமைப்பார் ஏனாம் ‘கம்’மெண்டிருக்கினம். அடுத்த தேர்தல் வந்தால்- ஒருவேளை, நடந்த தேர்தலே பிழையெண்டு வழக்கில் தீர்ப்பு வந்தால் எப்பிடியாம் இனி அதிகப்படி வாக்கெடுத்துக் கதிரை பிடிக்கப் போகினம். செத்தவைக்கும் வெளிநாடு போனவைக்கும் பச்சைப் பாலகர்களுக்குமுள்ள வாக்குரிமையைப் அரசாங்கம் பறிக்கப் பாக்கிற இந்த இனவாத எண்டு சொல்லி ஒரு மாபெரும் மறியல் போராட்டத்தை நடத்திறது. பள்ளிக்கூடப் பிள்ளைகளை வாகனத்தில் ஏத்தி வந்தெண்டாலும் நடத்திக் காட்டலாந்தானே! இல்லாட்டால் ஒரு ஐடியா! சிங்கள அரசாங்கம் தாற ஐடென்ரிக் கார்ட்டை ஏற்காமல் கண்டிச்சு அதைக் கொளுத்தித் தள்ளினால் என்ன? திங்க் அன்ட் கண்டனத் துக்கு இறங்காமல் திங்கிங்! இன்னும்... எதுக்கும் ஐடியா வேணுமெண்டால் இம்மீடி யட்டாக் கோல்பண்ணுங்கோ. தேங்ஸ்.

**யாவும் கலப்படமற்ற கற்பனை**

# இந்த வாரம் உங்கள் பலன்

(22.08.2004 தொடங்கி 28.08.2004 வரை)

## சோதிட மாமணி தில்லை

### இந்த வாரக் கிரக நிலை

சிங்கம் -சூரியன், செவ்வாய், புதன், கன்னி - வியாழன், துலாம் - கேது, இடபம் - இராகு, மிதுனம் - சனி, க்ர்க்கடகம் - வெள்ளி
சந்திரன் துலாம், விருச்சிகம், தனு இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

**மேடம்** : (அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்) தொழிலின்மை, கூடிய வரவு, மனக் குறை நீங்கும், பிரயாணக் கஷ்டம், உறவினர் உபத்திரவம், உத்தியோகக் கலக்கம், மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வியாழன்**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 04**

**இடபம்** : (கார்த்திகை பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை) தொழில் சிறப்பு, காரியானுகூலம், பெரியோர் நட்பு, உத்தியோகச் சிரமம், வீண் மனக் கலக்கம், மாணவர் கல்வி மாற்றம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த லாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 02**

**மிதுனம்** : (மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்) தொழில் கஷ்டம், பண விரயம், வீண் மனஸ்தாபம், குடும்பத் தொல்லை, உத்தியோக மாற்றம், மாணவர் கல்வி ஏற்றம், விவசாயிகள், வியாபாரிகள் கடின உழைப்பு.
**அதிர்ஷ்ட நாள்:- திங்கள்**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 07**

**கர்க்கடகம்** : (புனர்பூசத்து நாலாங்கால், பூசம், ஆயிலியம்.) தொழில் பலிதம், பண வரவு தடை, மனக் கஷ்டம், குடும்ப மகிழ்ச்சி, உற்றார், உதவி, உத்தியோக மேன்மை, மாணவர் கல்வி ஏற்றம், விவசாயிகள், வியாபாரிகள் அற்ப இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- திங்கள்**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 05**

**சிங்கம்** : (மகம், பூரம், உத்தரத்து முதற்கால்) தொழில் நிலை மாற்றம், மனக் கவலை, செலவு மிகுதி, வெளியிட வாழ்க்கை, அன்னியர் நட்பு, உத்தியோகக் கஷ்டம், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்வி குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 06**

**கன்னி** : (உத்தரத்துப் பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை) தொழில் கவலை, பண வரவு, பெரியோர் உதவி, குடும்ப நன்மை, சுபகாரிய மகிழ்ச்சி, உத்தியோக நன்மை, மாணவர் கல்வி கஷ்டம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 01**

**துலாம்** : (சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்) தொழில் சிறப்பு, உயர்ந்த நிலை, கௌரவம், மன மகிழ்ச்சி, உத்தியோக முயற்சி, அன்னியர் உதவி, மாணவர் கல்வி மேன்மை, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- திங்கள்**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 02**

**விருச்சிகம்** : (விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை ) தொழில் பலிதம், முயற்சி மேன்மை, மனக் குறை நீங்கும், அன்னியர் நட்பு, உத்தியோகக் கவலை, மாணவர் கல்வி சிறப்பு, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்**
**அதிர்ஷ்ட இலக்கம் :- 02**

**தனு** : (மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்) தொழில் மந்தம், காரியக் கேடு, அன்னியர் சகவாசம், குடும்ப மகிழ்ச்சி, உத்தியோக நன்மை, மாணவர் கல்வி குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 03**

**மகரம்** : (உத்தராடத்துப் பின் முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை) தொழில் பலிதம், செலவு மிகுதி, அன்னியரால் தொல்லை. எதிர்பாராத செலவு, உத்தியோகச் சிக்கல், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்வி குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் கடின உழைப்பு.
**அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 04**

**கும்பம்** : (அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்) தொழில் உயர்ச்சி, பண வரவு, பெரியோர் சகவாசம், இனசன நன்மை, உத்தியோகக் கஷ்டம், பிரயாண மிகுதி, மாணவர் கல்வி மேன்மை, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- புதன்**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 03**

**மீனம்** : (பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி) தொழில் கலக்கம், அன்னியர் உதவி, மன மகிழ்ச்சி, குடும்ப நன்மை, பிள்ளைகளால் மகிழ்ச்சி, உத்தியோகக் கவலை, மாணவர் கல்வி மேன்மை, விவசாயிகள், வியாபாரிகள் அற்ப இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- திங்கள்**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 01**


Regd. as a News Paper at the G.P.O.(QD/81/NEWS/2004)


**மாணிக்கங்கள்**



நேரில் வருபவர்களுக்கு மட்டுமே இந்தப் பாக்கியம்.
ஒவ்வொரு பிரச்சினைக்கும் அபூர்வமாகச்
செயற்படக்கூடிய அபூர்வ சக்தியுள்ள மாணிக்கக் கற்கள் உண்டு.
முதலில் ஜாதகக் கணிப்பைப் பார்வையிட்ட பின்னரே
தெய்வீக உரு செய்து கொடுக்கப்படும்.
தேவையானவர்கள் மட்டுமே நேரில் வரவும்.

பேராசிரியர். டாக்டர் பி.கே.சாமி J.D.G.A.N.JP
இல. 162 கொட்டாஞ்சேனை வீதி.
கொழும்பு — 13.
தொலைபேசி — 2342463, 2342464



**நிபுணத்துவ கைரேகை**




கைரேகை என்பது ஒரு கடல் போன்றது. அப்படியே அதை ஆராய்ச்சி செய்வதென்றால் ஆதி பராசக்தியின் அருட்கடாட்சம் வேண்டும். இக் கூற்றுக்கமைய உலக நாடுகளுக்கு சென்று கைரேகைக் கலையை அக்குவேறு ஆணிவேறாக அலசி ஆராய்ந்து நிபுணத்துவம் பெற்ற என்னைச் சந்தியுங்கள். உங்கள் கைரேகையை பார்த்துப் பலா பலனை தெரிந்து கொள்ள முன்னறிவித்தலுடன் வந்தால் கைரேகை வாசிக்க காலநேரம் கொடுக்கப்படும்.



Tel: 2344832
கே.கங்காதரன் (M.A) J.P.
162, கொட்டாஞ்சேனை வீதி, கொழும்பு-13.
Booking Time 4.00 p.m To 7.00 p.m Only


இந்தோ-பசுபிக் பிராந்தியத்தில் உள்ள மீன் இனங்களில் 'கிளீனர் ரேஸ்' வகையானது, மீன்களின் ஆரோக்கியத்திற்கு இன்றியமையாத சேவையைச் செய்கின்றது. இவ்வகை மீன்கள் மற்ற மீன்களின் தாடை, வாய், உடல் போன்றவற்றில் உள்ள ஒட்டுண்ணிகளைச் சுத்தம் செய்கின்றன. நீர் மட்டத்தின் கீழ் பாறைகளில் இவை 'சுத்திகரிப்பு நிலையங்களை' அமைத்துள்ளன.

பிற பிராணிகளைக் கொன்று தின்னும் பெரிய மீன்களுக்கும் இவை சேவை செய்கின்றன. சில சமயங்களில் அவற்றின் வாய்க்குள்ளும் சென்று சுத்தமாக்கும் சேவையை மேற்கொள்கின்றன.




17 வயதான டெனிஸ் வீராங்கனை, விம்பிள்டன் போட்டியில் பிரபல டெனிஸ் வீராங்கனையான ஷெரீனா வில்லியம்ஸை தோற்கடித்தார். முதன்முறையாக கிராண்ட்ஸ்லாம் பட்டத்தைப் பெற்றிருக்கும் இவர், ரஷ்ய நாட்டில் பிறந்து 7 வயதில் பெற்றோருடன் அமெரிக்காவிற்குக் குடிபெயர்ந்தவராவார். இவரது பெயர் மரியான். 6 அடி உயரமான அழகியுமாவார். பிரபல விளம்பர நிறுவனங்கள் இவரை விளம்பரங்களுக்காக அணுகி வருகின்றன. விம்பிள்டன் பெற்றுத் தந்த வெற்றி, கோடிக் கணக்கான வருமானம் கிடைக்க வழிவகுத்துள்ளது. அழகும் திறமையும் ஒருங்கே பெற்றவருக்கு எல்லாம் வெற்றிதான்.



# வெற்றிக் கிண்ணம்

கிரேக்கத்தின் தலைநகர் ஏதென்ஸில் ஆரம்பித்துள்ள 28ஆவது ஒலிம்பிக் போட்டி, பிரமிப்புகளும் ஆச்சரியங்களும் நிறைந்து காணப்படுகிறது. அந்த நாட்டின் தேசியத் திருவிழாவாகவும் கொண்டாடுகிறார்கள். பெருந்தொகையான பணத்தைச் செலவழித்து பாதுகாப்பைப் பலப்படுத்தியுள்ளனர். ஏதென்ஸ் நகரைப் பாதுகாப்பதற்காக பிரத்தியேகமாக மின்னனு பாதுகாப்பு வலையமைப்பு செய்யப்பட்டுள்ளது. ஏதென்ஸ் நகரத்தின் பாதுகாப்புக்கு மட்டும் 13,0000 கோடி ரூபா செலவிடப்பட்டுள்ளது. மேலும் 2,872 கோடி ரூபா செலவில் மின்னனு பாதுகாப்பினை அமைப்பதற்காக அமெரிக்காவின் சென்டிஜினோவைச் சேர்ந்த சயன்ஸ் அப்பிலிகேஷன்ஸ் இன்டர்நெஷனல் நிறுவனம் ஏற்பாடுகளைச் செய்து முடித்துள்ளது. மெல்லிய ஒலியைக் கூடப் பதிவு செய்யும் கருவிகள் உட்பட, அதி துல்லியமான கதிரியக்கக் கெமராக்கள் ஆயிரம், 12 ரோந்துப் படகுகள், நான்காயிரம் வாகனங்கள், ஒன்பது ஹெலிகொப்டர்கள், சென்ஸார்கள் பொருத்தப்பட்ட வேவு விமானங்கள், நான்கு கண்காணிப்பு மையங்கள் என பிரமாண்டமாகப் பாதுகாப்பு வலையமைப்பு செய்யப்பட்டுள்ளது. இவற்றில் மிகக் குறிப்பாக வாகன நெரிசல், ஒருவருக்கு மேற்பட்ட நபர்கள் கூடிக் கதைத்தல் என்பன மிகவும் அவதானமாகக் கண்காணிக்கப்படுகிறது. 500 விமானங்களில் 75,000 பேர் ஒரே நாளில் ஏதென்ஸ் நகரத்திற்கு வந்து சாதனை படைத்துள்ளனர். 10,500 வீரர்கள், 5,500 அதிகாரிகள், 21,500 பத்திரிகையாளர்களென பிரபலங்கள் நிறைந்து காணப்படுகின்றது. இந் நிகழ்ச்சிகளை ஒரே நேரத்தில் 70,000 பார்வையாளர்கள் இருந்து பார்க்க முடியும். அசம்பாவிதங்கள் எதுவும் நடைபெற்றால் 17 நிமிடங்களில் 70,000 பேரும் வெளியேறவும் முடியும்.




(ஏதென்ஸ் வீதியில் பொருத்தப்பட்டுள்ள பாதுகாப்புக் கெமரா.)



(ஒலிம்பிக் தீபம் கிரீஸ் நாட்டைச் சென்றடைந்தபோது...)

இதைப் பற்றிய மேலும் சில சுவாரசியமான தகவல்களைப் பெற 22ஆம் பக்கத்தை புரட்டுங்கள்.



(விளையாட்டுப் போட்டி நடைபெறவுள்ள அரங்கின் மேல் கூரை திறந்து மூடக்கூடியது.)

# ஏதென்ஸ்

## 2ஆவது பிறந்தநாள் வாழ்த்து

லண்டனில் வசிக்கும் திரு. சுதர்சன் (சுதா-புங்குடுதீவு-07)-சிவலோஜினி (சுஜி-பூநகரி) தம்பதியினரின் செல்வப் புதல்வி அபினா தனது இரண்டாவது பிறந்ததினத்தை 28.08.2004 லண்டனில் அவரது இல்லத்தில் வெகு சிறப்பாகக் கொண்டாடுகிறார். இவரை அன்பு அப்பா-ஆசை அம்மா, கொழும்பு அம்மம்மா பூநகரி தாத்தா, அம்மம்மா, சொருபன் மாமா, ஜேர்மன் ரகு சித்தப்பா, ஷோபா சித்தி, லண்டன் சுகி சித்தப்பா, பிரான்ஸ் பாலா பெரியப்பா, யசோ பெரியம்மா, சுலக்சன் அண்ணா, றெசினா அக்கா, றெக்சன் அண்ணா, லண்டன் பெரியமாமா உதயா அத்தை, சாரிசன் மச்சான் கனடா ராசி பெரியப்பா, சசி அன்ரி, ரஜீவன் அண்ணா, தங்கை வைஸ்ணவி மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் எங்கள் அபி குட்டியை புங்குடுதீவு பாணாவிடை சிவன் அருள் பெற்று சீரும் சிறப்புடன் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள். அத்தோடு அபினாவின் பெற்றோர் தங்கள் மூன்றாவது திருமண நாளையும் கொண்டாடுகிறார்கள்.

தகவல்:
அப்பம்மா- ராணி கந்தசாமி
113, ஜிந்துப்பிட்டி றோட், கொழும்பு-13.



செல்வி அபினா சுதர்சன்
2004.08.15